Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை (28-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:123








யாழ். பல்கலைக் கழகத்தின் 23 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் வெகு கோலாகலமாக நடைபெற்றது. காலை 9 மணிக்கு ஆரம்பமான பட்டமளிப்பு விழா தொடர்ந்து 6 அமர்வுகளாக நடைபெற்று முடிந்தது. யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய பட்டங்களை வழங்கினார். பட்டங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் வேந்தரின் காலில் விழ்ந்து ஆசிபெற்றுக் கொண்டனர். அரங்கில் இருந்தவர்களை உணர்ச்சியூட்டும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது. நீண்ட காலத்தின் பின் இம்முறை பட்டமளிப்புவிழா வேந்தரின் தலைமையில் நடைபெற்றது.

# பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது மகேஸ்வரன் மீது துப்பாக்கிச் சூடு!

## கொழும்பு ஜிந்துப்பிட்டியில் நேற்றுமாலை சம்பவம்

கொழும்பு,மார்ச்28

**முன்னாள் இந்துகலாசார அமைச்சரும் ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான தியாகராசா மகேஸ்வரன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுடப்பட்டார்.**

**கொழும்பு ஜிந்துப்பிட்டியில் நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மகேஸ்வரன் காதிலும் தோள்பட்டையிலும் காயமடைந்தார். அவரைச் சுட்ட நபர் தப்பியோடிவிட்டார்.**

கொழும்பில் ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள தம்மையா சத்திரத்தில் ஆதரவாளர்களிடையே நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் மகேஸ்வரன் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

அதன்பின்னர் தமது ஆதரவாளர்கள் சகிதம் அவர் அந்தப் பகுதியில் பிரசாரப் பணியில் ஈடுபட்டார். ஆதரவாளர்கள் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர்.

அங்கிருந்து நடந்து விவேகானந்தா மேட்டுப் பக்கம் நோக்கி அவர் நடந்து பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் „மெலிபன் பிஸ்கட்' நிறுவனத்துக்கு முன்பாகச் சந்தியில் மாலையுடன் ஒருவர் நின்றார்.

மகேஸ்வரன் குனிந்து மாலையை ஏற்று அவருக்குக் கைலாகு கொடுத்த சமயம் அவருக்கு அருகில் நின்றவாறு இனந்தெரியாத ஒருவர் இரு வேட்டுக்களை மகேஸ்வரன் மீது தீத்து விட்டுத் தப்பி ஓடிவிட்டார். அந்த நபரை மகேஸ்வரனின் மெய்ப்பாது காவலர் துரத்திச்சென்ற போதும் அவர் மறைந்துவிட்டார் எனக் கூறப்பட்டது.

(20ஆம் பக்கம் பார்க்க)

விசைப்படகு மோதிய சம்பவம்

## காணாமற்போன மீனவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது

வடமராட்சி,மார்ச்28

வடமராட்சிக் கடலில் கடற்படை விசைப்படகு ஒன்று மீனவர் படகை மோதிப் பிளந்ததாகக் கூறப்படும் சம்பவத்தில் காணாமற்போன மீனவரின் சடலம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு மீட்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மீன்பிடிப் படகு மீது கடற்படை விசைப்படகு மோதியது. இச் சம்பவத்தில் காணாமற்போன மீனவரைத் தேடும்பணி நேற்றும் மேற்கொள்ளப்பட்டது.

காணாமற்போன மீனவரான எஸ். ஜெயசிங்கம் (வயது 35) என்பவரின் சடலமே நேற்று மீட்கப்பட்டது.

சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

(ம-3-70-173)

## ஐ.தே.மு. – சு. முன்னணி ஆதரவாளர்கள் மோதல்

### 3 பொலீஸார் படுகாயம்

கொழும்பு,மார்ச்28

களுத்துறையில் நேற்று மாலை ஐதே.முன்னணி ஆதரவாளர்களுக்கும் சு.கட்சி - ஜே.வி.பி. இணைந்த சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையில் நடந்த மோதலில் மூன்று பொலீஸார் படுகாயம் அடைந்தனர்.

இருதரப்பினரும் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் மோதல் உருவானது என்றும் -

பொலீஸார் மோதலைத் தடுக்க முயன்ற சமயம் தாக்குதலுக்கு உள்ளாகினர் என்றும் - கூறப்பட்டது.

காயமடைந்த பொலீஸார் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் எதிரொலியாக சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டணி அலுவலகம் தாக்கப்பட்டு, அங்கிருந்த தளபாடங்கள் சேதமாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

### ஈ.பி.டி.பி. வேட்பாளர் சங்கரனை நோக்கிச் சூடு

கொழும்பு,மார்ச்28

ஈ.பி.டி.பியின் தேசிய பட்டியல் வேட்பாளர் ஆர்.கே.சங்கரன் என்பவர் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் கொழும்பு வெள்ளவத்தையில் வைத்துச் சுடப்பட்டார். எனினும் அவர் மயிரிழையில் தப்பிவிட்டார் என்று கூறப்பட்டது.

வெள்ளவத்தை மல்லிகா லேனில் உள்ள தமது வீட்டில் இருந்து வெளியே வந்த இவர் தமது ஓட்டோவில் ஏற முயன்ற சமயம் அவரை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

குண்டுகளிலிருந்து மயிரிழையில் தப்பிய அவர் ஓட்டோவில் ஏறித தப்பி விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

## மட்டக்களப்பில் நேற்றுமாலை அரசாங்க அதிபர் சுடப்பட்டார்

மட்டக்களப்பு,மார்ச்28

மட்டக்களப்பு அரச அதிபரான கே.மோனகுருசாமி (வயது 63) நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டார்.

மட்டக்களப்பு - திருமலை வீதியில் பிள்ளையாரடி என்னும் இடத்தில் அவர் தனது அலுவலக வாகனத்தில் சென்றுகொண்டிருந்த சமயமே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இடது காதுப்பக்கத்திலும், கழுத்துப் பகுதியிலும் காயங்களுக்கு உள்ளான அவர் உடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அவருடன் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த மாங்கேணி பிரதேச கிராம சேவையாளர் எஸ் ராஜன் என்பவரும் சம்பவத்தில் காயம் அடைந்தார். அவருக்குக் கையில் காயம் ஏற்பட்டது.

அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அரச அதிபர் ஹெலி மூலம் நேற்றிரவு கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டார். அவரது நிலை கவலையளிப்பதாகவே இருக்கின்றது என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிலில் வந்த இருவர் மூன்று சூடுகளை அரச அதிபர் மீது பிரயோகித்து விட்டுத் தப்பி ஓடிவிட்டனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ம-3-21)

## முகமாலையில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி செவ்வாய், புதன்கிழமைகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்28

கிளிநொச்சி மாவட்டம் மற்றும் மருதங்கேணிப் பிரதேச வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்களை முகமாலையில் அமைக்கும் பணிகள் எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமையில் இடம்பெறுகின்றன. யாழ். செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் நிலையங்கள் போன்று வாக்களிப்பு நிலையக் கொட்டில்கள் அமைக்கும் பணி இரு தினங்களும் இடம்பெறும் என்றும்-

இந்தப் பணி காரணமாக ஏ-9 வீதி ஊடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்படமாட்டா என்றும்- அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.


பளை, கொடிகாமம் ப.நோ.கூ.சங்கங்களும் திருநெல்வேலி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் வாக்காளர் நலன்கருதி முகமாலையில் சிற்றுண்டிச்சாலைகளை அமைக்க இருக்கின்றன. வாக்காளர்களுக்கு குடி தண்ணீர் வழங்க விசேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை- ஓமந்தைப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி எதிர்வரும் முதலாம் திகதி நண்பகல் ஆரம்பிக்கப்படும்.

(20ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தாய்வானில் 3 லட்சம் பேர் நேற்று அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



வாஷிங்ரன்,மார்ச்28

தாய்வானில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் புதிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி உள்ளனர். தலைநகரில் அதிபர் மாளிகைக்கு முன்பாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 3 லட்சம் வரையிலானோர் கலந்து கொண்டனர்.

கடந்த வாரம் நடந்த தேர்தலில் அதிபர் சென் சூயி-பியன் கொஞ்ச வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். இதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியான எதிர்ப்பைக் காட்டி வருகின்றன.

தேர்தலில் அதிபர் வெற்றி பெற்றமை உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நாளின் பின்னர் நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

அதிபருக்கு எதிரான போராட்டங்கள் தொடரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமையன்று தேர்தல் அதிகாரிகளுடனும் பொலீஸாருடனும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மோதல்களில் ஈடுபட்டனர்.

தேர்தலில் அதிபர் ஷென் வெறும் 0.2 வீத வாக்குகளை அதிகமாகப் பெற்றே வெற்றி பெற்றிருந்தார். தேர்தலுக்கு ஓரிரு நாள்கள் இருக்கையில் அவர் மீது நடத்தப்பட்ட கொலை முயற்சி தேர்தல் முடிவை திசை திருப்பிவிட்டன என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. எனவே மீண்டும் வாக்குகள் எண்ணப்படவேண்டும் என்று அவை கோருகின்றன.

தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் லீன் தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டங்கள் தொடர்வதை அடுத்து தலைநகருக்கு மேலதிகப் பொலீஸார் வரவழைக்கப்பட்டனர். (ம)

# இனி நாடாளுமன்றம் செல்லமாட்டேன்!

## வைகோ தெரிவிப்பு

சென்னை,மார்ச்28

இனி எப்போதும் நாடாளுமன்றத்துக்குச் செல்லப்போவதில்லை என்று அறிவித்துள்ளார் மதிமுக செயலாளர் வைகோ.

கோவையில் கட்சியின் தேர்தல் அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறையில் இருந்தபோது திராவிட இயக்கத்துக்குப் புத்துணர்வு கொடுப்பது குறித்துச் சிந்தித்துக்கொண்டு இருந்தேன். இனி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அப்போதே முடிவு செய்துவிட்டேன். பதவியில் இருந்துதான் ஒரு இயக்கத்தை நடத்த வேண்டும் என்பது கிடையாது. என்னைவிட இளமையானவர்கள், திறமைசாலிகள் பதவிக்கு வருவார்கள் என்றார் அவர்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்தால் அதைக் கொச்சைப்படுத்த ஒரு கூட்டம் தயாராக இருந்தது. அதனால் வெளியே வர நான் விரும்பவில்லை. தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று திமுக தலைவர் மு.கருணாநிதி கேட்டுக்கொண்டதால்தான் வெளியே வந்தேன்.

இனிமேல் எப்போதுமே நாடாளுமன்றம் போவதில்லை என்று முடிவு செய்துவிட்டேன். 24 ஆண்டுகள் அங்கு சென்று நிறையவே சாதித்துவிட்டேன்

வைகோ என்ன சாதித்துவிட்டார் என்று பத்திரிகைகளைப் படிக்காதவர்கள் கேட்கின்றனர். எழுதிக் கொடுக்கப்பட்டவற்றை மேடையில் பேசுகிறவர்களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியுமா? - என்று வைகோ தெரிவித்தார். (ம)

# தேர்தலில் பிரியங்காவுக்கு நடிகை விஜயசாந்தி போட்டி

ஹைதராபாத்,மார்ச்28

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா காந்தி தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு எதிராக நடிகை விஜயசாந்தியை தேர்தலில் நிறுத்த பாரதீய ஜனதாக் கட்சி பரிசீலித்து வருகிறது.

ஏற்கனவே ராஜீவின் மகன் ராகுல் காந்தி தேர்தலில் போட்டியிடுகிறார். அதேபோன்று கர்நாடக மாநிலத்தின் பெல்லாரி தொகுதியில் பிரியங்கா காந்தியையும் களம் இறக்க காங்கிரஸ் கட்சி தீர்மானித்திருக்கின்றது என்று தெரிகின்றது.

காந்தி குடும்ப வாரிசு என்ற நிலையில் அவருக்கு பெரியளவில் ஆதரவு இருக்கிறது. இதனை எதிர்த்து முறியடிப்பதற்கு அதிரடி நடிகை விஜயசாந்திதான் சரியான வேட்பாளர் என்று கர்நாடக மாநில பா.ஜ.காவினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்காக மாநில பா.ஜ.காவினர் நடிகை விஜயசாந்தியையும் கட்சியின் மேலிடத்தையும் நாடியுள்ளனர்.

அதேசமயம் -

பாரதீய ஜனதாக் கட்சியின் மகளிர் அணித் துணைத் தலைவியான நடிகை விஜயசாந்தி ஹைதராபாத் தொகுதியில் போட்டியிடுவதற்கு முடிவாகியுள்ளது. அங்கு பலம்வாய்ந்த முஸ்லிம் கட்சி வேட்பாளருக்கு எதிராக அவர் நிறுத்தப்பட்டுள்ளார்.

ஆனால், பெல்லாரி தொகுதியில் பிரியங்கா காந்தி நிறுத்தப்பட்டால் அவரை எதிர்த்தும் விஜயசாந்தி நிறுத்தப்படுவார் என்று தெரிகின்றது. அவரை இரு தொகுதிகளிலும் போட்டியிட வைப்பது குறித்து பா.ஜ.க மேலிடம் தற்போது ஆராய்ந்து வருகிறது.(ம)

## ஹமாஸ் தலைவர் மீதான தாக்குதல்:

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானத்துக்கு அமெ. எதிர்ப்பு

நியூயோர்க்,மார்ச்28

பலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்க ஆன்மீகத் தலைவர் ஷேக் அஹமது யாசீன் இஸ்ரேலினால் கொல்லப்பட்டதைக் கண்டித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அல்ஜீரியா தீர்மானம் கொண்டு வந்தது. அதனை தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா ரத்துச் செய்துவிட்டது.

15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பிரிட்டன், ஜேர்மனி, ருமேனியா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. சீனா, ரஷ்யா, பிரான்ஸ், அங்கோலா, சிலி, பாகிஸ்தான், ஸ்பெயின், அல்ஜீரியா, பிரேஸில், பிலிப்பைன்ஸ், லிபியா ஆகிய நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

வாக்கெடுப்புக்கு முன்னர் பேசிய அமெரிக்கத் தூதர் ஜோன் நீக்ரோபண்டி, இஸ்ரேலின் நடவடிக்கையானது இந்தப் பிராந்தியத்திலும் காஸாவிலும் பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. இதனால் அமைதி முயற்சிக்கு பின்னடைவு ஏற்படும் என்பது உண்மையே. ஆனால், இந்தத் தீர்மானம் ஒரு தரப்புக்கு ஆதரவாக இருக்கிறது. அது நடுநிலையாக இல்லை. ஹமாஸ் அமைப்பினரின் பயங்கரவாதச் செயல்கள் பற்றி வாய்திறக்கவே இல்லை - என்று தெரிவித்தார்.

வாக்கெடுப்புக்குப் பின்னர் இஸ்ரேலும் பலஸ்தீனமும் பரஸ்பரம் கடும் சொற்பிரயோகங்களை மேற்கொண்டன. ஹமாஸ் அமைப்புடன் கைகோர்த்துக்கொண்டு பலஸ்தீனர்கள் செயற்படுவது தனி நாடு அமைக்கும் சர்வதேச முயற்சியைப் பலவீனப்படுத்திவிடும் என்று பாதுகாப்புச் சபையின் இஸ்ரேலியப் பிரதிநிதி கில்லர்மன் தெரிவித்தார். தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்த ஸ்பெயினுக்கும் அவர் கண்டனம் தெரிவித்தார். (ம)

## தாய்வானில் குண்டு வெடிப்பு

பாங்கொக்,மார்ச்28

தாய்லாந்தின் தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது 30 பேர் காயமடைந்தனர். மலேஷியாவுடனான எல்லைப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்தது. இந்தப் பகுதியில் கடந்த ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் 50 பேர்வரையிலானோர் உயிரிழந்தனர். மோட்டார் சைக்கிள் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்தது என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

# சதாமைக் காட்டிக் கொடுத்தவர் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர்!

பக்தாத்,மார்ச்28

ஈராக்கில் பதவி கவிழ்க்கப்பட்ட இராணுவ ஆட்சியாளர் சதாம் ஹுசைனைக் காட்டிக் கொடுத்தவர்களில் ஒருவர் அவரது நெருங்கிய சகாவும் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவராகவும விளங்கியவர் என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

பி.பி.ஸியின் 'பனோரமா' என்ற நிகழ்ச்சியில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 8 மாதங்களாகத் தொடர்ந்துவரும் இந்த நிகழ்ச்சியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.பி.ஸியில் ஒளிபரப்பாக உள்ளது. சாதாமைக் காட்டிக் கொடுத்த மெய்ப்பாதுகாவலர் பற்றிய விவரங்கள் காண்பிக்கப்படும்.

மெஹமட் இப்ராஹிம் ஓமர் அல்-முஸ்லிட் என்ற பெயருடைய சாதாமின் மெய்ப்பாதுகாவலரே அவரைக் காட்டிக் கொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சதாம் அவருடைய சொந்தக் கிராமமான திக்ரிட்டுக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் இருந்து கடந்த டிசெம்பர் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

முஸலி அமெரிக்கா இராணவத்துடன் இணைந்து செயற்பட்டார் என்று கூறப்படுகின்றது. சதாம் மறைந்திருந்த பண்ணையை அமெரிக்கப் படையினருக்குக் காட்டிக் கொடுத்தது இவர்தான் என்றும் -

சதாம் கைது செய்யப்படுவதற்கு ஒரு மணிநேரம் முன்னர் வரை அவர் அமெரிக்கப் படையினருக்குத் தலைமைதாங்கிச் சென்றார் என்றும் - கூறப்படுகின்றது.

சதாம் மறைந்திருந்த பண்ணைக் கட்டடத்தில் 600 அமெரிக்கப் படையினர் தேடுதல்களை நடத்திய போதும் அவர்களால் ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், முஸலிதான் அவர் மறைந்திருந்த நிலச் சுரங்க அறையைக் கண்டுபிடித்துக் காட்டிக் கொடுத்தார். அமெரிக்கா அறிவித்த 2கோடி 50 லட்சம் டொலர் பரிசுத் தொகைக்கு ஆசைப்பட்டே அவர் சதாமைக் காட்டிக் கொடுத்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அமெரிக்க தளபதி மேஜர் ஜெனரல் ரே ஒடிர்னோ இதனை மறுத்தார். (ம)

## 305 அடி உயரத்தில் ஆபிரகாம் லிங்கனுக்கு சிலை அமைப்பு!

நியூயோர்க்,மார்ச்29

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கனுக்கு 305 அடி உயரத்தில் ஒரு சிலை அமைக்கப்படவுள்ளது. லிங்காயின் நகரில் இந்தச் சிலை அமைக்கப்பட உள்ளது.

அமெரிக்கா உலகின் சிறந்த ஜனநாயக நாடாக மாறுவதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்களுள் ஒருவர் ஆபிரகாம் லிங்கன்.

அவரது உருவச் சிலையின் மாதிரி அமைக்கப்பட்டு விட்டது. 20 அடி தூரத்தில் நின்றாலும் அனைவரும் பார்க்கும் விதத்தில் இந்தச் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. (ம)



ஈராக்கின் வடக்கு நகரமான மோசுலில் உள்ளூர் அரச நிறுவனக் கட்டடம் ஒன்று ரொக்கெட் தாக்குதலுக்கு உள்ளானதில் நால்வர் கொல்லப்பட்டனர். மேலும் 19 பேர் காயமடைந்தனர். மாகாண ஆளுநர் அலுவலகமே தாக்குதலுக்கு இலக்கானது. உயிரிழந்தவர்களில் 13 வயதுச் சிறுமி ஒருத்தியும் உள்ளடங்குவார்.

மூன்று ரொக்கெட்டுக்கள் கட்டடத்தைத் தாக்கி வெடித்தன என்று பொலீஸார் தெரிவித்தனர். தாக்குதல் நடந்த போது ஆளுநர் அந்தக் கட்டத்தில் இருக்கவில்லை. தாக்குதலின் பின்னர் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட் ஏவுகருவி ஒன்றைப் பொலீஸார் அருகிலுள்ள ஓரிடத்திலிருந்து கைபற்றினர். ஆனால், எவரும் கைது செய்யப்படவில்லை.


அதேவேளை -

மத்திய பக்தாத்திலும் நேற்று குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் 5 ஈராக்கியர்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஓட்டோ ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்தது என்று அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர். இங்கே, படத்தில் மோசுலில் காயமடைந்த ஒருவர்.

# சைபிரஸ் பகுதிகளின் ஒன்றிணைப்பு; பேச்சுக்களில் அனான் பங்குபற்றுவார்!

சைபிரஸ் நாட்டை மீண்டும் ஒன்றிணைப்பது தொடர்பான முக்கிய பேச்சுக்களில் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் கலந்துகொள்ளவுள்ளார்.

சுவிற்சர்லாந்திலுள்ள மலை வாசஸ்தலம் ஒன்றில் கிரேக்கப் பகுதி சைபிரஸ் மற்றும் துருக்கிப் பகுதி சைபிரஸ் ஆகியவற்றின் சமாதான அனுசரணையாளர்களையும் கிரேக்க மற்றும் துருக்கி நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களையும் அனான் சந்தித்துப் பேச உள்ளார்.



இந்த மாத இறுதிக்குள் இரு சைபிரஸ்களும் மீண்டும் ஒன்றிணைவது தொடர்பாகத் தீர்வு ஒன்று எட்டப்படாவிட்டால் கிரேக்கப் பகுதி சைப்பிரஸ் மட்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய முடியும்.

இதுதொடர்பாகத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக ஞாயிற்றுக்கிழமை கிரேக்க மற்றும் துருக்கிப் பிரதமர்கள் பேச்சில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

சைபிரஸை மீண்டும் இணைப்பது தொடர்பான பேச்சுக்கள் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகின. இணைப்புக்கான புதிய திட்டம் தொடர்பாக துருக்கித் தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தமையால் பேச்சுக்கள் ஆட்டம் கண்டன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக இது தொடர்பாக முன்னேற்றம் ஏதும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எவையும் தென்படவில்லை.

இந்த மாத இறுதிக்குள் இந்தப் பேச்சுக்களில் தீர்வு ஒன்று காணப்படாவிட்டால் கோபி அனான் அதற்கான முயற்சியில் இறங்குவார்.

ஏப்ரல் 20ஆம் திகதி இரு பகுதி சைபிரஸூம் ஒன்றிணைவதற்கான சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும். இதில் எந்த ஒரு பகுதியும் இணைவதற்கு எதிராக வாக்களித்தால் இரு பகுதிகளும் ஒருபோதும் இணைக்கப்படமாட்டா. அவ்வாறு இணைக்கப்படாவிட்டால் கிரேக்கப் பகுதி சைபிரஸ் மட்டும் மே முதலாம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து கொள்ளும்.

| | | | |
|---|---|---|---|
| சூ., புத. | வெ., ராகு | செவ். | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 28-03-2004 - 03-04-2004

### மாற்றம்

28.03.2004 இல் மிருகசீரிடம் 4ஆம் பாதம் மிதுன ராசியில் சந்திரன் நிற்கும். 29.03.2004இல் வெள்ளி இடபராசிக்கு மாறும்.

தேர்தலில் வடக்கில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெருவெற்றி அடையும். விடுதலைப்புலிகளுக்கு மக்கள் ஆதரவு பெருகும். தெற்கில் கடும்போட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டணியா, யு.என்.பி.கூட்டணியா எனப்போட்டிஇருந்தாலும் யானைக்கு மக்கள் ஆதரவு அளிப்பார்கள். அரசியல் வெற்றியில் ஒரு தொகுதிநிலை தோன்றி, இடைக்கிடை கலகம், அபிப்பிராய பேதங்கள் தோன்றும். சித்திரைமாதம் திட்டமிட்ட குழப்ப நிலை தோன்றி அந்நியசக்திகள் ஊடுருவ இடம் உண்டு. மத்திய கிழக்கில் இஸ்ரேல் - பலஸ்தீனப்பகுதியில் அழிவுகள் தொடர இடம் உண்டு. இந்துசமுத்திர, அரபிக்கடல் பகுதிகளில் வெப்ப நிலை அதிகரித்து நோய் நொடிகள் தோன்ற இடமுண்டு. எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கற்பனை அதிகம் காலத்திற்குத் தகுந்தமாதிரி உங்கள் நிலையை மாற்றிக்கொள்வீர்கள். இடமாற்றம், காணி பூமி சம்பந்தமாக ஓடியாடித்திரிவீர்கள். அதிக யோசனை, தலைசம்பந்தமான வருத்தம், வீடு, வாகன சம்பந்தமான அலுவல்களில் செயற்பாடுகள், நண்பர்களை நம்பமுடியாது. தொழில்ஸ்தானத்து மேல்அதிகாரிகளுடன் கருத்துவேற்றுமை வரும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். சட்டத்துறையினர்களும் நன்மை அடைவர். ஆசிரியர், அரசியல் வாதிகளும் நன்மையடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன் (காலை), வெள்ளி (மத்தியானம்)*

### இடபம்

பொறுமையாக இருக்கவும். திடீர்களவுகள்போகலாம். கௌரவத்திற்கு சோதனைவரும். அடிக்கடி கோபம், அதனால் எல்ரோரையும் பேசுவீர்கள். இடமாற்றம் சிலருக்கு வரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். தூரதேசம் செல்வதைத் தாமதமாக்கவும். முழங்கால் உழைவு, களைப்பு, உஷ்ணவியாதிகள் என்பன வர இடமுண்டு. கம்பியூட்டர், குருத்துறை, சமயத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நர்ள்கள்:- திங்கள், புதன் (காலை), வெள்ளி (மத்தியானம்)*

### மிதுனம்

கதைத்துக் கதைத்து காரிய மாற்றுவீர்கள். வீடுவாகனங்கள் கிடைக்கும். பொருள்வரவு ஏற்படும். எதிர்ப்பாலாரால் பொருள் இழப்புக்கொடுக்கும். வயிற்று ரோகம், வாய்வு, உஷ்ணபீடைகள் கொடுக்கும் காலமாகும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். போக்குவரத்துத்துறை, குருத்துறை, இசைத்துறை சம்பாந்தமான தொழில் தொடர்புடையவர்கள் நன்மையடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- வெள்ளி, சனி (மத்தியானம்).*

### கடகம்

அரசியலில் புயல். அடிக்கடி பிரச்சினைகள், அவதானமாகச் செயற்படுங்கள். பொருள் வரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். புதிய திட்டங்களைத் தொழில்ஸ்தானத்தில் செயற்படுத்துவீர்கள். கால்பகுதி, தொண்டை நோ, சலப் பகுதி வருத்தங்கள் கொடுக்கும். சகோதரங்கள் உதவி செய்வார்கள். அரசியல்துறை, சட்டத் துறை, சம்பந்தமானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

### சிங்கம்

வசீகரமாகப் பேசிக் கரும மாற்றுவீர்கள். தந்தைவழியினருக்கு நல்லதல்ல. சகோதரங்களுக்கு உதவிகள் செய்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். அரச உதவிகள், அரசியல்வாதிகளின் உதவிகள், மக்கள் செல்வாக்குச் சிறப்பும் அடைய இடம் உண்டு. தூரத்துப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். வியாபாரத்துறையினர், அரசியல் துறையினர், வங்கித்துறையினர் திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றி அடைவீர்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி.*

### கன்னி

பணவரவு உண்டு. புதிய நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். கலகத்தை விளைவித்து நன்மைகளை வெளிப்படுத்துவீர்கள். வீடு, வாகன யோகம், சுகம் அடைபவராயும், இடமாற்றங்களால் நன்மை அடைபவராயும் இருப்பர். சகோதரர்களுக்கு நன்மைகள் எற்படும். வயிற்று நோ, சளித் தொல்லைகள் எற்பட இடம் உண்டு. போக்குவரத்துத்துறை, கணனித்துறை, பத்திரிகைத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி.*

### துலாம்

அடிக்கடி கோபித்தபடி இருப்பீர்கள். பொருள் வரும். நண்பர்கள் உதவி செய்துதருவார்கள். இடமாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. கொடுத்தால் வராத காலமாகும். தூரதேசச் செய்திகளால் மன அமைதி இருக்காது. நாசி நோ, கை, கால்தாக்கம் கொடுக்கும். வாய்வுத் தொல்லைவரும். குருத்துறை, சட்டத்துறை, அரசியல்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி.*

### விருச்சிகம்

திட்டமிட்டது செயற்படாது கவலைப் படுவீர்கள். பணவரவு தாமதப்படும். இடமாற்றம் ஏற்படலாம். புதிய பொறுப்புக்களால் ஓடியாடித்திரிவீர்கள். பொருளில் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். கை, கால் உளைவு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். வியாபாரிகள், இயந்திரவல்லுநர், இரும்புத்துறையினர். அரசியல்வாதிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- சனி.*

### தனுசு

உறுதியான செயற்பாடுகள், பொருள்வரவு புதிய துறையிலிருந்து கொடுக்கும். சனிபார்வையால் இடைக்கிடையே வீண் பிரச்சினைகள் அயலவர்களுடனோ அல்லது நண்பர்களுடனோ ஏற்படஇடமுண்டு. மாமன் மச்சான் அல்லது சகலன் வழியினருடன் பேச்சுவார்த்தைகள் ஏற்படும். இடமாற்றம் சிலருக்கு திடீரென வரஇடமுண்டு. கண்டிப்பும், கருணையும் கொடுக்கும். நீங்கள் இடத்திற்கிடம் மாறுபட்டுச் செயற்படுவீர்கள். ஆசிரியர், வியாபாரிகள், சட்டத் துறையினர் நன்மை அடைவர்.

*அதிஷ்டநாள்: சனி*

### மகரம்

கருணையால் எதையும் சாதிக்கலாம். தொழில்பீடத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள். பணவரவு கொடுக்கும். மறைமுக எதிரிகளால் தொல்லைகள் ஏற்படும். அயலவர்கள் வீண் பிரச்சினை தருவார்கள். வீடு,மனை, காணி பூமியால் பிரச்சினைகள் வரும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். சந்தைத்துறை, வைத்தியத் துறை, பிரயாணத்துறை போன்ற துறைகள் தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிஷ்டநாள்கள்: சனி, வெள்ளி மத்தியானம்.*

### கும்பம்

உங்கள் செயற்பாடுகளில் தடைகள் ஏற்படும். இடமாற்றங்களால் நன்மைகள் கிடைக்கும். புதிய திட்டங்கள் மந்தமடையும். நீங்கள் தொடர்ந்து போராடியபடி இருப்பீர்கள். சகோதரங்களுக்கு நன்மைகள் கொடுக்கும். கால்வருத்தம், கைகால் பிடிப்பு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். புதிய நண்பர்கள் உதவி தருவர். குருத்துறை, அரசியல்துறை, சந்தைத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.


*அதிஷ்டநாள்: சனி*

### மீனம்

திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றி அடைவீர்கள். பலருக்கு உதவிகள் செய்து கொடுத்துப் புகழ் அடைவீர்கள். தொழில் துறையில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். சகோதரங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். வெளிநாட்டுச் செய்திகள் வரும். பழைய கடன் பாக்கிகள் வந்து கிடைக்க இடமுண்டு. குருத்துறையினர், அரசியல்துறை, மருந்துத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிஷ்டநாள்: சனி.*

**மகாதேவா ஜோதிடம்**



கடற்படையின் விசைப்படகு மோதியதில் படுகாயமடைந்த மீனவர்களைப் படத்தில் காணலாம். பருத்தித்துறை முனைக்கடற் பரப்பில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த எலியப்பு அன்ரன் (வயது-45-வலது), ஜோசப் அந்தோனிப்பிள்ளை (வயது-61-இடது) ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

*(படங்கள்: இ.சுந்தரலிங்கம் - கரவெட்டிச் செய்தியாளர்).*



# நாடகங்கள் பற்றிய தகவல்களை பரிமாற உதவும் 'கூத்தரங்கம்'

**நூல் வரிசை**

யாழ்ப்பாண செயல்திறன் அரங்க இயக்கம் "கூத்தரங்கம்" என்ற நாடகமும் அரங்கியலும் தொடர்பான தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கான ஏடு ஒன்றினை மார்ச் 2004 இல் இருந்து வெளியிடுகிறது. "திறந்த மனமொன்று வேண்டும்" என்பது இதன் மகுட வாக்கியமாகக் கொள்ளப்படுகின்றது.

தே.தேவானந்த், அ.விஜயநாதன், கு.லஷ்மணன், க.இ. கமலநாதன் ஆகியோர் இதன் ஆசிரியர் குழுவாக செயற்படுகிறார்கள்.

முதலாவது இதழ் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "கருத்துக்களின் சங்கமம் கலைஞர்களுக்கு மட்டுமல்ல அனைத்துத் துறையினருக்கும் அவசியம்" என்ற பிரதான செய்தியுடன் வெளிவந்துள்ளது.

'முடக்கம்' நாடக விமர்சனம், நாடகக்கலைஞர் S.T. அரசு பற்றிய தகவல்கள், தாவடி தெற்கு அம்பாள் நாடக மன்றம் பற்றிய அறிமுகம், நாடக நூல்கள் பற்றிய அறிமுகங்கள், ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு தேவையான சிறுவர் அரங்கு, வார்த்தைகளை நம்பி வாழும் கிராமிய நாடகங்கள், நெஞ்சுறுத்தும் கானல் நாடகத்தயாரிப்பில் பங்கு கொண்ட அனுபவம் போன்ற தலைப்புக்களிலான கட்டுரைகள் இந்த ஏட்டில் வெளிவந்துள்ளன.

தமிழ் அரங்க முயற்சிகள் சார்ந்த செய்திகளையும் தகவல்களையும் அரங்கத் துறையினர் மத்தியில் பகிர்ந்து கொள்வதை நோக்காகக் கொண்டு இந்த செய்திப்பரிமாற்ற ஏடு வெளிவருவதாக ஆசிரியர் குழுவினர் தெரிவித்துள்ளார்கள். கூத்தரங்கின் தொடர்ச்சியான இயங்கு நிலைக்கு உதவும் முகமாக ஊர்கள் தோறும் பிரதேசங்கள் தோறும் நடைபெறும் நாடக முயற்சிகள் தொடர்பான தகவல்களையும் அதில் ஈடுபடுவோர் தொடர்பானதகவல்களையும் தமக்கு அனுப்பி உதவுமாறு கூத்தரங்கின் ஆசிரியர் குழுவினர் கேட்டுக் கொள்கின்றார்கள். இத்தோடு, அரங்கத்துறை தொடர்பான நேர்காணல்கள், கட்டுரைகளை அரங்கத்துறை மாணவர்கள், அரங்கவியலாளர்கள் கூத்தரங்கிற்கு அனுப்பி வைக்கலாம். இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூத்தரங்கம் வெளிவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.





நாடகத் துறை மாணவர்களுக்கும் நாடகத்துறை ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இந்த ஏடு எதிர்காலத்தில் பயனுள்ளதாக அமையுமென்று நம்பலாம்.

# அளவெட்டியில் விரைவில் புதிய கலாசார மண்டபம்

வலி.தென்மேற்கு,மார்ச்28

வலிகாமம் வடக்கில் அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் கலாசார நிலையத்தில் புதிதாக கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இக்கலாசார மண்டபக் கட்டட நிர்மாணப்பணிகளுக்கென 30 லட்சம் ரூபா நிதியினை அரசாங்கம் ஒதுக்கீடுசெய்துள்ளது.

இக்கலாசார மண்டபத்தில் நுண் கலைகளான சங்கீதம், நடனம், நாடகம் மற்றும் ஓவியம் போன்றன பயிற்றுவிக்கப்பட உள்ளன. அத்துடன் யோகாசனம், தியானம் போன்றவற்றிலும் விசேட வகுப்புக்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன.

கலாசார மண்டபத்துக்கான கட்டட பூர்வாங்கவேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. விரைவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் - கட்டடம் கட்டி அமைக்கப்பட்டவுடன் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் எனவும் - ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள், கலாசார நிலையத் தலைவர் வை.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(ஐ-152)

# அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய லொறி. மூன்று மாதங்கள் தடுத்துவைப்பு

தென்மராட்சி,மார்ச்28

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த லொறி, சாவகச்சேரி நீதிமன்றினால் மூன்று மாதங்கள் தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்ததாக கொடிகாமம் பொலீஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான், மணலைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டதுடன் - லொறியினை மூன்று மாதங்கள் நீதிமன்ற வளவில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (எ-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், கண்ணாடி மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இரகுராமன் (ஹரி கடை), மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. (C/33834)

பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தியில் 1½ பரப்பு 9 குழியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.மகேந்திரராசா.T.P.: 0777 577 619. (30083)

யமஹா - 50 சொந்தப் பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு இல.12/9 புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் T.P. 0777 499757 (30135)

ஒரு கைப் பாவனையிலுள்ள MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு: தொடர்பு: 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (30148)

1½ மாதம் நிரம்பிய நல்ல இன Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30151)

நீர்வேலி மேற்குப் பகுதியில் கரந்தன் சந்திக்கு அருகில் கிணறு, மலசலகூட வசதிகளுடன் கூடிய வீடு (காணியுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சே.புலந்திரன், நீர்வேலி மேற்கு, நீர்வேலி. (30117)

சகல ஆவணங்களுடனும் நல்ல நிலையில் உள்ள வெஸ்பா 84 சிறி மரூன் கலர் ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P No.m, 226 3716 (பருத்தித்துறை). (30155)

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1 கிலோ 110/=, சுத்தம்செய்தல் இலவசம். சுத்தம்செய்து வேண டியநிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். P.ரவி, தபாற்கந்தோர் அருகில் சாவகச்சேரி. (30080)

நல்ல தரமான Prima Broiler குஞ்சுகள் (ரூபா 40/-), அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் (ரூபா 60) 29.03.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29837)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30152)

வளர்ந்த அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (30153)

## தேவை

அல்வாயில் வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலை செய்வதற்கு நற்குணம் வாய்ந்த பெண் ஒருவர் (வயோதிபக் குடும்பம்) தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: மு.சுப்பிரமணியம் இலகடி, அல்வாய். T.P. 077 6171491. (சி-34122)

கிளிநொச்சியில் இருந்து முருகண்டி வரை பிரதான வீதியில் அல்லது அதை அண்டிய பகுதியில் காணி தேவை. தொடர்பு: கு.ரஞ்சன், 25/5, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா. T.P 024 222 2101. (30138)

## தவறிவிட்டது

இல.115, பொன்னம்பலம் வீதி, அரியாலையைச் சேர்ந்த அருளானந்தம் பேட்டின் ரஞ்சித் என்பவரது காப்புறுதிப் பத்திரம் (உழவு இயந்திரம் 49-9058), வரிப்பத்திரம் என்பன இராஜபாதை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: இல. 42, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (C/30144)

மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு ஒன்று (இல.NPGA 8711) நாசசிமார் கோயிலடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முருகையா G.S. மஞ்சத்தடி, இணுவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (30137)

## திருமண சேவை

எம்பிடம் டாக்டர், எஞ்சினியர், அரச தனியார் துறைசார்ந்த வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற நல்ல பணியில் இருக்கும் மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், வைகுந்த ஆச்சிரமம் 68/15, சட்டநாதர் வீதி, (சமுர்த்தி வங்கி அருகில்) நல்லூர் (30154)

1968ஆம் ஆண்டு, விசாகம், செவ்வாயற்ற, பயிற்றப்பட்ட ஆசிரியர் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (30147)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 34 வயதுடைய, செவ்வாய் தோசமற்ற MBBS டாக்டருக்கு அழகிய கல்வியறிவுள்ள மணப்பெண் தேவை. பூரண விவரங்கள் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.2208 மே/பா உதயன். (30150)

**BIOLOGY - PIOLOT TEST -2004 A/L**

உயிரியல் முன்னோடிப்பரீட்சைகள் மார்ச், ஏப்ரல் இரு பரீட்சைகள் நடைபெறும். வினாத்தாள்- Marking Scheme பெற்றுக்கொள்ள பரீட்சைக்கட்டணம் 50/= தபால் உறையுடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**R.EASVARATHASAN** (HINDU COLLEGE)
69, WA SILVA MW, WELLAWATTE
(37-18-14-) COL-06. (2559803) (சி33785)

## திருப்பாடுகளின் காட்சி இசை நாடகம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

நாவாந்துறை பங்கு மக்கள் வழங்கும் 'கல்வாரி கண்ட கடவுள்' என்னும் திருப்பாடுகளின் காட்சி கொண்ட பக்தி, இசை, உரை நாடகம் நாளை திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமையும் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய மைதானத்தில் மாலை 7 மணிக்கு நடைபெறும். 150 அடி நீள, அகல மேடையில் இடம்பெறும் இந்நாடகத்தில் 200 இற்கும் அதிகமான கலைஞர்கள் பங்கு கொள்கின்றனர்.

பங்குத் தந்தை அருட்திரு எம். எக்ஸ்.கருணாரெட்ணம் அடிகளின் தயாரிப்பில் கலைஞர் என்.எம்.பாலச்சந்திரனின் இயக்கத்தில் இந்நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது.

(எ-173)

**மின்னொளி உயர்கல்விக் கழகம்**
கண்டிவீதி, கைதடிச் சந்தி

**A/L 2006 கலைப்பிரிவு**
ஆரம்பம்: 29-03-2004
திங்கள் பிற்பகல் 4.00 மணி

**O/L DAY CLASS**
ஆரம்பம்: 29-03-2004
திங்கள் காலை 7.30

பதிவுகள்: கல்விக்கழகம் முன்பாகவுள்ள செல்வா தையலகத்தில் காலை 8மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
(30006) (21-14)

## எட்டாண்டு நினைவுமுகம்

இவ்வுலகில் 1942 - 06 - 19



இறையுலகில் 1996 - 03 - 25

**அமரர் முருகேசு பாலசிங்கம்**
(சந்தம்புளியடி - காரைநகர்)
*திதி: ஸப்தமி 28-03-2004*

எங்களில் வாழ்ந்திடும் அப்பாவே
எட்டாண்டு நினைவினில் நிறைந்தீரகளே!
உங்களின் மைந்தர் சிறப்புக்கள் காணாது
உலகினைப் பிரிந்து சென்றீரகளே!
நீங்காது நெஞ்சினில் உங்கள் நினைவு
நிமலன் திருத்தாளை நீள நினைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*120/ 4, திருவள்ளுவர்சாலை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (30160) (26-14-21)
(மகன்: *மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன*)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 11 - 1929



உதிர்வு 09 - 04 - 2003

**அமரர் சுப்பையா வேலாயுதம்**
(சின்னராசா)
திதி: 28-03-2004 பூர்வபக்க ஸப்தமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் - உங்கள்
நினைவுகளும், பாசமும், கண்ணியமும் - என்றும்
எம் மனதை விட்டகலாது...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது குடும்பத் தலைவர் அமரராகி ஓராண்டு நிறைவையொட்டி இன்று (28-03-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு. (30086) (26) - குடும்பத்தினர்.

**யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**
**க.பொ.த.உயர்தர அனுமதி**

எமது பாடசாலையில் 2006 A/L விஞ்ஞான, கலை, வர்த்தகப்பிரிவுகளுக்கு அனுமதி பெறவிரும்பும் மாணவர்கள் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து 10.04.2004இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

(C/34124) அதிபர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 26 – 08 – 1917



உதிர்வு 27 – 02 – 2004

**திருமதி செல்லம்மா வடிவேலு**

அன்பின் பிறப்பிடமாய் பர்சத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்திட்ட தாயே!
உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல்
தவிக்கின்றோம் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*வங்கிவளவு, சுன்னாகம்.* (30142)(21-16)

## ஏழாவது ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 29 - 12 - 1967



தாய் க்தற 15 - 03 - 1997

**செல்வி ஆறுமுகம் பத்மாவதி** .(ஜெயந்தி)
திதி: (28.03.2004)


பூலோகப் புதுமலராய்
பூவை நீ மலர்ந்திருக்க - உன்னைப்
பார்த்து நாம் மகிழ்ந்திருக்க
பாதகனாம் காலனவன்
பறித்தனனே உன்னுயிரை
ஏழாண்டு காலமது
எமைத் தாண்டிச் சென்றிடினும்
மாழாது நின் நினைவு - நாம்
மரிக்கும் வரை நிலைத்திருக்கும்

தாய், தந்தை, சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

*"பாலவிகார்", மருதங்கேணி தெற்கு, தாளையடி.* (29985)(34-21-16)

## 31ஆம் நாள் நிகழ்வில்
## எங்கள் அன்புத் தெய்வத்தை நினைவு கூருகின்றோம்

மண்ணில் 26 – 02 – 1914



விண்ணில் 28 – 02 – 2004

**அமரர் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி**

(ஓய்வுபெற்ற அதிபர், பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை)

பன்னாலை மாதாவின் புகழ்பூத்த மைந்தனே!
எங்கள் அன்பு நிறை பண்புத் தெய்வமே!
பன்னாலை ஐக்கிய நாணய சங்கத்தை ஸ்தாபித்து
ஐம்பது ஆண்டுகாலம் தலைவனாய் இருந்தவனே!
ஆறாது உம்பிரிவு! தாங்காது எம் இதயம்!!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் ஐக்கிய நாணயச் சங்கத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிய அமரரை அமரத்துவமடைந்த 31ஆம் நாளாகிய இன்று நினைவு கூருகின்றோம்.

இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் நண்பகல் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பன்னாலை.* (30156)(21-14) - ஐக்கிய நாணய சங்கத்தினர்.

உதயன்

## தீர்வைத் தீர்மானிக்கும் பொறுப்பு சிங்களத்திடம்

வருகின்ற வெள்ளிக்கிழமை நடைபெறப் போகின்ற இலங்கையின் பொதுத்தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்று.

ஐந்து தசாப்தகால இனப்பிரச்சினையாலும், இரண்டு தசாப்தகாலமாக அது ஏற்படுத்திய இனப்போரினாலும் துவண்டுபோய்க் கிடக்கும் இலங்கைத் தீவின் எதிர்காலம் மீட்சியுறுமா என்ற விடயத்தில் நாட்டின் தலைவிதியை எழுதப்போகும் - தீர்மானிக்கப் போகும் - பொதுத் தேர்தலாக இது அமைகின்றது.

நாட்டின் எதிர்காலம் சமாதானத்தையும், சுபிட்சத்தையும் நோக்கிச் செல்லப் போகின்றதா? அல்லது யுத்தத்தையும் பேரழிவையும் சந்திக்கப் போகின்றதா? - என்பதை முடிவு செய்யப் போகும் நிகழ்வாகவும் வெள்ளிக்கிழமை நடைபெறப்போகும் வாக்களிப்பு அமைகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் சிங்களவர்கள், தமிழர்கள் உட்பட நாட்டின் அனைத்து இன மக்களும் அந்நியோன்னியமாக - ஒன்றுமையாக - ஐக்கியமாக - வாழப்போகின்றார்களா? அல்லது கொடூர யுத்தத்தின் பின்னர் இந்த நாடுதுண்டாடப்படப் போகின்றதா? - என்பதைத் தீர்மானிக்கும் கருத்துக் கணிப்பாகவும்கூட இது அமையப்போகின்றது.

இந்தத் தேர்தலில் தங்கள் அபிலாஷைகளையும், ஐக்கியத்தையும் வெளிப்படுத்தியும் தங்கள் ஏக பிரதிநிதிகளை அடையாளப்படுத்தியும் தமிழினம் வாக்களிக்க இருக்கின்றது. அது தமிழினத்தின் வரலாற்றுக் கடமை என்பது இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் வலியுறுத்தியாகிவிட்டது. ஒட்டுமொத்தத் தமிழினமே அதை நன்கு புரிந்துகொண்டு தமது ஏகோபித்த கருத்தை வெளிப்படுத்தத் தயாராகிவிட்டது.

இங்கொன்றும் அங்கொன்றுமாக சில தப்புத்தாளங்கள், புல்லுருவிகள் குதிக்கின்றன. அடுத்த வெள்ளிக்கிழமை தேர்தலோடு அவர்களின் கூச்சலும் பிதற்றலும் அடங்கிவிடும் என நம்பலாம். தமிழ் மக்கள் தங்கள் இனமான உணர்வை வாக்களிப்பு மூலம் ஒன்றிணைந்து வெளிப்படுத்தி - இத்தகைய வழிதவறிய கோலங்களின் வாயை அடைத்து - விடுவார்கள் என்பது நிச்சயம்.

இத்தேர்தலில் தமிழருக்கு வரலாற்றுக் கடமை காத்திருப்பது போல, தென்பகுதிச் சிங்களவர்களுக்கும் ஒரு வரலாற்றுக் கடமை காத்திருக்கின்றது.

உரிமைக்காக உயிரையும், உதிரத்தையும் தியாகம் செய்து வீரப் போர் புரிந்த தமிழினம், அமைதி வழியில் - சமாதான நெறியில் - இனப்பிரச் சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு - நட்புக் கரம் நீட்டி காத்து நிற்கின்றது. தங்கள் ஏகோபித்த அபிலாஷையை இத்தேர்தல் மூலம் தமிழினம் வெளிப்படுத்தத் தயாராகும்போது, தமிழினம் நீட்டும் நட்புறவுக் கரத்தைப் பற்றி, குலுக்கி, இரு கைகோர்த்து, அமைதி வழியில் ஐக்கியமாக நடைபோடுவதற்குச் சிங்களமும் இணங்கித் தயாராகவேண்டும்.

அதற்கான வாய்ப்பும் சந்தர்ப்பமும் சிங்களத்துக்கும் இத்தேர்தல் மூலம் வழங்கப்பட்டிருக்கின்றது.

தமிழர் தரப்பு கோரும் நியாயமான உரிமைகளை வழங்கும் விதத்தில் - அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் - ஓர் அமைதித் தீர்வை வழங்கக்கூடிய ஓர் அரசியல் தலைமையைத் தேர்ந்து ஆட்சிக்கு அனுப்பவேண்டிய பொறுப்பு இப்போது சிங்கள மக்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கின்றது.

அதை உணராது வெறும் பேரினவாதக் கூச்சலுக்கும், அரசியல் 'ஸ்டண்டு'களுக்கும் அவர்கள் எடுபட்டு, இது விடயத்தில் தவறிழைப்பார்களேயானால், நாடும் எதிர்காலச் சந்ததியும் மீட்சிபெற முடியாத ஒரு பெரும்தவறை அவர்கள் இழைத்தவர்களாவார்கள் என்பது உறுதி.

தமிழர்களின் எதிர்பார்ப்பு என்னவென்பது தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுவிட்டது.

அது விடயத்தில், பல்வேறு சிங்களத் தலைமைகள் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுத்து இணங்கி வரத் தயாராக இருக்கின்றன என்பதும், அவை இதுவரை வெளிப்படுத்தி வந்த கருத்துக்கள் மூலம் ஓரளவு அம்பலமாகிவிட்டது.

இந்த இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, இணக்கத் தீர்வைத் தரக்கூடிய சிங்களத் தலைமை எது வென்பதைத் தீர்மானிப்பது தென்னிலங்கை மக்களுக்கு அப்படி ஒன்றும் காரியமாக இருக்காது.

அமைதியா? யுத்தமா? அல்லது சமாதானமா? போரா? - இதைத் தீர்மானிக்க வேண்டிய வாய்ப்பும் பொறுப்பும் இத்தேர்தல் மூலம் சிங்கள வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அவர்களது தீர்ப்பு என்ன என்பது இன்னும் ஒரு வாரத்தில் தீர்க்கமாகத் தெரிந்துவிடும்.

# கடற்படை அனுமதியுடன் படகுகள் கச்சதீவு செல்வதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்28

செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு தனிப்பட்ட முறையில் தங்கள் சொந்தப் படகுகளில் அடியார்கள் செல்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்று யாழ். செயலகம் அறிவித்திருக்கின்றது.

ஏற்கனவே பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று படகுகளுக்கு மேலதிகமாகத் தனிப்பட்ட முறையில் பிளாஸ்ரிக் படகுகளிலும் கச்சதீவு செல்ல விரும்புவோர் கடற்படையினரின் அனுமதியுடன் அங்கு செல்லமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட படகுகளில் செல்லவிரும்புவோர் இன்று ஞாயிறு காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை குறிகாட்டுவானிலும், நெடுந்தீவிலும் உள்ள கடற்படையினரிடம் தங்கள் படகைக் காட்டி அவை பயணத்துக்குத் தகுதியானவையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் அனுமதிக்கப்படும் படகுகள் நேரடியாகக் கச்சதீவுக்குச் செல்லலாம் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# ஆசிரியருக்கான மாதிரிக் கிராமம் திருமலையில் அமைக்கப்படுகின்றது

வலிகாமம் தெற்கு,மார்ச்28

திருகோணமலையில் மாதிரி ஆசிரியர் கிராமம் ஒன்று உதயமாகியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்ட முயற்சியினால் இம்மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்டுவருகிறது.

திருகோணமலை - நிலாவெளி வீதியில் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ள துவரங்காட்டுப் பகுதியில் இக்கிராமம் அமைக்கப்பட்டு வருகின்றது.

திருகோணலை மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றி ஐம்பது ஆசிரியர்களுக்கு இக்கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்டு அவர்கள் அங்கு குடியமர்ந்து வாழச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரிக் கிராமத்தில் தபாலகம், விளையாட்டு மைதானம், நூலகம், நவீன சந்தை, பாலர் பாடசாலை போன்ற பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுக் குடியமரும் ஆசிரியர்களின் நலன் கருதிப் பல வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

முதலில் வீடுகள் இல்லாத திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற மாதிரி ஆசிரியர் கிராமங்களை ஏனைய மாவட்டங்களிலும் அமைக்கத் தாம் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-152)

## குருநகரில் வீதிகளை நோக்கி நகர்த்தப்படும் காணி எல்லைகள்

### பொதுப்போக்குவரத்துக்கு குந்தகம் எனமுறைப்பாடு

குருநகர்,மார்ச்28

குருநகர்ப் பகுதியில் வசிக்கும் ஒருசிலர் தமது வீடுகளை உடைத்து மீளநிர்மாணிக்கும்போது காணி எல்லைகளை இயன்றளவு வீதிகளை நோக்கி விஸ்தரிக்கின்றனர் என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக வீதிகள் குறுகியதாக மாறுவதுடன் பொதுப் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருப்பதாகவும் சுட்டிக காட்டப்படுகின்றது.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் காணி எல்லை விஸ்தரிப்புக் காரணமாக கழிவுநீர் செல்லும் வடிகால்கள் சேதமடைவதுடன் புதிதாக உள்ளீர்க்கப்பட்ட எல்லைகளின் உட்புறத்தினுள் வடிகால்கள் அமைந்து விடுவதனால் வடிகால்களைச் சுத்திகரிப்புச் செய்வதில் யாழ். மாநகரசபைச் சுத்திகரிப்பாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் -

யாழ். மாநகரசபையிடமிருந்து எதுவித முன்னறிவித்தலும் பெறறுக்கொள்ளாமல் நடைபெறும் இந்த எல்லை விஸ்தரிப்பைத் தடைசெய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் குருநகரைச் சேர்ந்த பொது அமைப்புகளே விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு காணி விஸ்தரிப்புப் பணிகள் தொடர்ந்தால் குருநகரில் உள்ள பல வீதிகள் குறுக்கமடைந்து போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் அபாயம் ஏற்படும் என்றும் - அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-51)

## வெருகல் ஆற்றுப் பகுதியில் மோதல் ஏற்பட வாய்ப்பு

### பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தகவல்

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு இடையிலான வெருகல் ஆற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற வாய்ப்பு உண்டு.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் சுமேதா பெரேரா.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

"எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி கிழக்கு மாகாணத்திலிருந்து சென்ற விடுதலைப் புலிகள், வெருகல் ஆற்றுக் கரையோரங்களுக்குச் சென்றுள்ளனர். வடக்குப் பிரதேசத்திலிருந்து போராளிகள் அப்பகுதிக்குச் செல்ல எங்களுடைய அனுமதி பெறப்படவேண்டும். அவர்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் மேற்பார்வையிலேயே செல்லவேண்டும்; செல்லவும் முடியும். அந்த அளவுக்கு வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுடைய எல்லைப் பரப்புக்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. கடந்த இரண்டு நாள்களுள சில நகர்வுகள் இடம்பெற்றுள்ளன. சுமார் 50 இலிருந்து 60 போராளிகள் வரை வன்னியிலிருந்து திருகோணமலைக்கு எமது அனுமதியுடன் சென்றுள்ளனர்.

- இவ்வாறு பிரிகேடியர் அப்பேட்டியில் குறிப்பிட்டார்.(ஐ-9-7)

**நாளை**

பங்குனி 16
திங்கட்கிழமை
(29.03.2004)
திதி: அட்டமி
பகல் 4.40 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பகல் 2.12 வரை
சுபநேரம்: 12.13-1.43
ராகுகாலம்: 7.43-9.13
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உன்னைப் போலவே பிறரையும் நேசி.

## சுயதொழில் முயற்சிக்கென 'நியாப்' திட்டத்தின்கீழ் கடன்

### நவாலி தெற்கு மகளிர் சங்கத்துக்கு

வலி.தென்மேற்கு,மார்ச்28

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நவாலி தெற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களான பயனாளிகளுக்குச் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்கு 'நியாப்' திட்டத்தின்கீழ் 4 லட்சத்து 74 ஆயிரத்து 525 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தினர் இந்த நிதி மூலம் சுயதொழில் முயற்சிக்கான பொருள்களைக் கொள்வனவு செய்து பொருள்களாகவே பயனாளிகளுக்கு வழங்குவர் என வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

தையல், ஆடு, மாடு ஆகிய கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறு வியாபாரம் ஆகிய சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு அந்தந்தத் துறை சார்ந்த நிபுணர்களின் மேற்பார்வையில் இதற்கான பொருள்கள் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படும் என்றும் - அவர் மேலும் கூறினார்.

பயனாளிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்தைச் சிறந்தமுறையில் விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## சிறுவர் நலன்திட்டம் குறித்து ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகள்

### எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்28

சிறுவர் நலன்திட்டம் தொடர்பாக 'யுனிசெவ்' அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வழும் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். கோட்ட ஆசிரியர்களுக்கு 6ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியிலும் கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்கு 7ஆம் திகதி புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியிலும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரையும் கருத்தரங்கு நடைபெறும்.

சிறுவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படவுள்ளதால் யாழ். வலயத்திற்குட்பட்ட சகல ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-6)

### சித்திரைப் புத்தாண்டையொட்டி

## வர்த்தக நிலையங்களைத் திறக்க விடுமுறை தினங்களில் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்28

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

எனினும், மேற்படி விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன்களை உரிய வகையில் பேணுமாறும் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ம-4)

**வண்ணார் பண்ணை வாழ்வே போற்றி!**

*பண்ணார் இன்சொலாள் பாகா போற்றி*
*பாலொடு ஐந்து உகப்பாய் போற்றி*
*விண்ணோர் வியக்கும் வெண்காட போற்றி*
*வேண்டும் வரமெலாம் ஈவாய் போற்றி*
*மண்ணோர் பூசை மகிழ்வாய் போற்றி*
*மாலோ டயன்மயங்கும் மணாளா போற்றி*
*வன்ன மலர்மாலை மார்பா போற்றி*
*வண்ணார் பண்ணை வாழ்வே போற்றி.*

ஏழாலையூர்
- சிவ. சண்முகவடிவேல் -

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 12ஆம் திருவிழா)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர்

**திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்**

அவர்கள் (S.L.P.S.I., விரிவுரையாளர் - தேசியகல்வி நிறுவனம்) நேற்று (27-03-2004) சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுதத்துவமாணி (M.Phil. )பட்டம் பெற்றதையிட்டு அவரையும் அவரது சேவையையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(30134) (26-34-14) - சுதுமலை வாழ் மக்கள்.



## மகிமை கண்டு வாழ்த்துகின்றது மணி



மணி கல்வி நிறுவன இணைப்பாளரும் யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியின் பகுதி நேர (English) விரிவுரையாளருமான

**உயர்திரு. த.தனேந்திரன்**

B.Com.(Hons.) M.M.Spl.H.N.Dip.IN.ACC. P. G.Dip.IN.Edu

அவர்கள் நேற்று நடைபெற்ற பட்டமளிப்புவிழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறுவதையிட்டு மிகவும் பெருமைகொண்டு பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சமூகம்,
வேலணை. (30071)(38-34-14) மணி கல்விநிறுவனம்.



# VACANCIES
## University of Jaffna, Sri Lanka.

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 20th April 2004 for the undermentioned posts.

### FACULTY OF ARTS

1. Assistant Lecturer (on Contract)/Instructor (on Contract) in Dance (Bharathanatiyam/Vocal).
2. Assistant Lecturer (on Contract)/Instructor (on Contract) in Music (Vocal/Veena/Violin/Miruthangam).
3. Visiting Lecturer/ Visiting Instructor in Dance.
4. Visiting Lecturer/ Visiting Instructor in Music (Vocal/Violin/Veena/mirudangam/pannisai).

| Posts | Salary |
|---|---|
| Assistant Lecturer (on contract) | Rs.10,800/-p.m.(fixed) |
| Instructor (on contract) | Rs.9,000/-p.m.(fixed) |
| Visiting Lecturer | Rs.500/- per hour for lectures |
| | Rs.200/- perhour for practicals |
| Visiting Instructor | Rs.250/- perhour. |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar Establishments, University of Jaffna, Srilanka, either in person or by sending a Money Order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in Favour of the 'Bursar, University of Jaffna' together with a self addressed stamped envelope 23x10cm. in size.
Those who wish to apply for more than one post, should apply in separate forms for each post.
Applications from the University System/Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of Respective Institutions.
Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**2004.03.26.** (C34119)(34-14)



## முதலாவது பிறந்த தின வாழ்த்துக்கள்!



திரு.திருமதி சீலன் - சுஜா
தம்பதிகளின் செல்வப் புதல்வ

செல்வி

# அஷ்மினா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை சுவிஸிலுள்ள (Wil) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அஷ்மினா குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அத்தைமார் ~ பத்மா, அமுதா, மாமாமார் ~ தங்கன், தேவன், மச்சாள்மார் ~ சீனேகா, ரித்திகா, வினாகா, லண்டனிலிருக்கும் சித்தப்பா பெரியகரன், சித்தி பிரதீபா, சுகந்தன் சித்தப்பா, காண்டி மாமா, பிரான்ஸிலிருக்கும் சித்தப்பா சின்னக்கரன், அமெரிக்காவில் இருக்கும் அமுதன் சித்தப்பா, உடுப்பிட்டியில் இருக்கும் அப்பப்பா, பூட்டிமார், சின்னம்மா காசியாச்சி, அண்ணா சிலையடியிலிருக்கும் பெரியம்மா சுசி, பெரியப்பா வசந்தன், சசிமாமா, அம்மம்மா, அண்ணாமார்களான கீர்த்தமன், நிலக்சன், அக்காமார்களான கீர்த்திகா, நிரஞ்சி, பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்லாண்டுகாலம் சீரோடுஞ் சிறப போடும் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றார்கள்.

**A.Seelan (சீலன்)**
9500 Wil (வீல்), St.Gallerstr - 47
Swiss. (30145) (26-34-14) (செங்காளன் ஸ்ராசை -47)


## கையடக்கப் பஞ்சாங்கம்

'தாரண' சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சிறிய கையடக்கப் பஞ்சாங்கம் வெளியிடப்பட்டுள்ளது.இப்பஞ்சாங்கத்தில் புது வருடப் பலன், பன்னிரு மாதங்களுக குரிய திதி, வாரநட்சத்திர யோககரண விடயங்கள், குருபூசைத் தினங்கள், ஆலயத் திருவிழாக்கள் தொடர்பான விடயங்கள் என்பன அடங்கியுள்ளன.

திணைக்களத்தினால் இலவசமாக வுநியோகிக்கப்பட்டு வரும் இதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 9 அங்குல நீளமும் 6 அங்குல அகலமும் கொண்ட கடிதஉறையில் சுயமுகவரியுடன் 9 ரூபா முத்திரையை ஒட்டி "பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலிவீதி, கொழும்பு04" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் ' புது வருடப் பஞ்சாங்கம் - 2004' என்று குறிப்பிடப்படல் வேணடும என்றும் நேரில் பெறவிரும்புவோர் அலுவலக நேரங்களில் திணைக்களத்துக்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளார். (எ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி (நிர்வாகம் / நிதி)

**திரு.S.R.சத்தியேந்திரா**

B.A., B.Com., PGDE HNDA

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணி பட்டம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாமா, மாமி
(30125) (24-34-14) சுவிற்ஸர்லாந்து.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புத்தூரைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்

**செல்வன் செல்லையா பன்னீர்செல்வன்**

27-03-2004 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
நா.சண்முகரத்தினம்
(30104)(34-14) அதிபர். யா/கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்



## நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 2004



# கி.சிவநேசன்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்.

**தமிழ்த்தேசியம் பலம் பெறவும் உழைக்கும் வர்க்கத்தின் பெருமை ஓங்கவும் உழைத்த இவரை அதிகப்படியான வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவுசெய்வோம்.**

\- கூட்டுறவாளர்களும் பொதுமக்களும் -



## வெள்ளிவிழா வாழ்த்து



இன்று (28.03.2004) வெள்ளி விழாக்காணும்

திரு .திருமதி .

**அலோசியஸ் விமலாதேவி**

தம்பதிகள் இல்லறத்தில் மேலும் பல்லாண்டுகாலம் இணைந்து வாழ வாழ்த்துகின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.(30133)(34-14)

வாழ்த்துபவர்கள்:
மகன்மார், மகள், மருமகன், மருமகள்.



# சாரு எலக்ரோனிக்

பலாலி வீதி, கோண்டாவில்
டிப்போ சந்தி.

உங்கள் வீட்டின் **T.V, Radio, CD, VCR, DVD, Computer Monitor** மற்றும் சகலவிதமான எலக்ரோனிக் பொருள்களையும் சிறந்தமுறையில் உத்தரவாதத்துடனும் நம்பிக்கையுடனும் திருத்திப் பெற்றுக்கொள்ள

## சாரு எலக்ரோனிக்

பலாலி வீதி, கோண்டாவில்.

**Kit Card,** கையடக்கத் தொலைபேசி விற்பனைக்கு உண்டு.
*(ரிப்பேரிங் செய்யலாம்)*
**T.P.:077 6153725, 0777 283628.**

(30095)(34-14)

# கூட்டமைப்புக்கு வாக்களிக்கக்கோரி குடாநாட்டின் பல அமைப்புகள் அறிவுறுத்து

ஏதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்க்கூட்டமைப்பினை ஆதரிக்குமாறு கோரிப் பல பொதுஅமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.




மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகம், பரந்தன் பிரதேச தமிழர் தேசிய எழுச்சிப் பேரவை, அகில இலங்கைப் பொதுஊழியர் சங்கம், யாழ்ப்பாண உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் ஆகிய அமைப்புக்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. தமிழ்மக்களின் அபிலாஷைகளை ஒன்றுபட்ட குரலில் - ஒற்றுமையாக சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையில் தமிழ்க்கூட்டமைப்பினை அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றிபெறச் செய்வது அவசியம் என்றும் -

இத்தேர்தல் தமிழருக்கு ஒரு பொன்னான வாய்ப்பாக அமைந்திருப்பதால் இதனை அனைவரும் சரியாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் - அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தமது உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவரும் தமிழ்க் கூட்டமைப்பின் சின்னமான வீட்டுக்கு வாக்களிக்குமாறு மேற்படி அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

(ஐ-4-175-51-17-30)

# தேர்தல் கடமையின்போது கைத்தொலைபேசி வேண்டாம்!

## அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,மார்ச்28

தேர்தல் கடமையின்போது அலுவலர்கள் எவரும் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கக்கூடாது என்று யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா அறிவுறுத்தியிருக்கின்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேர்தல் கடமையில் ஈடுபடவிருக்கும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாக்கெடுப்பு எழுதுநர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் ஆகியோர் தேர்தல் கடமைகளின்போது கையடக்கத் தொலைபேசிப் பாவனையை முற்றாகத் தவிர்க்க வேண்டும் எனவும் -

ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் கடமையாற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் இநத அறிவிப்பை இறுக்கமாக நடைமுறைப் படுத்தவேண்டும் எனவும் - அவர் அறிவித்துள்ளார். (ஐ-4-185)

# இராணுவ ரீதியில் பலம் பெற்றுவிட்டோம் ஜனநாயக ரீதியிலும் பலம் பெறுவோம்!

## அதற்காக வாக்குகளை அளியுங்கள் என்கிறார் சுரேஷ்

கோண்டாவில்,மார்ச்28

இராணுவ ரீதியில் வலிமை பெற்றிருக்கிறோம். ஜனநாயக ரீதியிலும் பெரும் பலத்தைப் பெற்று சர்வதேசத்திடம் அங்கீகாரம் பெறவே இந்தத் தேர்தலில் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன்.

உரும்பிராய் மேற்கு ஞானவைரவர் ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் இரவு 8.00மணியளவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

எமது ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இப்போது சர்வதேசத்தின் மத்தியில் அம்பலப்பட்டுப்போய் நிற்கிறார். சமாதானத்திற்காக சர்வதேசம் அவர் மீது பிரயோகித்த அழுத்தங்களைக் கூட புறக்கணித்திருக்கிறார்.

ஆட்சியைக் கைப்பற்றுவது தான் முக்கிய விடயம். சமாதானம் என்பது அவருக்கு இரண்டாம் பட்சம் தான். அதனால் தான் மற்றொரு இனவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தார்.

இந்தநிலையில், நாம் வரப்போகும் தேர்தலை எதிர்கொண்டு வெற்றிகொள்ளவேண்டும். தமிழர்கள் கௌரவமான தீர்வை விரும்புகிறார்கள். வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் சுயாட்சி உரிமையுடன் கூடிய - தங்களைத் தாங்களே ஆளக்கூடிய - ஓர் ஆட்சி அதிகாரம் வேணடும் என்று ஒரே குரலில் ஒருமித்துக் கூறுகின்றார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் இது சாத்தியமானது.



இதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச்சொல்லவேண்டும். அதன் மூலம் தான் சர்வதேச சமூகம் ஜனாதிபதிக்கோ, சிங்கள அரசுக்கோ தீர்வுக்கான அழுத்தங்களைக் கொடுக்கும். இந்த அழுத்தங்கள் நிரந்தரமான சமாதானத்தை நோக்கிச் செல்ல வழிவகுக்கும். இப்போது நாங்கள் மக்கள் ஆணைக்காக காத்திருக்கிறோம். 1977ஆம் ஆண்டு தந்தை செல்வாவுக்கு தமிழீழத்திற்கான ஆணை வழங்கப்பட்டது போல இன்றும், தமிழ்மக்கள் கௌரவமாக வாழ்வதற்கு, எமது பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச்சொல்வதற்கான ஆணையை, எமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஆணையை தமிழ்மக்கள் தரவேண்டும்.

நாளை ஆட்சியமைக்கப்போகும் அரசைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாறலாம். இதற்காக தமிழ் மக்கள் ஓரணியில் நின்று தமிழரசுக்கட்சிச் சின்னமான வீட்டுச்சின்னத்திற்கு வாக்களிக்கவேண்டும்.

தமிழ்மக்கள் இடுகின்ற ஒவ்வொரு புள்ளடிகளும் யுத்தம், இடப்பெயர்வுகளுக்கு எதிரானதும் நிரந்தர சமாதானத்திற்குரியதுமாகும். எனவே சிந்தித்து வாக்களியுங்கள் - என்றார். (ஐ-49)

# தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 10 அரச வாகனங்கள் பறிமுதல்

கொழும்பு,மார்ச்28

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதாகக் கூறப்படும் 10 அரச வாகனங்களைப் பொலீஸார் கைப்பற்றினார்கள்.

தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் அரச வாகனங்களினை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் தலைமையகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுவரும் பல அரசவாகனங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் வாகனங்களைக் கைப்பற்றுவது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலீஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

(ம-ரி)





பெண்கள் பண்பாட்டு மையத்தின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பின் பெண்வேட்பாளர் திருமதி பத்மினி சிதம்பரநாதனை ஏனைய பெண்கள் தோளில் தூக்கி எழுச்சி கொள்ளும் காட்சியை முதலாவது படத்திலும், பெண்கள் பண்பாட்டு மையத்தினர் யாழ்.பஸ் நிலையத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது அவர்களுடன் ஏனைப் பெண்களும் இணைந்து எழுச்சிப்பாடல்களைப் பாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள

# சிரேஷ்ட அலுவலர்களுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ். மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்கள் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் மொத்தமாக 582 பேர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகப் பணியாற்றவுள்ளனர். இவர்கள் அனைவரையும் முதலாம் திகதி காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு வைத்து இவர்களுககுரிய வாக்கெடுப்பு நிலைய விவரம், வாகன இலக்கம் ஏனைய பணியாளர்களின் விவரங்கள் மற்றும் வாக்குப்பெட்டி என்பன வழங்கப்படவுள்ளன.

அன்றையதினம் இவர்கள் அனைவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று தமது பணியைப் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். (ஐ-10-185)

# வலி. தென்மேற்கில் கூட்டமைப்பின் பிரசாரம் தீவிரம்

வலிதென்மேற்குப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பலரும் தங்கள் ஆதரவாளர்கள் சகிதம் வீதி வீதியாக - வீடு வீடாகக் - சென்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். பெருமளவிலான தேர்தல்கொள்கை விளக்கப பிரசுரங்கள், மாதிரி வாக்களிப்புப் பிரசுரம் என்பவற்றை இவர்கள் மக்களுக்கு வழங்கி வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட இப்பகுதி மாணவர்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். ஒலிபெருக்கி பூட்டிய வாகனங்களில் பதாகைகள், கொடிகள் கட்டப்பட்டு வீடு சின்னம் ஒன்றும் வைக்கப்பட்டு பிரசாரம் தீவிரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.(ஐ-135)

# 48 மணிநேரத்துக்கு முன்பாக பிரசாரம் நிறுத்தப்படும்

தேர்தல் தினத்துக்கு முன்னதாகவுள்ள 48 மணித்தியாலங்களுள் தேர்தல் தொடர்பான பிரசாரங்களை நிறுத்துவதற்கான விசேட ஒழுங்குகளைப் பொலீஸ் திணைக்களம் மேற கொண்டுள்ளது.

தேர்தல் இடம்பெறவுள்ள தினத்துக்கு முன்னர் உள்ள 48 மணித்தியாலயத்துக்குள் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு சில அரசியல்வாதிகள் திட்டமிட்டுள்ளதாகக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே இந்த விஷேட திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தேர்தல் தினத்துக்கு 48 மணி நேரங்களுக்கு முன்பிருந்தே பொலீஸார் தேர்தல் கடமைகளில் ஈடுபடவிருப்பதால் அதைச் சாதகமாகப் பயனபடுத்தித் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டுதல் உள்ளிட்ட தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள சில அரசியல் கட்சி உறுப்பினர்கள் முயன்று வருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# இரண்டு விஞ்ஞாபனங்கள் வெளியான மர்மம் என்ன?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டிருப்பது தொடர்பாக இரகசியப் பொலீஸ விசாரணைக்கு உத்தரவிடப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டாவது தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்று வெளியானமைக்கு ஐ.தே. முன்னணியினரே காரணம் என்று ஜே.வி.பியும் வேறு சிலரும் கூறியிருப்பதன் காரணமாகவே இது குறித்து சி.ஐ.டி. விசாரணையொன்றை நடத்தவேண்டுமென ஐ.தே.முன்னணி கோரியிருக்கின்றது.

ஐ.தே. முன்னணிப் பொதுச்செயலாளர் செனரத் கப்புகொட்டுவ இது பற்றிக் கருத்துக்கூறுகையில்:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மார்ச் 11ஆம் திகதி தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டிருநதது. பின்னர் மார்ச் 21ஆம் திகதி முன்னையதில் சில மாற்றங்கள் செய்து இரண்டாவது விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டிருந்தது. இது அந்தக் கூட்டணி உறுப்பினர்கள் மத்தியில் மட்டுமன்றி மக்கள் மத்தியிலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதேவேளை -

ஐ.ம.சுதந்திர முன்னணி வேட்பாளர் ரட்ணகமகே தமக்கு 50 ஆயிரம் இரண்டாவது விஞ்ஞாபன பிரதிகள் வந்துசேர்ந்திருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். அத்துடன், கொழும்பு வாக்காளருக்கு அவைகளை விநியோகிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இதேபோல் இன்னொரு வேட்பாளர் ரஞ்சித்கியம் பலாப்பிட்டிய என்பவரும் இரண்டாவது விஞ்ஞாபனம் ஒன்று வெளியாகியிருப்பதை ஒப்புக்கொண்டிருந்தார்.

இந்த இரண்டு விஞ்ஞாபனங்கள் வெளியானதற்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. எனவே, இவ்வாறு இருவிஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ளதின் மர்மம் என்ன, இதற்குப் பின்னணி யார் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் சி.ஐ.டி. விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் நாம் அதை வரவேற்போம்.

இவ்வாறு செனரத் கப்புகொட்டுவ தெரிவித்துள்ளார்.

## பகிரங்க விவாதத்துக்குத் தயாரா?

இதேவேளை -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ள இரண்டு விஞ்ஞாபனங்கள் தொடர்பான மர்மத்தை மக்களுக்கு விளக்கும் வகையில் வெளிபபடையாக விவாதம் ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அல்லது ஜே.வி.பி. முன்வர வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் செனரத் கப்புகொட்டுவ, மக்கள் ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் எழுதியுள்ள கடிதங்களில் சவால்விட்டிருக்கிறார்.

சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டிருப்பதை அறிவார்கள். ஆனால், ஜே.வி.பியினர் மட்டுமே இன்னமும் இருட்டில் இருக்கிறார்கள். ஆகவே, இதுபற்றி வெளிப்படையாகவும் நேரடியாகவும் விவாதிக்கவரும்படி அவர்களை அழைக்கிறேன் என்று கப்புக்கொட்டுவ தெரிவித்துள்ளார். (ப)

**இதோ!**

இளமைத்துடிப்பு மிக்க முழுமை..., திருப்தி..மான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர்த் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சந்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி-33908) (24-14-21)



வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,
நீர்வேலி

**தலைமைக்கந்தோர் வர்ணம் தீட்டுதல்**

எமது சங்க தலைமைக்கந்தோர் அமைந்துள்ள கட்டடம் முழுவதற்கும் வர்ணம் தீட்டலுக்கான கேள்வி விண்ணப்பங்கள் சங்கத்தினால் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை தலைமைக் கந்தோரில் ரூபா 5/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த விண்ணப்பங்கள் கடித உறையின் மேல்பக்கத்தில் "வர்ணம் தீட்டுதல்" எனக் குறிப்பிட்டு "பொதுமுகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி" என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ அன்றி பதிவுத்தபால் மூலமோ 10.04.2004 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்குப் பிந்தாமல் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

- பதில் பொதுமுகாமையாளர்.

நீர்வேலி.

(30092)(34-21-14)



**வீடு தேவை**

யாழ். நகரில் வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதிகளுடன் 8-15 அறைகள் கொண்ட ஒரு ஹோட்டல் அமைக்க வீடு தேவை.

வாடகை/குத்தகை விவரங்களுடன் ஏனைய நிபந்தனைகளையும் குறிப்பிட்டு வீட்டின் வரைபடம், காணி உறுதிப்பிரதிகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

*Director,*
*31, Walukarama Rd,*
*Colombo-3.*

இயக்குநர்,
31, வாலுக்காராம தெரு,
கொழும்பு - 3.

(30092)(34-21-14)


## ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்28

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர் சங்கத்தின் மாதாந்த கலந்துரையாடல இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இக்கலந்துரையாடலில் சகல ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் ந.கனகலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-10)

## சாயி நிலையத்தில் ஆண்டு விழா

கோப்பாய்,மார்ச்28

கோண்டாவில் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கோப்பாய் சாயி சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரைகள், சொற்பொழிவுகள், பஜனை மற்றும் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ஐ-10-72)


**வரணி மகா வித்தியாலய**
**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

இடம்: வித்தியாலய பிரதான மண்டபம்
காலம்: 11.04.2004 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப. 10.00மணி
விடயம்: புதிய நிர்வாக சபை தெரிவு

*மேற்படி கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இதுவரை அங்கத்தவராக இணையாதவர்கள் அன்றைய தினம் படிவத்தைப் பெற்று இணைந்துகொள்ளமுடியும். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டாது.*

செயலாளர் தலைவர்



**N.C.A கல்வி நிறுவனம்**
சாரையடி. பருத்தித்துறை

O/L பரீட்சை முடிவு கிடைத்தவருக்கு
A/L 2006
கலை, வர்த்தகம்

★அளவையியல் - Mr.பிரபானந்தன் ★பொருளியல் - Mr.அன்ரனி
★தமிழ் - Mr.அகிலன் ★கணக்கியல் - Mr.பார்த்தீபன்
★இந்துநாகரிகம் - Mr.பிரதீபன் ★வர்த்தகம் - Mr.உதயமோகன்
★கிறிஸ்தவநாகரிகம் - Mr.சுதா ★ஆங்கிலம் - Mr.நிஷாந்தன்

ஆரம்பம் : 31.03.2004

(சி34115)(37-21-14)



ARPICO FURNITURE

**பிளாஸ்ரிக் கதிரைகள்**

இதோ! உங்கள் இல்லத்தை அழகிய முறையில்
அலங்காரமான புதிய வடிவமைப்பில் ஒழுங்கமைத்து
வருவோரை "வணக்கம்" கூறி வரவேற்று அமர்ந்து உரையாட
அழகிய பல வடிவங்களில் ஆர்ப்பிக்கோ பிளாஸ்ரிக் கதிரைகள்
விற்பனைக்கு வந்துள்ளன மற்றும்
அனைத்துவிதமான தளபாடங்களும்

பிளாஸ்ரிக் கதிரைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:



**WOOD SONS**

ஆர்பிக்கோ ஏகவிநியோகஸ்தர்:
68, 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடை சந்தி).
☎ 222 2430



(C/33732)(34-14-21)

மற்றும் அனைத்து ஆர்பிக்கோ முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.



# புது வருடத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**சிறார்களுக்கான ஆங்கில வகுப்புகள்**

- Pre Foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

விஷேட பேச்சுப் பயிற்சி வகுப்புக்கள்
பாட நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6 மாத கால பாடநெறிகள்

ENGLISH DAY பாலர் பாடசாலை மாணவர்கள் நடாத்திய English Concert ஐ அடுத்து அநேக பெற்றோரின் வேண்டு கோளிற்கிணங்க சிறார்கள் ஒரு English Day இல் கலந்து கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்

**நல்லூர் கோயில் வீதியில்**
**புதிய பாலர் பாடசாலை**
**சித்திரையில் ஆரம்பம்**

- ஆங்கில மொழி மூலம் கற்பித்தல்.
- தமிழ் மொழியும் கற்பிக்கப்படும்.

எமது பாலர் பாடசாலை மாணவர்கள் மிகவும் குறுகிய காலத்தில் ஆங்கில மொழியில் அடைந்த தேர்ச்சியை சென்றவாரம் நடாத்தப்பட்ட Concert ல் காட்டினார்கள்

வளர்ந்தோருக்கான
ஆங்கில பாடநெறிகள்

- Certificate in English
- Diploma in English
- Advanced Diploma in English

விஷேட
English For Communication Classes
பேச்சுப் பயிற்சி மட்டும்

SORRY!
KANDY ROAD MONTESSORI
ADMISSION FULL!

வடமராட்சியிலும்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனுமதிக்கு முந்துங்கள்

British BUSINESS SCHOOL

**BRITISH BUSINESS SCHOOL**

யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சி : பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.

HOT LINE : 021-222-5796

Where Students Come First

# வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துங்கள்!

## கனேடியத் தமிழ் மாணவர் ஒன்றியம் பகிரங்கக் கடிதம்

எதிர்வரும் தேர்தலில் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசியத்தின் அபிலாசைகளை வெளிப்படுத்துங்கள்.

- இவ்வாறு கனேடிய கல்லூரி மற்றும் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் ஈழத்தமிழர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஒன்றியம் ஈழத்தமிழர்களுக்கு எழுதியுள்ள பகிரங்கக் கடிதத்திலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது இறைமை வேண்டிய விடுதலைப் பயணத்தில் ஏதிலிகளாக்கப்பட்டு புலம்பெயர்ந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி கனடா நாட்டில் நாம் வாழ்ந்தாலும், எங்கள் நினைவுகள் உங்களைச் சுற்றியே உள்ளன என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

உங்களின் குரலாக சர்வதேச அரங்கில் உரிமைக் குரல் எழுப்பிக் கொண்டிருந்த நாம், எமது தாயக மண்ணில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, எம்மண் விரைந்ததும், உங்களைத் தரிசித்ததும், எம் துறைசார் வல்லமையை எமது தேசக் கட்டுமானத்தில் இணைத்துக் கொண்டதும், எமது தரிப்பின் போது நீங்கள் காட்டிய அன்பும், பரிவும் எமது நினைவுகளை நீக்கமற நிறைத்து நிற்கின்றன.

கனேடிய கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் துறைசார் கல்வி கற்றலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஐயாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளையவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் எம் அமைப்பில் பலர் இந்த கனேடிய மண்ணில் பிறந்தவர்கள் அல்லது தமது இளம் பராயத்தில் இங்கு வந்தவர்கள். தாயகப் பற்றும், தமிழின உணர்வும் தமிழீழத் தேசியத் தலைமை மீது அசையாத பற்றுறுதியும் கொண்டு நாம் நிற்பதற்கும் தாயக உறவுகளாகிய நீங்களே காரணம்.

இதுவரை இறைமை வேண்டி நீங்கள் நடத்திய புனிதப் போரில் 18 ஆயிரம் மாவீரர்களையும், 80 ஆயிரம் மக்களையும் தமிழீழ மண்ணில் விதைத்துவிட்டே, தற்போது உருவாக்கிக் கொண்டுள்ள இராணுவப் பலத்தின் துணைகொண்டு சர்வதேச அரங்கில் நீதியை வேண்டி நிற்கும் மக்களாக நிமிர்ந்து நிற்கின்றீர்கள். இன்று சர்வதேசமும், தனது பார்வையை உங்களை நோக்கித் திருப்பியிருக்கிறது. இந்நிலையில், எங்களுடைய அடிப்படை அபிலாசைகளை மீண்டும் ஒருமுறை ஜனநாயக மரபு தழுவி வெளிப்படுத்த சமயம் வாய்த்துள்ளது.

பொங்குதமிழ் எழுச்சி என தமிழர் தாயகத்தின் பட்டி தொட்டி எல்லாம், நீங்கள் திரண்டு, பிரதேச, மத, சாதி, வர்க்க வேறுபாடுகளைப் புறந்தள்ளி, ஒற்றுமைப்பட்ட தமிழினமாக ஒரே குடும்பமாக உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினீர்கள். நாங்கள் பேருவகை கொண்டோம். தற்போது சிறிலங்கா நாடாளுமன்றத்திற்கு நடைபெறும் தேர்தலை தமிழர் தேசத்து அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக மாற்றியுள்ளீர்கள்.

இதற்காக தமிழர் தேசியக் கூட்டமைப்பின் கீழ் அணிவகுத்து ஒன்றுபட்ட சக்தியாக உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திட சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. புலிகளே தமிழர், தமிழரே புலிகள் என முரசறைந்த நீங்கள் அதனை வாக்களிப்பு ஒன்றினூடாக உறுதிசெய்ய விளைந்து நிற்பது எமக்கு பெருமகிழ்ச்சி தருகின்றது. அத்துடன், தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் என்ற அடிப்படை நிலைப்பாடுகளை மீண்டும் வலியுறுத்துவதுடன், சிதைத்து அழிக்கப்பட்டுள்ள தாயகத்தை கட்டியெழுப்ப, இடைக்கால நிர்வாக அலகை தமிழர் தலைமை வேண்டியது போன்று அமைக்க வேண்டும் எனவும் ஆணை வழங்கப் போகின்றீர்கள்.

எமது இறைமை நோக்கிய விடுதலைப் பயணத்தின் முக்கியமான ஒரு காலகட்டத்தில் நாம் அனைவரும் இருக்கின்றோம். இன்று எங்களுடைய ஒற்றுமையையும், உறுதிப்பாட்டையும் ஏற்றுக் கொள்ளமுடியாத அல்லது அதனால் கிலி கொண்டுள்ள தமிழின விரோத சக்திகள், எமக்கு உள்ளும், புறமும் பிரிவினைகளை ஏற்படுத்தி, எம்மை சிதைத்துவிட முனைந்து நிற்பதுவும் நீங்கள் நன்கறிந்ததே. அச்சவாலை எதிர்கொள்ளும் ஆற்றலும், உறுதியும் தாயக மண்ணில் உங்களிடமும், புலம்பெயர்ந்த மண்ணில் எங்களிடம் இருக்கிறது.

எனவே, தமிழ் அன்னையை மனதில் நிறுத்தி, எங்கள் மாவீரர்களின் நினைவுகளை மனதில் சுமந்த வண்ணம் ஏப்ரல் 2ஆம் நாள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்லுங்கள். அங்கு தமிழ்த் தேசியத்தின் அபிலாசைகளை வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் வெளிப்படுத்துங்கள். அதனூடாக வலுப்பெற்று நிற்கும் தமிழர் தேசியத்திற்கு ஆணை வழங்குங்கள்.

தற்சமயம் கல்வியாண்டின் இறுதிப் பரீட்சைக்காக இளையவர்கள் நாம் கனேடிய மண்ணில் தயாராகிக் கொண்டிருப்பதால், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியில் உங்களுடன் இருக்க முடியவில்லை. எனினும் தமிழர் தேசிய அபிலாசைகளுக்கு வரலாறு காணாத ஆணையை வழங்கிய மக்களாக உங்களை விரைவில் தரிசிப்போம் என உறுதி கூறி, எங்கள் நினைவுகள் ஏப்ரல் 2, வரலாற்று நிகழ்வுக்காக உங்களைச் சுற்றியே வலம்வந்து கொண்டிருக்கும் என்பதையும் வலியுறுத்தி இம்மடலை முடிக்கின்றோம்.

- என்றுள்ளது. (ஒ)

# ஓய்வூதியர் நலன்புரிச் சங்கங்களுக்கு கூட்டங்களை நடத்தப் பணிப்பு

வலிகாமம்,மார்ச்28

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள ஓய்வூதியம் பெறுநர் நலன்புரிச் சங்கங்களின் பொதுக் குழுக் கூட்டங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக நடத்திமுடிக்குமாறும் -

மாவட்டப் பிரதிக் கூட்டங்களை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக நடத்துமாறும்-

பிரதேச செயலர்களையும் ஓய்வூதிய நலன்புரிச் சங்க நிர்வாகத்தினரையும் பகிரங்கச்சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் செயலாளர் எம்பி. பெரேரா கேட்டுக் கொண்டுள்ளார்.

நம்பிக்கை நிதியச் சங்கங்கள் வேறு நிதியச் சங்கங்களுடன் இணைந்து செயற்படுவதை அனுமதிக்கப்போவதில்லை என்றும் -

அப்படி இணைந்து செயற்பட்டால் எதிர்காலத்தில் அவ்வாறு நிகழாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும் - அவர் கேட்டுள்ளார்.

ஓய்வூதிய அங்கத்தவர்களின் ஓய்வூதிய நிதியில் இருந்து ஒரு சிறு தொகையைக் கழித்து தவணை முறையிலோ அல்லது மாதாந்தமோ நம்பிக்கை நிதியத்தினூடாக வைப்புச் செய்து அத்தொகையினை அரச வங்கிகளில் செலுத்தி சாதாரண வட்டியைப் பெற்றுத்தரும் திட்டம் இவ்வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும்-

தேவையான சந்தர்ப்பத்தில் அத்தொகையை சிறிது சிறிதாகப்பெற்றுக்கொள்ள வசதியளிக்கப்படும் என்றும் - அவர் மேலும் கூறினார்.

கடந்த வருடம் 283 பேருக்கு 7 லட்சத்து 61 ஆயிரத்து 800 ரூபா இறப்பு மானியக் கொடுப்பனவாகவும், 327 பேருக்கு 8 லட்சத்து 40 ஆயிரத்து 900 ரூபா புலமைப்பரிசில் கொடுப்பனவாகவும் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-152)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட கணனி மென்பொருள் தொடர்பான இறுதி வடிவமைப்பும் கருத்தரங்கும் எதிர்வரும் 31ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். வலயக்கல்விப் பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் பாடசாலை முகாமைத்துவக் குழுவில் இருந்து ஒருவரையும் கணனிக்குப் பொறுப்பான அசிரியர் ஒருவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(எ-6)

#### வடக்கு - கிழக்கில் அமைந்துள்ள

# ஆசிரிய வளநிலையங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை

வலிகாமம்தெற்கு,மார்ச்28

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரிய நிலையங்கள் கல்வி அமைச்சினால் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டுவரும் பத்து ஆசிரிய நிலையங்கள் கல்வி அமைச்சினால் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விச் செயற்றிட்டப்பணிப்பாளர் என்.டி.யாப்பா தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுடைய வான்மையை விருத்தி செய்யும் தொடரும் கல்வி நிலையங்களாக விளங்கும் ஆசிரிய வள நிலையங்கள் உலக வங்கியின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்றும் -

சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைய ஆசிரியர்களின் வாணமையை விருத்தி செய்யும் நோக்குடன் இந்த நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளது என்றும் -

அவர் அறிவித்துள்ளார்.

(எ-152)

# விபத்துக்கள் அதிகரிக்க இதுவும் ஒரு காரணம்

குடாநாட்டின் வீதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசார வாசகங்களை அழிப்பதற்கு பொலீஸார் கழிவு எண்ணெயை அதன் மீது ஊற்றுகின்றனர் என்றும் -

இதனால் வாகனங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் கழிவு எண்ணெயில் வழுக்கி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வேட்பாளர்கள் விருப்புவாக்கு வேட்டைக்காக தமது எண்களை வீதிகளில் வர்ணப்பூச்சினால் பொறித்து விட்டுச்செல்கின்றனர். தேர்தல் விதிமுறைகளுக்கு இது ஒவ்வாத நடவடிக்கை என்பதால் பொலீஸார் இரவோடு இரவாக அவற்றின் மீது கழிவு எண்ணெயை ஊற்றிவிட்டுச் செல்கின்றனர். மறுநாள் காலை அந்த வீதி வழியேசெல்லும் வாகனங்கள் கழிவு எண்ணெயில் வழுக்கி நிலைகுலைய நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

# பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக செயலாற்றுகைத் திட்டம் தயாரிக்குக!

## உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யவேண்டிய துறைகள் தொடர்பாக சுயமதிப்பீடு மூலமாக செயலாற்றுகைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்துக்கொள்ளுமாறு உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தமது பகுதி அதிபர்களைக் கேட்டுள்ளார்.

பாடசாலை அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பல்வேறு துறைகளுள் மூன்று தொடக்கம் ஐந்து விடயங்களைத் தெரிவு செய்து அவற்றைத் தத்தமது தரங்கணிப்படு நராக செயற்பாடுபவர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுடன் அவற்றை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அபிவிருத்தி அமுலாக்கத் திட்டம் தொடர்பான துறைகளை தெரிவு செய்யும்போது தற்போது பாடசாலையில் விருத்தி வேண்டி நிற்கும் துறைகளை தெரிவு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் -

அதுவும் ஓராண்டு காலத்தினுள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கிடைக்கச் செய்வது அதிபரின் பொறுப்பாகும் - என்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

# புலம்பெயர்ந்து வசிக்கும் எம்மவர்கள் சமூகப்பணிக்கும் உதவவேண்டும்

புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வசிப்பவர்கள் இங்குள்ள தங்கள் குடும்ப மேம்பாட்டுக்காக உவிகள் செய்து வருகின்ற அதேவேளை, கல்வி, சமயம் மற்றும் சமூகப்பணிகளுக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும். கல்விப்பணியாற்றிய பெரியார் ஒருவரின் ஞாபகார்த்தமாக அவரது வெளிநாட்டில் உள்ள கும்பத்தினர் இப்பாடசாலையில் பொதுநோக்கு மண்டபம் ஒன்றை சுமார்15லட்சம் ரூபா செலவில் நிறுவிக்கொடுத்துள்ளதை பாராட்டாமல் இருக்கமுடியாது. இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன்.

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் முன்னாள் அதிபர் அமரர் வித்துவான் மு.விருத்தாச்சலத்தின் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட ஒன்றுகூடல் மண்டபத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது.

இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான தொரு மண்டபம் நிறுவப்பட்டிருப்பது ஒரு முன்மாதிரியான ஏனையவர்களும் பின்பற்றக்கூடியதொரு நல்ல செயற்பாடு என்று கருதுகிறேன். பாடசாலையும் பாடசாலைச் சமூகமும் ஒன்றிணைந்து அபிவிருத்திகளை முன்வைக்கும் போதுதான் ஒருபாடசாலையின் கல்வி மேம்பாடு அடையமுடியும்,

இங்கு நிறுவப்பட்ட இந்தப் புதிய மண்டபத்தை இப்பகுதியில் உள்ள ஏனைய நிறுவனங்களும் மக்களும் தங்கள் கலைகலாசார மற்றும் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய நிலையில் அமைத்துள்ளார்கள். இதனை உரிய முறையில் பயன்படுத்தி வளம்பெற வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், பண்டிதை பொன். பாக்கியம், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ந.சிவசண்முகமூர்த்தி, சிவஸ்ரீ சி.பிறைசூடிக்குருக்கள் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

(எ-135)






வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றுவதை முதலாவது படத்திலும், தொழிலதிபர் பொ. இராசதுரை மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். முதலாவது படத்தில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் தி.செல்வரத்தினம், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜ சுந்தரம், டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் ஆகியோரும் உள்ளனர்.

*(படங்கள்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# தவக்காலச் சிந்தனை

## நினைவுகள் என்றும் சாவதில்லை

**உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்** *(யோவா.11:25)*

**முப்பத்தி மூன்றாம் நாள்**

சாவு பேரிழப்பு. அது ஈடுசெய்யமுடியாத இழப்பு. நண்பர், உடன் பிறப்புக்களுக்கு சொல்லொனாத் துயரத்தையும் தாங்கமுடியாத வேதனையையும் பிறப்பிப்பது இறப்பு ஆகும். வீட்டிற்கு வீடு வாசற்படி என ஒவ்வொரு மனிதரும் சாவு அனுபவத்திற்கு விதிவிலக்கு அல்ல. இயேசுக் கிறிஸ்துவின் ஒளியில் சாவு நிகழ்வை பார்க்குமிடத்து அது வெறுமனே உடலை விட்டு உயிர் பிரியும் துயரமான வேளை மட்டுமல்ல, இறப்பின் துயரத்தால் இயேசுவும் கண்ணீர்விட்டு அழுதார். அழுகை அன்பின் வெளிப்பாடு. அதே அன்பின் நிமித்தம் ஒருவர் அடுத்து இருப்பவருக்கென சாவு அனுபவங்களை தன்மீது மனமுவந்து சுமந்து கொள்ளும்பொழுது சாவு ஒரு தியாக வேள்வியாகிறது. பெற்றோர் பிள்ளைகளுக்கென ஒருவர் மற்றவருக்கென அன்பின் நிமித்தம் துன்பங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற பொழுது சாவு அன்பின் வெளிப்பாடு ஆகிறது. அன்பின் நிமித்தம் ஒருவர் அடுத்திருப்பவருக்கென தம்மை கையளிக்கும் பொழுது அவர் இறப்பினும் வாழ்வார். நினைவுகள் என்றும் சாவதில்லை.

*சுவாமி ஜீவா போல் அ.ம.தி.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை மாணவி

**செல்வி ரேகா திருநாவுக்கரசு**

அவர்கள் க.பொ.த.(சா.த.) பரீட்சை 2003இல்
10A யைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.
அவர்களையும் சித்தியெய்திய மற்றைய மாணவச் செல்வங்களையும்
பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க.பா.,
செம்மணி வீதி, நல்லூர்.

(30124)(34-14-19-24)

## பாராட்டி வணங்குகிறோம்



நேற்று (27.03.2004) யாழ். பல்கலைக்கழகத்தில்
கௌரவ கலாநிதிப் பட்டம்பெற்ற நவாலியூர் **செல்லப்பா ஜெயரத்தினம்**
அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

செ.உதயசந்திரன் குடும்பத்தினர்
நவாலி.

(30110)(34-14-19-24)

## கொழும்பு பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு,மார்ச்28

ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அமைதியின்மை காரணமாகவே பல்கலைக்கழகத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் துணைவேந்தர் தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதியன்றே விடுமுறை வழங்கப்படவிருந்தது. எனினும், தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டே பல்கலைக்கழகம் மூடப்பட்டது. விடுதியிலுள்ள மாணவர்களும் வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தைச் சூழப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## தடுப்பூசி மருந்து இல்லை

தென்மராட்சி,மார்ச்28

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் விசர்நாய்க்கடித் தடுப்பூசி மருந்து முடிவடைந்துள்ளது.

இதனால், விசர்நாய்க் கடிக்கு இலக்காகும் தென்மராட்சிப் பிரதேச மக்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் சென்று தடுப்பூசி மருந்து ஏற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 28-03-2004

HAPPY BIRTHDAY



யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைச் சேர்ந்த
ஜெயக்குமார் - சுபாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**அக்ஷயன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கனடாவில் கொண்டாடுகின்றார்.

செல்வன் அக்ஷயன் அவர்களை அன்பு மாமா. அம்மம்மா. புட்டன். பேரன் - பேரின்பராஜா. பேர்த்தி - ராஜி. பிரண்ணா மாமி. சித்தப்பாமார். பிரணவன். பிருந்தா மற்றும் அப்பப்பா. அப்பம்மா ஆகியோர் பல்கலையும் கற்றுச் சீரோடுஞ்சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழவேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றார்கள்.

(30105) (24-14-19)

தகவல்: பேரின்பராஜா.

உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மங்களகரமான திறப்புவிழா

அன்புடையீர்!

மங்களகரமான சுபானு வருடம் பங்குனித்திங்கள் 15ஆம் நாள்
இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிமுதல்
10.45 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

இல. 177, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

**ஸ்ரீ ஐயப்பன் அச்சுப்பட்டறை அன்**
**விஜய் டை ஓர்க்ஸ்**

என்னும் ஸ்தாபனத்தைத் திறந்துவைக்கவுள்ளோம் என்பதை
அன்பர்கள். நண்பர்கள். வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம். எங்களிடம் நகைவேலைகளுக்குரிய அனைத்து
அச்சுகளும் டைகளும் உள்ளன. உங்களுக்குத் தேவையான புதியபுதிய
டிசைன்களில் செய்துதரப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

177. நாவலர் வீதி. யாழ்ப்பாணம் (நாவலர் பாடசாலைக்கு அருகில்).

விவரங்களுக்கு: K.மாரிமுத்து ஆச்சாரி.

திரு.M.விஜயகுமார் உரிமையாளர்.

(24-14-19) (30108)


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## திருமண வரவேற்புபசார அழைப்பு





மணமகன்
கோபாலகிருஷ்ணன் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**சதீஸ்குமார்**
அவர்களுக்கும்



மணமகள்
சின்னராசா தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
**நளினி**
அவர்களுக்கும்

நேற்று (27.03.2004) சனிக்கிழமை நடைபெற்ற திருமாங்கல்யதாரண வைபவத்தை
முன்னிட்டு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம்
இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிதொடக்கம் நடைபெறும்.
இந்நிகழ்வுக்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு
கேட்டுக்கொள்கின்றோம். அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்கள்
இந்த அறிவித்தலை மன்னிப்புடன் ஏற்று வருகைதரும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி,
மாலியாவத்தை,
சங்கானை.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி கோபாலகிருஷ்ணன்
குடும்பம்.

(30112) (24-14-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் கௌரவ கலாநிதிப் பட்டம்பெற்ற
நவாலியூர் கலாநிதி **செல்லப்பா ஜெயரத்தினம்**
அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

சுப்பிரமணியம் - சத்தியபாமா குடும்பத்தினர்.
நவாலி.

(30109)(34-14-19-24)

## வாழ்த்திப் பணிகின்றேன்



## உயர்திரு. து.நடராஜலிங்கம் S.L.P.S. - 1

(ஓய்வுபெற்ற அதிபர், யா/சன்மார்க்க ம.வி.)

வானுயர ஓங்கி நிற்கும்
அறிவாலயமாம் யாழ்
சன்மார்க்க மகா வித்தியாலயமதை
வழி நடத்தி உயர்த்திய வள்ளல்
திருவாளர் து.நடராஜலிங்கம் அவர்களே!

தாங்கள்
அகவை அறுபதில்
ஞாலம் போற்ற நீடூழி
இனிது வாழ்கவென
வாழ்த்துப் பகருகின்றேன்.

தகவல்: திரு.மு.சிறீஸ்கந்தராஜா
உரிமையாளர் - லக்ஷன் வீடியோ,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(30111) (24-14-19)

வாழ்த்துபவர்:
க.நரேந்திரன்
(பழைய மாணவன் - லண்டன்).

## Greetings



**Dear Kunaratnam Suresh,**

Heartiest Congratulations on winning the Rockefeller Foundation scholarship for further studies in the field on 'Medicine' in Russia. This scholarship will fullfill your long standing ambition of undergoing advanced studies in the field of Human Biology in Russia. Your studies abroad will make you a surgent in your field and the country will surely benefit from your ability.

**WISH YOU A HAPPY TIME IN RUSSIA.**

yours sincerely friends and Classmates
**(Jaffna Hindu College).**

(30121)(34-14-19-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக்
கொண்டவரும் வேலணை மேற்கு கிராமோதய
சபையின் முன்னாள் செயலாளரும்
சிறந்த சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப்
பெற்றவரும் தற்பொழுது எங்கள் கிராமத்திற்குக்
கிராம அலுவலராகக் கடமையாற்றுபவரும்
சமூக சேவையாளருமான

**திரு. காராளசிங்கம் கணேசலிங்கம்**

அவர்கள் அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் முதலாம்தர கிராம அலுவலராகப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரது சேவையானது நல்லமுறையில் சிறப்புற்றுத் திகழவும் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்றுப் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழவும் எல்லாம்வல்ல சிற்பனை முருகன் துணை புரிய வேண்டுகிறோம்.

வேலணை தெற்கு விவசாய சம்மேளனம்,
வேலணை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
வேலணை மேற்கு நாவலர் சனசமூக நிலையம்.

(30088) (34-14-19-24)

# அரச ஊழியருக்கு நஷ்டஈடு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவது தொடருமா?

செய்திக்கட்டுரை

பேரின்பம்

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வன்முறைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தமக்கான நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமெனக்கோரி விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர். இழந்துபோன சொத்துக்கள், இடிந்த வீடுகள் தொடர்பாகவே இந்த விண்ணப்பங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டன.

தீவகத்தில் இருந்து 1990 - 1991 காலப்பகுதியில் உடுத்த உடையுடன் வெளியேறியவர்கள், பல வருடங்களின் பின்னர் ஊர்திரும்பிய பொழுது தமது வீடு வாசல் உட்பட, பொருள்கள், கால் நடைகள், சொத்துக்கள் அனைத்தும் முற்றாக அழிந்திருந்ததையே கண்டனர்.

1995இல் 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் பொழுது, யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சியிலும் இதே நிலைதான் ஏற்பட்டது. ஆனையிறவு கைப்பற்றப்பட்ட பின்னர் 2000ஆம் ஆண்டில் தென்மராட்சியில் இடம்பெற்ற அழிவுகள் சொல்லும் தரமானவை அல்ல.

இந்த விலைமதிக்கமுடியா இழப்பிற்கு ஒருசிறு நிவாரணத்தைப் பெறுவதற்காக, பலமுறை கிராமசேவையாளர் அலுவலகம், பொலீஸ் நிலையம், கச்சேரி மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அலைக்கழிந்து திரிந்து பல்வேறுபட்ட சிரமங்களுக்குப் பின்னர் ஒருவாறு 'றான்' அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

விண்ணப்பித்தவர்களுக்குக் கோவை இலக்கங்களுடன் 'கொடுப்பனவுகள் காலகதியில் ஒழுங்குமுறையில் அனுப்பிவைக்கப்படும்' என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டிருந்தது. பல வருடங்களுக்கு மேலாகியும், பலருக்கு இதுவரை எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

வீடு இடிந்தவர்கள் அவற்றைத் திருத்துவதற்காகக் கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்றும் ஒன்றும் கைகூடாத நிலையில் திரும்பி உள்ளனர். இந்தக் காலத்தில் கொழும்புக்குச்சென்று வருவது என்பது செலவோடு சம்பந்தப்பட்ட விடயம்.

இதேவேளை, முதன்முதலில் விண்ணப்பித்தவர்கள் நஷ்டஈட்டைப் பெற முடியாதிருக்க, காலந் தாழ்த்தி விண்ணப்பித்தவர்களது கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது நியாயமா? மூவாயிரம், நான்காயிரம் தொடர் எண்களைக் கொண்ட கோவைகள் கிடப்பில் கிடக்க, அதற்கு மேற்பட்ட எண்களுக்குரிய கோவைகளுக்கு கொடுப்பனவுகள் சரிசெய்யப்பட்டுள்ளதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

இந்த ஒழுங்கீனமான நடைமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படுவது யுத்தத்தால சீரழிந்த இந்த நாட்டிற்கு ஆரோக்கியமானதல்ல.

மேலும் வறுமைக் கோட்டிற்கு மேற்பட்டவர்கள் என்று கருதப்படும் அரச ஊழியர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் எந்தவிதமான ஒரு உதவிக்கோ அன்றி நிவாரணக்கொடுப்பனவிற்கோ அருகதையற்றவர்களாகவே கொள்ளப்படுகின்றனர்.

இடம்பெயர்ந்திருந்த காலத்தில், அகதி முகாங்களிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்திருந்த அரச ஊழியர்களுக்குக் கூடார விரிப்புக்களோ, பாயகளோ அல்லது தண்ணீர் எடுக்க ஒரு பிளாஸ்ரிக் வாளியோ மறுக்கப்பட்டு இருந்ததென்பதைக் கொடுப்பனவோடு தொடர்புடையவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவர்களும் அரச ஊழியர்கள் அல்லவா?

காலதாமதமும், பாரபட்சமும் பாதிகப்பட்டவர்களுக்கு ஒரு போராட்ட ஊக்கியாக அமைந்துவிடப்போகிறது என்பதை மறுப்பதானது கடினமானதாக இருக்கப்போகிறது. ★

## தலையில் தாக்கப்பட்டவர் காயம் !

வாய்த்தர்க்கம் முற்றியதால் குடும்பஸ்தர் ஒருவர் கொட்டன் அடிக்கு இலககாகித் தலையில் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த கதிரன் இரத்தினம் (வயது49) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சாவகசசேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஐ-117)

## ரயிலுக்குக் கல்வீச்சு

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் இரவு ரயிலுக்கு வாழைச்சேனைப் பகுதியில் வைத்துக் கல்வீச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக இவ்வாறான கல்வீச்சுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 22ஆம் திகதி இரவு கொழும்பு நோக்கிச் சென்ற ரயில்மீது ஓட்டமாவடியில் வைத்து நடத்தப்பட்ட கல்வீச்சின்போது மட்டக்களப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவன ஊழியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதுதொடர்பாக அவர் வாழைச்சேனை பொலீஸ் நிலையத்திலும் ரயில்வே பாதுகாப்புப் பகுதியிலும் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

## காரைநகரில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளை அரச அதிபர் பார்வையிட்டார்

காரைநகர்,மார்ச்28

காரைநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளையும், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளையும் யாழ் மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அண்மையில் காரைநகருக்கு விஜயஞ்செய்த யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் செயலக அதிகாரிகள் காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் சகிதம் காரைநகர் கரையோரக் கிராமங்களுக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்பட வேணடிய அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டனர்.

அத்துடன், அங்கு வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அரச அதிபர் தலைமையிலான குழுவினர் அவர்களிடம் நேரடியாகக் கேட்டு அறிந்துகொண்டனர்.

காரைநகர் தோப்புக்காட்டில் இந்து கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கண்ணாடி இழைப் படகுகள் தயாரிக்கும் தொழிற்சாலை, இரண்டாவது உலக இந்து மாநாட்டின ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட வீட்டுத் திட்டம், காரைநகர் மத்தி முதியோர் இல்லம் என்பவற்றையும் இக்குழுவினர் பார்வையிட்டனர்.

காரைநகர், தோப்புக்காட்டில் சுமார் 200 குடும்பங்கள் தற்போது மீளக்குடியமர்ந்துள்ளன. இங்கு குடிதண்ணீருககுப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் - கடந்த வருடங்கள் போன்று இம்முறையும் பவுஸர் மூலம் குடிதண்ணர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - இப்பகுதி மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர். (எ-73)

## பிரதேச வாதத்தைத் தூண்டி இன உணர்வைக் கூறுபோடாதீர்!

### அன்னை பூபதி நினைவு நிகழ்வில் வலியுறுத்து

வலிகாமம் தெற்கு,மார்ச்28

தமிழ்த் தேசியவாத உணர்வை உயிர்ப்புடன் கட்டி எழுப்ப வேண்டிய இன்றைய காலகட்டத்தில் பிரதேச வாதத்தை எழுப்பி இனஉணர்வைக் கூறுபோட வைக்கும் செயல் கண்டிக்கப்பட வேண்டியது.

யாழ் தேசிய கல்வியியற கல்லூரியில் நடைபெற்ற அன்னை பூபதியின நினைவுதின நிகழ்வில் உரையாற்றிய கல்லூரியின் உபபீடாதிபதிகளில் ஒருவரான பா.தனபாலன் மேற்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

உபபீடாதிபதி தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இனவாத வல்லாதிக்கத்தில் இருந்து விடுதலை வேண்டி நிற்கும் வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் தமிழர் தாயகத்தைப் பிரிக்கவிடமாட்டார்கள். ஒன்றுபட்ட தமிழர் தாயகத்தின் விடுதலைக்காகத் தமது உயிரை அர்ப்பணித்த அன்னை பூபதியின் வேணவாவினை நிறைவேற்றுவது தமிழ்மக்களாகிய எம் அனைவரதும் கடமையாகும்.

சர்வதேசத்தில் தேசிய இனங்கள் எல்லாம் தமது அரசுத் தன்மையைப் பெறுவதற்காகப் போராட்டம் நடத்தி வருகின்றன. ஈழத்தமிழரின் அரசுரிமையைச் சர்வதேச உலகம் அங்கீகரிக்கும் வகையில் தமிழ்மக்களின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் வரப்போகின்ற பொதுத்தேர்தல் மூலம் உணர்த்த வேண்டும்.

இதுவரை காலமும் எமது தேச விடுதலைக்காகச் செய்யப்பட்ட தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் யாவற்றையும் அர்த்தமுள்ளதாக்குவதற்கு இன்றைய தேர்தல் தமிழ்மக்களுக்கு வாய்ப்பளித்துள்ளது.

16 ஆண்டுகளுக்கு முன் தமிழர் தாயக விடுதலைக்காகப் போராடித் தமது உயிரை அர்ப்பணித்தவர் அன்னை பூபதி. கடந்த காலங்களில் எல்லாம் அரசியல் ரீதியான பொருளாதாரச் சுரண்டல்கள், கல்விச் சுரண்டல்கள், இனவன்முறைகள், பாதுகாப்பற்றநிலை, பேரினவாதிகளின் தந்திரோபாய ஒடுக்குமுறைகள் என்பவற்றால் வடக்கு - கிழக்கு, மலையக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். புவியியல் ரீதியாகத் தமிழர் தனிமைப்படுத்தப்பட்டனர். இவ்வாறெல்லாம் பாதிகப்பட்ட தமிழ்மக்கள் ஓரணியில் சேரும் வேளையில் பிரதேசவாதத்தைத் தீர்க்க தரிசனம் இன்றி - தூரநோக்கின்றி - தமது தனிப்பட்ட சுயநலன்களுக்காக வெளிப்படுத்துபவர்கள் தமிழ்த்தேசத துரோகிகளாகவே கொள்ளப்படுவர் - என்றார். (எ-152)

## வெறும் கட்டடங்கள் வேண்டாம்; உடல் வலுவுள்ளவர்கள் தேவை!

### விளையாட்டு விழாவில் யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

வலி.மேற்கு,மார்ச்28

வெறும் கட்டடங்களைக் கட்டி எழுப்புவதிலும் பார்க்க, இளைஞர், யுவதிகளின் உடல், உள்ளத்தின் வலிமையைக் கட்டி எழுப்ப வேண்டியது அவசியம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவின் தடகள விளையாட்டு விழா அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. இந்தவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொல்டு உரைநிகழ்த்தியபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர்,

யாழ். மாவட்டத்தில் பல பொது நிறுவனங்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றன. இதனைவிட பாடசாலைகளில் விளையாட்டுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பிரதேச ரீதியாக நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டி ஒரு விழா அல்ல. பல்வேறு விளையாட்டுக்களும் பலதரப்பட்டவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற வீரர்கள், வீராங்கனைகளின் தரத்தை, திறமையை இனங்கண்டு அதற்கான பயிற்சிகளை அளிப்பதற்கு அரசினால நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பலர் இங்கே இருக்கின்றனர்.

தத்தமது பிரதேசங்களில் இலைமறை காயாக இருக்கின்ற விளையாட்டு வீரர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு நவீன பயிற்சி அளித்து விளையாட்டு உலகத்திலேயே அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதே இந்த உத்தியோகத்தர்களின் தலையாயப்பணி.

அந்த அடிப்படையிலே சங்கானைப் பிரதேச செயலர் இந்தப் பிரதேசத்திலுள்ள பல்வேறு விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்களை ஒவ்வொரு ஒவ்வொரு துறையாகத் தெரிவு செய்து பிரதேசரீதியிலான விளையாட்டுப் போட்டியை நடத்தி முடித்துள்ளார். இதிலே நீங்கள் காட்டிய திறமை பாராட்டுக்குரியது. எதிர்காலத்திலே சிறந்த வீர, வீராங்கனைகள் இந்த மாவட்டத்திலே உருவாகுவதற்கான பல வளங்களை - பல திறமைகளை நீங்கள் வெளிக்காட்டியுள்ளீர்கள். இதற்காக நான் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

வலிகாமம் மேற்குப் பிரதேசம் விவசாயமும், விவசாயத்தோடு தொடர்பான தொழிலையும், கடற்றொழிலையும் செய்கின்ற மக்கள் வாழ்கின்ற பிரதேசம். இந்தப் பிரதேசத்திலே விளையாட்டு விரர்களை உடல் வலிமையுடனும், உள வலிமையுடனும் உருவாக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

கடந்த இரண்டு வருடமாக இந்த மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய முடியாமற்போய்விட்டது. ஏனெனில், அழிந்து போய் இருந்த கட்டடங்களை புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையே முதலில் ஏற்பட்டது. என்றாலும் கூட வெறும் கட்டடங்களைக் கட்டுவதிலும் அல்லது வீடுகளைக் கட்டுவதிலும் பார்க்கப் பாதிக்கப்பட்ட மக்களுடைய உடலையும், உள்ளத்தையும் அபிவிருத்திசெய்து திடகாத்திரமான எதிர்காலத்தை அவர்கள் நிச்சயத்துக்கொள்வதற்கான வழிவகைகளை செய்வது முக்கியமாகும்.

அந்த அடிப்படையிலே பல்வேறு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு வகையான விளையாட்டுத்துறைகளில் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அதற்கான பயிற்சிகளையும் எதிர்காலத்திலே அளிப்பதற்கான ஓர் அத்திவாரம் இப்பொழுது இடப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு இந்தப் பணியை செய்து வருகின்றார்கள். அவர்கள் உலகத்திலோ அல்லது இலங்கையிலோ பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டிருக்கின்ற விளையாட்டுத்துறை தொடர்பான அபிவிருத்தி பற்றிய பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். அந்தப் பயிற்சிகள் உங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்படக்கூடிய சிறந்த விளையாட்டு வீரர்கள் இருக்கின்றனர். ம..வட்ட ரீதியாக சிறந்த ஒரு விளையாட்டுக் குழாமை உருவாக்கவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாண மட்டவிளையாட்டுப் போட்டியில் எமது மாவட்ட விளையாட்டு வீரர்களின் திறமைகள் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றார்.

சகல விளையாட்டுக்களிலும் பங்கு பற்றி அதிக புள்ளிகளைப் பெற்று வட்டு., சங்கரத்தை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (எ-175)

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் மாகியப்பிட்டி வீதி புனரமைப்பு

வலிகாமம்தெற்கு,மார்ச்28

சுன்னாகத்தில் இருந்து மாகியப்பிட்டி வரை செல்லும் பிரதான வீதியில் காணப்படும் பாரிய குழிகளை மண்கொண்டு சீர்செய்யும் பணியினை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமையால், வீதியின் பல இடங்களிலும் பாரிய குழிகள் காணப்படுகின்றன. இவை பொதுப் போக்குவரதுக்குப் பெரும் இடையூறுகவும் உள்ளன.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு பலமுறை இப்பகுதி மக்கள் உரியவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

மேற்படி பிரதான வீதியில் போக்குவரத்துச் சேவையில் பஸ்களும் தனியார் பஸ்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. பிரதான பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள், சுன்னாகம் சந்தைக்குச் செல்லும விவசாயிகள், வியாபாரிகள், கொள்வனவாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த வீதியின் சீர்கெட்டநிலையினால் பெரிதும் அவலத்தைச் சந்தித்து வந்துள்ளனர்.

பொதுமக்களின் நன்மைகருதி சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் இவ்வீதியில் காணப்படும் குழிகளைக் கிரவல் மண்கொண்டு நிரப்பிச் சீர் செய்து வருகின்றனர். லயன்ஸ் கழகத்தினரின் இந்தச் சேவையைப் பொது மக்கள் பலரும் பாராட்டிவருகின்றனர். (எ-152)



சாவகச்சேரி கல்வயல் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அண்மையில் தேசிய எழுச்சிப் பேரவையினால் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் பழமரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கல்வயல் புலூட்டையன பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெற்ற இநத நிகழ்வில் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் பயனாளி ஒருவருக்கு பழமரக்கன்று வழங்குவதைப் படத்தில் காணலாம். படத்தில் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத்தும் உள்ளார்.

(படம்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

நீங்கள்,
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? ... உடன் நிவாரணி

# "மதுமேகரணி"
# "MADHUMEAHAHARANEE"

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில் அறிந்துகொள்ளலாம்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,
பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்
**சிவா நறுமணப்பூங்கா**
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

SRI LANKA AYURVEDIC-
CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

(சி-33909)(24-14-19) குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்


# கண்ணீர் அஞ்சலி

பரமேஸ்வராக் கல்லூரியின் காலஞ்சென்ற முன்னாள் அதிபர்
சிவபாதசுந்தரம் அவர்களின் அன்பு மனைவி
**திருமதி செல்வரட்ணம் சிவபாதசுந்தரம்** அவர்கள் 24-03-2004 புதன்கிழமை கொழும்பில் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகிறோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைக் கூறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நந்தாவில்,
கொக்குவில் (C/34114)(40-16-18)

**பொன்னம்பலம் குடும்பம்,**
**நாதன் குடும்பம்.**

# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 07 |
| 06 | 04 |
| 1940 | 2003 |



## அமரர் கந்தையா செல்வரட்ணம்


திதி-ஷஷ்டி

பாசமிகு அன்புத் தந்தையே!
எம் மீது அன்பும், பாசமும் புகட்டி அறிவூட்டி, குடும்பத்தின்
ஒளிவிளக்காய் இருந்து எங்களுக்கு நல்வழி காட்டிய
அன்புத் தெய்வமே, ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு என்றும் அகலாது
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அச்செழு,
நீர்வேலி. (30127)(38-16-18)

**தங்கள் நினைவால் வாழும்:**
**மனைவி, பிள்ளைகள்.**


# யாழ்.மக்களே! உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!
# உடனே விரையுங்கள்!




**hager**

+ பிரான்ஸ் உற்பத்திகள்
+ 5 வருட உத்தரவாதம்

**DAVEY**

+ ஆஸ்திரேலிய உற்பத்திகள்
+ 2 வருட உத்தரவாதம்





Taps and Acceories.

+ மலேசியா உற்பத்திகள்
+ பதிலீட்டு உத்தரவாதம்
ஆயுள் முழுவதும்

dki

Importer
General sales Co.Ltd
No 7, Station Road, Col.3
T.P.: 2574511

**Distributor**
Jaffna Electricals,
6, stanley Road,
Jaffna.
(C/33904) (16-18)


021-222 2353
021-222 5766
fax : 021-222 2552



LG

# ஈடற்ற டிஜிட்டல் வீட்டுச்சாதனங்கள்

பாரெங்கும் வாங்கப்படும் பலவர்ண டீ.வி க்கள்
குடும்பமாய் குதூகலிக்க இல்லத்தில் வெள்ளித்திரை!
சகலவித நவீன ஊடகங்களுடனும் இணையக்கூடியவை.
அகிலமே உங்கள் அகத்தில்!!



## 20"/ 14" மாதிரிகள்

- ★ Golden Eye செயற்பாடு சூழலின் வெளிச்சத்திற்கேற்ப படத்தை செப்பனிடும்
- ★ முழுத்தொலைவு கட்டுப்பாட்டுக் கருவி, இருப்பிடத்திலிருந்தே தேவையானதை கட்டுப்படுத்த உதவும்.
- ★ 2 ஒலிப்பெட்டிகள்
- ★ 2ஆடியோ/வீடியோ உட்புக வழிகள். CD/VCD/DVD ஆகியவற்றுடன் இணைய உதவுவன.
- ★ பொருள் உள்ளவரை மட்டான அளிப்பு




## 21" ப்ளட்ரோன் (Flatron)

செயற்பாட்டு சக்தியுடன்
தட்டைத்திரையில் தத்ரூபமான 350 watts
ஒலிவன்மையுடைய தெளிந்த படங்கள்.

- ★ இரட்டை டியுனர் (PIP)
- ★ டிஜிட்டல் turbo search
- ★ நிகழ்ச்சி ஒழுங்குப்படுத்தல்
- ★ சனல் பெயரிடல், நிரல் படுத்தல்
- ★ 200 நிகழ்ச்சி சேகரிப்பு
- ★ 5 ஒலி நிலைகள்
- ★ தன்னியக்க, சத்தம் சமநிலையாக்கம்
- ★ 15 விளையாட்டுக்கள்

இன்னும் பல



உலகப் புகழ் சலவை இயந்திரம்
இல்லத்தரசியின் கடமையை இலகுவாக்கும், இனிதாக்கும்!
பகுதி மின்னியக்கமுடைய (semi Automatic)
1.5/3.5 லீட்டர் மாதிரிகள்

## Wp-730 (po)

★ நவீன உருவமைப்பு ★ 3 வித கழுவும் வேகம் தெரிவு
★ நீர் செலுத்தும் கருவி ★ சாதாரண சுழற்றி (pulsator), புடைவையை நன்கு வெளுக்கும், ஆடைக்கும் சேதம் விளையாது
★ உலோக உறை
★ 4.5 கிலோ கொள்வனவு
wp -730 (po) -3 கிலோ கொள்வனவு.



குடாநாட்டுக்கே உகந்த
உணவுப் பதார்த்தங்களைப் பத்திரமாய் பராமரிக்கும்
குளிர்ப்பதனப்பெட்டிகள் (Refrigerators)
171/222 லீட்டர் கொள்வனவுடையவை.

## LR-191 GVF

உணவுச்சத்து பேணும் (PN) முறை
★CFC அற்றது பகுதி மின்னியக்கத்தால் உறைபனி அகற்றல் ★ உறைபனியற்றது ★ கவர்ச்சியான சுழற்கதவும் கைபிடியும் ★ FRESH ZONE குளிரூட்டப்பட்ட பகுதி
★ FIR (செந்நிற ஒளி) மேலும் LR-242 GVF இல்
★ குளிரூட்டும் கதவு ★ பல திசை காற்றோட்டம்
★ குளிரூட்டியுள்ளே ஒளி ★ 2லீ போத்தல், கொள்கலன்.

யாவற்றிற்கும் மேலாக விற்பனையின் பின் அரிய சேவை

இன்றியமையாதவை! என்றும் நிலைப்பவை!!

(C/33829) (41)

அபான்ஸ்



## அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!



வடகிழக்கு மாகாண மக்களை ஒன்றிணைத்து சமஷ்டி, தமிழீழம் வேண்டும் என்று குரல் கொடுத்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தம்மை சாத்வீக ரீதியாக முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அதன் தாற்பரியமே ஆயுதம் ஏந்திய இளைஞர்களின் போராட்டம்.

தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற தலைவர்களினால் கட்டி வளர்க்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கின்றது.


மூத்த தலைவராகிய திரு.ஆனந்தசங்கரியின் ஒரே நோக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி அழிக்கப்படக் கூடாது என்பதே. விடுதலைப்புலிகள்தான் அரசுடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர். அவர் தன் தெரிவினால் தமிழ்க் கூட்டமைப்பிற்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை. அதேவேளை தந்தை செல்வநாயகத்தால் ஜனநாயக ரீதியாகக் கட்டி வளர்க்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி ஓரங் கட்டப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றார்.

இதனை நிலைநாட்டுவதற்காக இன்று சுயேச்சைக் குழுவாகப் பூட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

**தமிழ் பேசும் மக்களே!** இந்த உண்மைகளைக் கருத்திற் கொண்டு திரு.ஆனந்தசங்கரியை ஆதரிப்பதன்மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியை மறக்கவில்லை என்பதையும் அதன் தலைவர்கள் செய்த தியாகத்தை மதிக்கின்றோம் என்பதையும் நிரூபிப்பதற்குப் பூட்டு சின்னத்திற்கே வாக்களியுங்கள்.

# திரு.வீ.ஆனந்தசங்கரி

(தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)



X 4

**தேசிய ஜனநாயகக் கட்சி**
**(தொழிலாளர் தேசிய சங்கம்)**



### ஒப்பந்தகாரர் தேவை

பருத்தித்துறையில் வாசிகசாலைக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு கட்டட ஒப்பந்தகாரர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.

**மு.சர்வானந்தன்,**
03, Sornasundaram Road,
Colombo - 6.
தொலைபேசி 011 - 2599798.
(30006) (21-14-19)



### ஒத்துமாறுதல்

பேராதனை/ மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களுக்கு 2004 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர் ஒருவர், 2004ஆம் ஆண்டு கலைப்பீட மெய்யியல் கற்கை நெறியை மேற்கொள்ள யாழ். பல்கலைக் கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவருடன் ஒத்துமாற விரும்புகிறார். பின்வரும் முகவரியுடன் உடனே தொடர்பு கொள்ளவும்.

இல. 16/8, கீழ்ராஜவீதி,
பதுளை.
தொ. பே. இல:-
0722-861688
0722-556535
(C/34104) (21-14-19-26)



### ஊடகமே உலகம்

(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி

**DIPLOMA IN MASS MEDIA**

**தபால் மூலம்**

இக்கற்கைநெறியை மேற்கொண்டு
**Dip. in. M.M.(Sri Lanka)**
சான்றிதழை பெற்றுக் கொள்ளுங்கள்

6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830

MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 1963 - 11 - 07



இறப்பு 2004 - 02 - 27

## அமரர் பவா வேலும்மயிலும்

அன்போடும் பண்போடும் அனைவரையும் அரவணைத்து
வாழ்ந்து மறைந்த உங்களை எங்களால் மறக்க முடியவில்லை!
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (28-03-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(30000)(21-19-14)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 06 . 1920



மறைவு 08 . 04 . 2003

## திருமதி சரஸ்வதி இளையகுட்டி

திதி: 28.03.2004

அன்பிற்கு இலக்கணமாம் எங்கள் அம்மா.
ஆறுதலின் சிகரமாம் எங்கள் அம்மா
பண்பின் இருப்பிடமாம் எங்கள் அம்மா
பாரினில் எமையீன்ற எங்கள் அம்மா
இனி எங்கே காண்போம் உங்களை நாம்?
இங்கே ஏங்கித் தவிக்கின்றோம் நீங்களின்றி!
அம்மா என்றழைக்க இனி யாருமில்லை எங்களுக்கு
எங்கும் நிறைந்திருக்கும் இறைவனடி குளிர்ந்திருக்க
இங்கு நாம் இறைஞ்சுகின்றோம் இறைவனையே!

யூனியன் சேர்விஸ் ஸ்ரேசன்.
இருபாலைச் சந்தி. கோப்பாய்.

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள்.**

(30010)(31-21-19-14)

## நீங்காத நினைவலைகள்

| 13 ஆம் ஆண்டு | 17 ஆம் ஆண்டு | 12ஆம் ஆண்டு |
|---|---|---|
| டாக்டர் **சி.வேலாயுதன்** | செல்வி **ப.இராமநாதன்** | திருமதி **ப.வேலாயுதன்** |
| (கண் வைத்திய நிபுணர்) | (ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) | |
| தோற்றம் 04.10.25 மறைவு 31.10.91 | தோற்றம் 24.06.26 மறைவு 05.04.87 | தோற்றம் 14.10.30 மறைவு 16.06.92 |

திதி: 28.03.2004

உனது அருளாலே உன் தாள் வணங்கி வேண்டுகிறேன்
இறைவா உன் அடி நிழலில் மறுபடி சந்திக்க அருள்வாய்

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(29857)

(34-21-19-14)

- சகோதரி.

# தமிழ் மக்களே!
# உங்களுக்கு ஒரு தேர்தல் வேண்டுகோள்!

இன்னுமொரு தேர்தல் நெருங்குகிறது. தமிழ் மக்களே, உங்கள் சொந்தப் புத்தியில் செயற்படுங்கள். உங்கள் தலைவிதியை மாற்றக்கூடிய தேர்தல் இது. இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை வீணாக்காதீர்கள்.

உங்களுக்குத் தெரிந்த வழியில் சென்று உங்கள் வாக்கைப் போடுங்கள். சாவடிகளின் அயலில் கோஷ்டிகளாய் நின்று உங்களைக் கெஞ்சுவர், உபதேசிப்பர், வெருட்டுவர் - எதற்கும் எடுபடாதீர்கள். மிரளாது பிடி கொடுக்காது, நிதானமாகவும் அசந்து போகாமலும் உங்கள் வாக்கைப் போடுங்கள்.

உங்களது வாக்காளர் அட்டை உங்களுக்குக் கிடைக்காமல் போவதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. வாக்களிக்க வாக்காளர் அட்டை அவசியமில்லை. உங்களது வாக்குச் சாவடிக்குத் தாமதியாது காலையிலேயே சென்று வாக்கைப் போடுங்கள்.

அர்த்தமில்லாத பயத்துக்கு ஆளாகாதீர்கள். வாக்களிக்குந் தறுவாயில் நீங்கள் தனிமையாகவே வாக்குச் சாவடிக்குள் நிற்பீர்கள். நீங்கள் யாருக்குப் புள்ளடி போடுகிறீர்கள் என்பதை யாரும் காணமுடியாது. துணிந்து வாக்களியுங்கள். தேர்தல் அடாவடித்தனத்துக்கு இடமளிக்காதிருக்கவே இரகசிய வாக்கெடுப்பு முறை உருவாக்கப்பட்டு உலகெங்கும் அமுல்படுத்தப்படுகிறது; அஞ்சாதீர்கள்.

இன்னார்தான் தேர்தலில் போட்டியிடலாம் என்பது ஜனநாயகமல்ல. நானாவிதமான அரசியல் கருத்துக்கள், மனிதர்கள் தேர்தல் களத்தில் மோத, தகுந்த கருத்தையும் தகுந்தவரையும் தேர்ந்தெடுப்பதே தேர்தல். இல்லையென்றால், ஏன் வாக்களிப்பு? இத்தனை செலவு? இத்தனை ஆரவாரம்? இத்தகைய மிரட்டல்களுக்கு முகங்கொடுத்து துணிந்து தேர்தலில் நிற்பவர்களையே ஆதரியுங்கள்.

தமிழர்களின் தேவை இனியும் தாமதியாது நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுதலும் தமது பிரதேசங்களில் பூரணமான ஜனநாயகத்தை நிலைநாட்டுதலுமே ஆகும். தமிழ் மக்களை யாரும் நிர்வகிக்கத் தேவையுமில்லை. அவர்கள் தம்மைத்தாமே நிர்வகிக்கக் கூடிய திறமைசாலிகள், பொது அறிவு மிக்கவர்கள், பண்பானவர்கள்.

தமிழர்கள் எந்த இனத்திற்கும் இளைத்தவர்களும் அல்லர். கொம்பர்களும் அல்லர். எமது மண்ணில் எம்மோடு பிறந்த முஸ்லிம் மக்களை அரவணைப்பது எங்கள் தலையாய கடன்.


தமிழ் மக்களே! நீங்களும் மற்ற மனிதர்களைப் போல சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டாமா? நன்றாகச் சிந்தித்து வாக்களித்து உங்கள் உள்ளக்கிடக்கையை பரந்த உலகத்துக்கு எடுத்துரையுங்கள் .

**- ஜனநாயக நீதிக்கான தமிழர்.**

(சி39738) (23-14)



அமரர் சுபத்திரன்



திருநாவுக்கரசு ஸ்ரீதரன்




அமரர் பத்மநாபா

**உங்கள் துன்பங்களை மூலதனமாக்கி ஆதாயம் தேட நினைப்பவர்களுக்கு வாக்களிக்காமல் உங்கள் துன்பங்களிலிருந்து விடுபட உதவுபவர்களுக்கு**

# வாக்களியுங்கள்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் (ஈ.பி.டி.பி.) கூட்டமைத்து வீணை சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான திருநாவுக்கரசு ஸ்ரீதரன் அவர்களை ஆதரியுங்கள்.



X 6

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்)**

# எக்காளத் தொனி

## மாபெரும் எழுப்புதல் கூட்டம்

வெற்றி நிச்சயம்

விடுதலை சத்தியம்

நோயினால் வருந்துபவர்களே!
பில்லி சூனியக்கட்டில் அகப்பட்டுள்ளவர்களே!
சமாதானம் இன்றி வாடுபவர்களே!
**அனைவரும் குடும்பமாக வாருங்கள்!**
**இலவசமாக விடுதலை பெறுவீர்கள்!!**

காலம்:
**2004 மார்ச் 28 இன்று ஞாயிறு மட்டும.**

நேரம்:
**மாலை 4.30 முதல்**
**இரவு 8.00 மணிவரை**

இடம்:
**திறந்தவெளி அரங்கு, யாழ்ப்பாணம்**
(யாழ். மத்திய நூலகத்துக்கு அருகில்).

☛ இன்று மார்ச் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு விசேஷித்த ஆராதனை இல.21, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள எக்காளத்தொனி ஆலயத்தில் நடைபெறும். இன்று வியாதியஸ்தர்களுக்காகச் செபிக்கப்படும்.



**பாஸ்டர் மேவின் குணசெல்வம்**
*ஸ்தாபகர் - நிர்வாகி*
எக்காளத்தொனி - இலங்கை.



**பாஸ்டர் இயன் கிறிஸ்ரென்சன்**
லண்டன்,
இங்கிலாந்து

தொடர்புகளுக்கு:
**எக்காளத் தொனி 021-2223632**
அனுமதி இலவசம்!

**யாவரும் வாருங்கள்! தெய்வ அருளால் விடுதலை பெறுவீர்கள்!**

உ

கணபதி துணை




# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய

# கொடியேற்ற விழாச் சிறப்புமலர்



## இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை



## மானியம்பதியிலே மருதமர நிழலிலே இருந்து தேனினுமினிய திருவருள் புரியும் கரிமுகத்தண்ணல்

இலங்கைத் திருநாட்டில் வடபால் அமைந்தள்ள சிவபூமியாம் யாழ்ப்பாணத்திலே மானியம்பதியிலே மருதமர நிழலிலே வீற்றிருந்து எம்மவர்க்கெல்லாம் அருளாசி வழங்கிக்கொண்டிருக்கும் மானிப்பாய் மருதடி விநாயகரது கொடியேற்றம் இன்றாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றையும் ஒருங்கே கொண்டு அமையப்பெற்ற இவ்வாலயமானது மேல்திசை நோக்கி கற்பக்கிரகமும், இரண்டு கோபுர வாசல்களும் கொண்டு ஆகம விதிப்படி அமைந்துள்ளது. அத்துடன், அந்தண சிவாச்சாரியர்களின் துணையுடன் முறையான கிரியைகளும் முறை தவறாது கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆலயமானது தன்னையும் சமூகத்தையும் வளப்படுத்தும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகின்றது. அந்தவகையில், வளர்ந்துவருகின்ற இளம் சந்ததியினர் மத்தியில் எமது சமய விழுமியங்களைத் தார்ந்து போகாது காத்துவரும் பணியில் அறநெறிப் பாடசாலையானது இரண்டாண்டுகளுக்கு மேலாகத் தனது அரும்பெருஞ் சேவையை ஆற்றிவருகின்றது.

அத்துடன், ஆலய மஹோற்சவ காலங்களிலும், விசேட தினங்களிலும் சமயச்சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

மேலும் தானத்தில் சிறந்ததாகிய அன்னதானமும் இங்கே அமைக்கப்பட்டுள்ள மருதடியான் அன்னதான மண்டபத்திலே தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. மஹோற்சவ காலங்களில் தினமும், விசேட தினங்களிலும் அன்னதானம் அடியார்களின் உதவியுடன் செவ்வனே நடைபெற்று வருகின்றது. அந்த வகையிலே இந்த ஆலயமானது சமய, சமூக, கலாசார விழுமியங்களைப் பேணி அன்பர்களுக்கு அரும்பணியாற்றி வருவது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இன்று (28.03.2004) பங்குனி 15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் எமது ஆலய மஹோற்சவமானது தொடர்ந்தும் பதினெட்டுத் தினங்கள் நடைபெறத்திருவருள் கைகூடியுள்ளது. அந்தவகையில், சித்திரை முதலாம் நாள் (13.04.2004) புது வருடப்பிறப்பன்று எம்பெருமான் பஞ்சமுக விநாயகர் அழகிய ரதத்திலே பவனிவரும் காட்சியினைக் காணும் பெரும்பாக்கியம் பெற்றவர்கள் இவ்வுலகில் இன்புற்றுவாழ எல்லாம்வல்ல எம்பெருமான் மருதடியானின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றேன்.

எமது ஆலயம் அடியார்களின் வழிபாட்டு நலன்கருதி புனர்நிர்மாணம்செய்யத் திருவருள் கிடைத்துள்ளது. ஆலய கருவறை, அர்த்தமண்டபம் யாவும் சிவாகமமுறையில் கருங்கற்களால் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. இந்திய மாமல்லபுர சிற்பக்கலைஞர்களின் துணையுடன் இப்பாரிய திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்பாரிய திருப்பணி வேலைகள் நிறைவேற உலகின் சகல பகுதிகளிலும் வாழும் விநாயகரின் மீளா அடியவர்களின் காணிக்கையை வேண்டி நிற்கின்றோம். "கிள்ளிக்கொடுத்தால் அள்ளித்தருவான்" எனவே, தேனினும் இனிய திருவருள் புரியும் கரிமுகத்தண்ணலின் மேல் அன்புகூர்ந்து இப்புண்ணிய பணியில் அனைவரும் பங்குகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஆகவே, நிதி உதவிசெய்ய விரும்பும் அன்பர்கள் ஆலயத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம் அல்லது இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் நடைமுறைகளுக்கு இலக்கம் C2279 என்ற இலக்கத்திற்கு காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ அனுப்பிவைக்கலாம்.

புல்லினாலைந்து கோடி புதுமண்ணாற் பத்துக்கோடி
சொல்லுமாங் காலந்தன்னிற் செங்கல் ஆயிரகோடி
அல்லினும் குழவாய் கேளாய் ஆலயம் மடங்கள் தம்மை
கருங்கல்லினார் சமைத்த பேர்கள் கயிலை விட்டகலார் மாதோ!

- சிவ புண்ணியத்தெளிவு

(சி-34002) (24-14)

- தர்மகர்த்தா சபையினர் -

## நிகழ்ச்சி நிரல்

(28.03.2004) ஞாயிற்றுக்கிழமை

காலை 8.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, மஹோற்சவ பூர்வாங்கக் கிரியைகள்

பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை.

12 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) உள்வீதி உற்சவம்.

(06.04.2004) செவ்வாய்க்கிழமை - மாலை 6.30 மணிக்கு மஞ்சத் திருவிழா

(12.04.2004) திங்கட்கிழமை - மாலை 6.30 மணிக்கு சப்பரத் திருவிழா

(13.04.2004) செவ்வாய்க்கிழமை

காலை 10 மணிக்கு ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விஷேச தீபாராதனை.

(வசந்த மண்டப பூஜை) தொடர்ந்து, பகல் 12 மணிக்கு இரதோற்சவம்

(தாரண வருடப்பிறப்பு சங்கிராந்தி பூஜை, பிற்பகல் 4 மணி 35 நிமிடம்)

(14.04.2004) புதன்கிழமை

காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவம், யாகமகா பூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், தீர்த்த பிரசாதம் வழங்கல்.

மாலை 3.30 மணிக்கு துவஜாவரோகணம் (கொடியிறக்கம்), திருவூஞ்சல், சண்டேஸ்வரர் உற்சவம், அருள்பிரசாதம் வழங்கல்.

**கொடியேற்றம், தேர், தீர்த்தம் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும்**

| | |
|---|---|
| காலை 10.00 மணிக்கு அபிஷேகம் | மாலை 4.30 மணிக்கு சாயரட்சைப்பூசை |
| காலை 11.00 மணிக்கு உச்சிக்காலப் பூசை | மாலை 5.00 மணிக்கு ஸ்தம்பபூசை |
| காலை 11.30 மணிக்கு ஸ்தம்பபூசை | மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து |

பகல் 12.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத்தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருதல்

பகல் உற்சவம் நடைபெறும்.

உற்சவ குரு:

தேவஸ்தான பிரதமகுரு: 'சிவாகமகிரியா', 'சிவாகம பிரதிஷ்டபூபதி'

**பிரம்மஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள்**

மாலை உற்சவம் நிறைவுபெற்றதும் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

சொற்பொழிவு நிகழ்த்துபவர்:

நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி, முத்தமிழருவி

**பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த சர்மா அவர்கள்**

விடயம்: **கம்பராமாயணம்**

(சொற்பொழிவு பக்கவாத்தியத்துடன்)

## பழைமையும் பெருமையும் மிக்க தலம்

இன்றையபொழுது இனிதாக விடிகிறது. காலைக்கதிரவன் எழுகின்றபொழுதில் புள்ளினங்கள் கீச்சிட அமைதியான மருதடிச்சூழல் தெய்வீகத்தை ஏற்படுத்துகின்றது. அங்கப்பிரதட்சணம் செய்பவர்களின் 'அரோகரா' ஒலியும் அடி அழிக்கும் பாவையரின் பிரார்த்தனைகளும் இச்சூழலைப் புனிதமாக்கிவிடும்.

மெல்லிய காற்றில் தவழ்ந்துவருகின்ற ஆலயத்திற்கே உரிய பக்தி கானங்கள் இறைவனைக் காணவேண்டும் என்கின்ற ஆவலுடன் ஆலயத்தை நோக்கிவிரைகின்ற மருதடியான் அடியவர்கள், கோபுரவாசலிலே தெரிகின்ற கற்பூரஜோதி இவைகள் எல்லாம் இன்று மருதடியான் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது என்பதைப் பறைசாற்றுகின்றன.

ஆலய மண்டபம் நிறைந்திருக்க, அந்தணச் சிவாச்சாரியார்கள் மறையோத, கண்டாமணியும் தனக்கே உரிய ஓசையுடன் அதிர, மன்னவனாம் எந்தை விநாயகர் கண்கொள்ளாக்காட்சியுடன் தெய்வீகப் பொலிவோடு நர்த்தனமாட தேவேந்திர முகூர்த்தத்தில் கொடியேறுகின்ற அந்தக்காட்சி ஓர் அற்புதமான காட்சி.

இக்காட்சியைக் காண்பவர்கள் மெய்சிலிர்ந்து நிற்பர். இவ்வேளையில் இந்த உலக மக்கள், இலங்கை வாழ் மக்கள், கிராம மக்கள் எல்லோருடைய வாழ்வும் மலர, சமாதானம் நிலைக்க, வாழ்வும் வளமும் பெருக எந்தை இறைவன் மருதடியான் கழல் பணிந்து ஆசி கூறி அமைகிறேன்.

**சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள்,**
*மஹோற்சவ பிரதம சிவாச்சாரியர், மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோவில்*

விழா சிறப்புற வாழ்த்துவோர்:


தர்மரூபன் பல்பொருள் வாணிபம்
※ கட்டடப் பொருள்கள், வர்ணப்பூச்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
※ தர்மரூபன் தொலைத்தொடர்பு சேவை - இன்ரநெட் சேவை, போட்டோ பிரதி, கவரிடுதல், பக்ஸ்
T.P.:021-222 3201 ஈ.மெயில் 021 - 4590613
பிரதான வீதி, மானிப்பாய்.

பிரம்யா நகை மாடம்
யாழ். வீதி, ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.
T.Phone: 021- 222 3600

வி.எஸ்.எம். ஸ்ரோர்ஸ்
V.S.M. Stores
ஆலடிச் சந்தி, பிரதான வீதி, மானிப்பாய்.


மானியம்பதி அருள்மிகு மருதடி விநாயகரின் ஆசியுடன்
35 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிக்ஷர் தயாரிப்பதில்....
இன்றைய முன்னோடிகள்:
மல்லிகா மிக்ஷர் மாளிகை
இல.149, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. - 7699.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்



## தேச விடுதலைக் களங்களில் நின்றவன்.

## தமிழர் எழுச்சியே மூச்சாகக் கொண்டவன்.




# சொலமன் சூசைப்பிள்ளை சிறில்

## தேசத் தொண்டரைத் தெரிந்து வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது!

வலிகாமம் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவை

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்று (27.03.2004) சனிக்கிழமை
யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற
**திருமதி கிருஸ்ணகுமார் கலைவதனி** (பட்டப்பின் டிப்ளோமா)
**செல்வி பத்மநாதன் நிரூஜா** (நாட்டிய கலைமாணி)
ஆகிய இருவரையும் மனமாரப் பாராட்டுவதோடு பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(30063)(34-14-26) - சகோதரர்கள், நண்பர்கள்.

---

J.M.J
✝

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊர்காவற்றுறையின்.....
- ▲ புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரும்,
- ▲ Y.M.C.Aயின் செயலாளரும்
- ▲ அண்ணா முன்னேற்ற விளையாட்டுக் கழக ஆலோசகருமான

**திரு. இராசரெத்தினம் ஜெயால்ட் அன்ரனி**
(B.B.A.)

யாழ். பல்கலைக்கழகத்தின் 23 ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில்நிர்வாகமாணி (B.B.A.) பட்டம் பெற்றமையையிட்டு பெரும் மகிழ்வடைகின்றோம். இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(30081)(34-14-26) - ஊர்காவற்றுறை நண்பர்கள்.

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (27.03.2004) சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்புக் கலைமாணி (தமிழ்) B.A. (Hons) Ta.Sp.பட்டம்பெற்ற
எங்கள் அருமைத் தங்கை

## இரகுலேசன் நளாயினி

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டுமென அப்பாவும் அம்மாவும் சகோதரர்களும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றார்கள்.

மேலும் அன்புடன் வாழ்த்தும்:
**நளினி அக்கா, திருவருட்செல்வன் அத்தான்,**
**பிள்ளைகள்: நிருபன், நிவேதன், நிருத்திகா.**
ALFORTVILLE - FRANCE
**பரமானந்தன் நகுலன் அண்ணா, ஸ்ரீபிரவீணா அண்ணி,**
**மருமகள் சௌமியா.**
Moncenglad Bach - Germany.

(30136)(26-14)

---

### வீதி குறித்து பொதுமக்கள் புகார்

வலி.தென்மேற்கு,மார்ச்28

பண்டத்தரிப்புச் சந்தைக்கும், பண்டத்தரிப்புச் சந்திக்கும் இடையிலான பிரதான வீதி குண்டும் குழியுமாகப் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை -

பண்டத்தரிப்புச் சந்தியில் மகளிர் கல்லூரிக்கு முன்பாகவும் வீதி சேதமடைந்து பாரிய குழி ஒன்று உருவாகியுள்ளது.

கடந்த மூன்று மாதகாலமாக இந்தக் குழி இருந்து வருவதால் போக்குவரத்தில் மிகுந்த சிரமங்களைப் பயணிகள் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வீதியால் அதிகளவில் வாகனங்களும் சென்று வருவதால் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

(எ-135)

---

### படிவம்

க.பொ.த. (சா.த) பரீட்சை 2003 விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவு திகதி: 30-04-2004
**BHARATHI PATHIPPAKAM**
OFFSET PRINTERS
430, K.K.S. Road,
Jaffna.
(C/34126)

---

### மாதுரி பிரத்தியேக கல்வி நிலையம்

இல.29, ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.
(ப.நோ.கூ.சங்க அருகில்)
**திகதி - 2004 April 29**
- ❊ A/L-2004 பரீட்சை ஆண்டுக்கான கடந்தகால கணக்கியல் வினாத்தாள் மீட்டல்கள். (அலகு ரீதியாக 1979-2003)
- ❊ A/L 2006 புதிய கலை, வர்த்தக வகுப்புகளும்
- ❊ O/L Day Class வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

புலமைப்பரிசில் வகுப்பு உட்பட ஏனைய வகுப்புகளும் நடைபெறுகின்றன.
Note: 20 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.
(30149)(34)

---

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (27.03.2004) சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் பொருளியல் துறையில் சிறப்புச் சித்திபெற்று B.A.(Hons) பட்டம்பெற்ற நீர்வேலியைச் சேர்ந்த
**திரு. இராசரத்தினம் குகராஜா** B.A. (Hons)
அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- அன்பு நண்பர்கள்
(30141) (14-26) நித்தி, ஸ்ரீநீஸ், பிரதீஸ், கஜேந்திரன்.

---

உ
குகமயம்

### தவத்திரு.வே.முருகேசு சுவாமி
அவர்களின்



### ஏழாம் ஆண்டு குருபூசைத்தின நிகழ்வுகள்

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: நாளை (29-03-2004) திங்கட்கிழமை
**நிகழ்வுகள்**
சிறப்புச் சொற்பொழிவு: சிவத்தமிழ் வித்தகர்
சிவ.மகாலிங்கம்
விடயம்: சித்தர்களும் - செல்வச்சந்நிதியும்
**கலை நிகழ்வு:**
யாழ்.தொண்டமனாறு வீ.ம.வித்தியாலய மாணவர்கள்

மேற்படி குருபூசைத்தின நிகழ்வுகள் காலை 8.00 மணியளவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் **அறுபத்து மூவர் குரு பூசையும** இடம்பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அன்றையதினம் நடைபெறவுள்ள சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டமனாறு. (சி-34116)(37-14-26)

தவத்திரு.வே.முருகேசுசுவாமி
அவர்களது அடியார்கள்.

# பள்ளிப் பருவம் முதல் தந்தை செல்வாவின் அரசியல் சுவடுகளிலிருந்து 40 ஆண்டுகள் ஓரே கொள்கை, ஓரே இலட்சியம், ஓரே அணி என ஓயாது, தலை சாயாது, விலை போகாது, தன்னைப் பொதுவாழ்வுக்கு அர்ப்பணித்த தமிழன் என்பதால்




தமிழ் மக்களால் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டியவர்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்

## மாவை.சோ.சேனாதிராசா

அவர்கள்



## எங்கள் தெரிவு இல. :12




நல்லூர்த் தொகுதி மக்கள்.


## வார்ப்புத் தொழில் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற் துறை மன்றம் கொழும்பிலுள்ள சிறிய நடுத்தர முயற்சி மேம்பாட்டாளர் அனுசரணையுடன் நடத்தும் அலுமினியம், பித்தளை வார்ப்புத் தொழில் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு செம்மணிவீதியில் உள்ள 'ஈரோவில்' கேட்போர் அரங்கில் நடைபெறவுள்ளது. ஆர்வமுடையோர் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப் பட்டுள்ளது. (ம-10)

## வாக்காளர் அட்டை விநியோகம் தொடர்பாக மீளாய்வுக்கூட்டம்

### திங்களன்று யாழ். செயலகத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்28

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் தொடர்பான மீளாய்வுக்கூட்டம் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் யாழ்.மாவட்ட வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் கடந்த 17 ஆம் திகதி முதல தபால்மூலம் விநியோகம் செய்யப்பட்டன. இந்தப்பணிகள் கடந்த 25 ஆம் திகதியுடன் நிறைவடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இதுவரை விநியோகிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளின் விவரம் தொடர்பாகவும் -

எஞ்சியுள்ள அட்டைகளை எவ்வாறு விநியோகிப்பது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.

யாழ்மாவட்ட பிரதித்தபால்மா அதிபர், யாழ்ப்பாண தபால் அத்தியட்சகர் மற்றும் கிளிநொச்சி, யாழ்ப்பாண அஞ்சல் அத்தியட்சகர் ஆகியோருக்கு இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## வாழ்த்துகின்றோம்

27.03.2004 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது நண்பர்களான



அ.சுதர்சன்

**அல்பிரட் யூட் சுதர்சன்**

B.A.(Hons), அவர்களையும்

**மரியான் அரியம் றொபேட்**

B.Com அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

-மானிப்பாய் நண்பர்கள்.

(30113)(37-12-18)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்28

நாளை திங்கட்கிழமை உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுக்கு நடைபெறவிருந்த கலந்துரையாடல் பிறிதொரு தினத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா அறிவித்துள்ளார். (ஐ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி கோயில் குடியிருப்பு (ஜே/301) பிரிவு கிராம அலுவலர்

உயர்திரு.

**க.செல்வராசா**

அவர்கள் முதலாம்தர கிராம அலுவலராகப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு மனமுவந்து பாராட்டுவதுடன், அவர் மென் மேலும் பதவிகள்பெற்று சிறப்புடன்வாழ வாயார வாழ்த்துகின்றோம்.

பொன்னுச்சாமி வீதி,
சங்கத்தனை,
சாவகச்சேரி.

தர்ஷன் மரக்காலை,
ஊழியர்கள்.

(சி-33887) (26-31-16-38)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை கந்தையா

மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கந்தையா அவர்கள் 25.03.2004 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை) அவர்களின் அன்புச் சகோதரரும் புண்ணியவதி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும் புஸ்பமலர் (கனடா), புஸ்பவலி (கனடா), புஸ்பகினி (பிரான்ஸ்), சிறிஸ்கந்தராசா (கனடா), புஸ்பமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் குலேந்திரன் (கனடா), நந்தகுமார் (கனடா), கருணாகரன் (பிரான்ஸ்), சசிகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்தாமணி அவர்களின் அன்பு மருமகனும் சிவகாமசுந்தரி (கனடா), இசைஞானவதி (உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவக்கொழுந்து (கனடா), பூபாலசிங்கம் (உரும்பிராய்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸிலுள்ள புஸ்பகினி (மகள்) அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
சிவன் வீதி,
உரும்பிராய்

P.Karunagaran
*I -RUE JEAN MERMOZ*
*93130 NOISY LE SEC*
*FRANCE.*

தகவல்:
பு.இசைஞானவதி
(மைத்துனி)

(30163)(37-38-34-16)


## புது வருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

### SHAN MULTY TRADE CENTRE

SONY, NATIONAL, T.Vகள (14", 19", 20", 21", 25", 29", 34",) VIDEO DECK, SONY, TECHNICS, KENWOOD, PIONEER செற்றப் றேடியோக்கள், AMPLIFIERS, (PIONEER, KENWOOD, YAMAHA, DENON, SANSUI, MARANIZ), புறயெக்ரர் என்பனவும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

(அனைத்தும் ஒறிஜினல் JAPAN)



NO.50, K.K.S. ROAD,
JAFFNA
T.P.: 222 7442

(30061)(39)



**SKY COMPUTER SYSTEMS**
109, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel./Fax No.021-4590325
(கச்சேரிக்கு அருகில்)

**MS Office, Photoshop, PageMaker, CorelDRAW, Hardware, AutoCAD, Internet & E-mail, Computerised Accounting Packages, Visual Basic, C/C++ Programming.**

Note:

1. மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியானமுறையில் கவனிக்கப்படும்.
2. உங்களுக்கு வசதியான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

* சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத் தரப்படும்.

E-mail: skycom@wow.lk.

**Today yoJ learn Tomorrow you Lead.**

(30162)

# கனடா இலக்கியத் தோட்டம் நடத்தும் சிறுகதைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்28

கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும் 'காலம்' இதழும் இணைந்து நடத்தும் தமிழ்ச் சிறுகதைப் போட்டிக்கு சிறுகதைகளை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதைகளில் முதலிடம்பெறும் சிறுகதைக்கு இலங்கை நாணயப்படி 20 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடம் பெறும் சிறுகதைக்கு 13 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடம் பெறும் சிறுகதைக்கு 6 ஆயிரத்து 600 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும் சிறுகதைகள் சொந்தக் கற்பனையில் அமைந்தவையாகவும் ஏறகனவே பிரசுரமாகாதவையாகவும் இருத்தல்வேண்டும்.

ஒருவர் ஒரு சிறுகதை மட்டுமே அனுப்பலாம்.

2000 சொற்களுக்கு மேற்படாது கதையை தட்டச்சில் அல்லது கணனியில் அச்சடித்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக TAMIL SHORT STORY CONTEST, 16. HAMPSTEAD COURT , MARKHAM, ON. L3R3S7, CANADA என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேணடும்.

சிறுகதைச் சொற்களின் எண்ணிக்கை, ஆசிரியர் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், ஆசிரியர் பற்றிய சிறு குறிப்பு என்பன தனியான இணைப்பாக அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# தபால் நிலையப் புதிய கட்டடத்துக்கு அச்சுவேலி மக்களிடம் நிதிசேகரிப்பு

அச்சுவேலி,மார்ச்28

அச்சுவேலி, தபால் நிலையத்துக்குரிய புதிய கட்டடத்தை நிறுவுவதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டப்படவுள்ளது.

இந்தத் தபால் நிலையத்துக்கென புதிய கட்டடத்தை நிறுவுவதற்கு ஊடகத்துறை அமைச்சு 60 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஆயினும் காணி இல்லாமையால் கட்டட நிர்மாணப் பணியைத் தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தபால் நிலைய அபிவிருத்திக் குழ பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து பொதுமக்கள் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளனர்.

நிதியைப் பொதுமக்களிடம் சேகரிப்பதற்கான குழுக்கள் கிராமசேவகர் பிரிவுகள் ரீதியாக நியமிக்கப்பட்டு அந்தக குழுக்கள் மூலம் பொதுமக்களிடம் பத்து லட்சம் ரூபா நிதி சேகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(ஒ-11)

## குரு பூசைத்தின விழா

யாழ்ப்பாணம், மார்ச்28

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் குரு பூஜை விழா நாளை காலை 10 மணி முதல் ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில நடைபெறவுள்ளது.

10 மணிக்கு யாக பூஜையும், 11 மணிக்கு சங்காபிஷேகமும், 12.30 மணிக்கு மகேசுர பூஜையும் இடம் பெறும். (எ-4)

## மதுபான நிலைய தகராறு: இளைஞர் காயம்!

மதுபான நிலையத்தில் இரு இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் இளைஞர் ஒருவர் வயிறறில் போத்தல் குத்துக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள மதுபான நிலையத்தில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோப்பாய் பழம் வீதியைச் சேர்ந்த தெய்வேந்திரம் கதிர்காமநாதன (வயது26) என்ற இளைஞனே வயிற்றில போத்தல் குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார். (ம-ரி)

# ஓட்டோக்கள் நீதிமன்றினால் தடுத்துவைப்பு

தென்மராட்சி.மார்ச்28

2004ஆம் ஆண்டுக்குரிய வாகன வரி, காப்புறுதி, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஓட்டோக்கள் சாவகச்சேரி நீதிமன்றில் தடுத்துவைக்கப்படுகின்றன.

மக்களை ஏற்றிச் செல்லும் ஓட்டோக்கள் வாகன வரி, காப்புறுதி, சாரதிய அனுமதிப்பத்திரம் ஆகியவை' இல்லாத நிலையில் பொலீஸாரிடம் அகப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்படும்போது அவற்றைத் தடுத்துவைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு இரண்டு ஓட்டோக்கள் நீதிமன்றினால் தடுத்துவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-117)

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கத்தின பிரியாவிடையும் சேவைக்காலப் பாராட்டு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு க. பிரபாகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-10)

## சுண்டிக்குளம் கரையோரம் சடலம் ஒதுங்கியது

கிளிநொச்சி, சுண்டிக்குளம் கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை மீட்ட தமிழீழக் காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலத்தில் நீலநிறச் சட்டையும் கறுப்புநிறப் பாவாடையும் காணப்பட்டது. (ம-164)


**லக்ஷ்மி** இணுவில்



விஜய், ரிச்சர்பல்லோட், விவேக், கிருஷ்ணா இன்னும் பலர் நடித்த

**ஷாஜகான்** (ரீல்ஸ்)

காட்சிநேரம் : 11.00, 3.00, 6.30 (பி.நே.)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்

அர்ஜுன், குஷ்பூ, நடித்த

**சேவகன்** (ரீல்ஸ்)

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

**CHICKEN-RUN**

(C/33770) (12)

**லிபேட்டி** அச்சுவேலி



சூரியா, ஜோதிகா, ரம்ஷா மற்றும் பலர் நடித்த

**காக்க காக்க** (ரீல்ஸ்)

காட்சிநேரம்: 3.00, 7.00 (பி.நே.)

(C-33771)(12)

**ராஜா** யாழ்ப்பாணம்

வசீகரன்

பூஜா

நடித்த

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)



(C/33519) (12)



## வேலையாள்கள் தேவை

ரீ மேக்கர், சப்ளையர், பில் கிளாக் ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு:
அமுல் கிறீம் கவுஸ்
452, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
222 5707, 222 2472, 222 3078. (30132)

## விற்பனைக்கு

இசுசு ஜெமினி புதியமொடல் [641] டீசல் [64-] கார் விற்பனைக்கு உண்டு.

A/C, Power Full Option Green Clour, Inter Coller Turbo Engine.

தொடர்பு:
0777 519440,
021 222 6151 (30172)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
05
04
1923



மறைவு
27
02
2004

**அமரர் மயில்வாகனம் மாணிக்கத்தியாகராஜா**

*மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்!*
*புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தீர்!*
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

அமரத்துவமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். எனவே இந்நிகழ்வுகளில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்புள்ளங்கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*215, கச்சேரி நல்லூர்வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

- அன்பு மனைவி, பிள்ளைகள்.

(30165)(38-12-17)

# மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



கொக்குவில் மேற்கு, சாயிதர்சனைச் சேர்ந்த **டாக்டர் திருமதி ஜெயதர்சினி சத்துருக்கன்** அவர்கள் 27.03.2004 அன்று சித்த மருத்துவமும் சத்திரசிகிச்சைமாணியும பட்டத்தைப் பெற்றார். அவர் பட்ட மேற்படிப்புக்கள் பல கற்று அத்துறையில் சிறந்து விளங்கி மக்களிற்கு உயரிய சேவைகளை ஆற்ற எல்லாம்வல்ல பகவானைப் பிரார்த்தித்து அவரை நாம்உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

உத்தியோகத்தர்கள்,
முதியவர்கள்,
அரச முதியோர் இல்லம், கைதடி.

(30170)(38)


**நாகம்ஸ்** சுன்னாகம்

30 முதல்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

டொல்பி ஒலி அமைப்புடன்

**விஜய், சிம்ரன்** மற்றும் பலர் நடித்த

A.R.ரஹ்மானின் இசையில்....

**உதயா**

தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00(புதிய நேரம்.)

பதிவுகளுக்கு:
றட்ணம்ஸ் பாட்டா
கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் பாட்டா
சுன்னாகம்.
நாகம்ஸ் சினிமா.
(C-33842) (12)

சரத்குமார்,லைலா,வடிவேல் நடித்த **திம்பீரம்**





# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY



*கணையன் தோட்டம்,*
*புலோலி,பருத்தித்துறை.*

ஜெயகுருநாதன் -தயாமதி தம்பதிகளின் செல்வப்புதல்வன

## செல்வன் கீர்த்திகன்

அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, மாமி, மாமாமார், பெரியம்மாமார், சித்திமார், பெரியப்பாமார், மச்சாள்மார், மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: தந்தை.

BIRTHDAY

(30167)(38-12-17)

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை வைரமுத்து

(யாழ்/போதனா வைத்தியசாலை முன்னாள் பிரதம மருந்தாளர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை வைரமுத்து அவர்கள் 27.03.2004 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெகதேவி வைரமுத்து.
(மனைவி).

*84/1 A , மானிப்பாய் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்,*

(30171)(38-12-17-18)

## கறுவல்தம்பி கந்தையா சச்சிதானந்தம்



பலாலி றோட், இரண்டாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் புலோலி, வராத்துப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட கறுவல்தம்பி கந்தையா சச்சிதானந்தம் அவர்கள் 26.03.2004 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கறுவல்தம்பி கந்தையா மற்றும் செல்லம்மா (பூமணி) அவர்களின் பாசமிகு மூத்த மகனும் செல்லமணியின் அன்புக் கணவரும் கமலாதேவி, விமலானந்தம், விமலாதேவி, ரகுலாதேவி, நித்தியானந்தம், ரவியானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தம்பிஐயா, சின்னத்துரை (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வனஜா, கிரிஜா, பேமராஜ் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம் மருதங்கேணி), பிறேமராஜ் (ப.தெ.வ.அ. கூ.சங்கம், பருத்தித்துறை), பாமராஜ், அனுராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைராசா (ஆசிரியர், உத்தராவத்தை அ.த.க. பாடசாலை), பஞ்சாட்சரம் (முகாமையாளர்), சுமதி (யாழ். புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, ஆசிரியர்), கலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுவர்ணராஜ், மனோஜன், அபிசாஜினி, அபிசாற், சிவானுஜன், நிவேதிகா ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2004) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வராத்துப்பளை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(30173)(12-17-18)

# பிரசாரத்துக்குச் சென்ற சுயேச்சைக் குழு கைதடியில் பொதுமக்களால் விரட்டியடிப்பு

கைதடி,மார்ச்28

தேர்தல் பிரசாரத்துக்கெனச் சென்ற வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேசசைக் குழு வேட்பாளர்கள் கைதடிச் சந்தியில் பொது மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனங்களில் வந்த சுயேச்சைக் குழுவினர் கைதடிச் சந்தியில் இறங்கி பிரசாரத்தில் ஈடுபட முயன்றனர். அங்கு கூடி நின்றவர்கள் அதனைத் தடுத்தனர். இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் முற்றி சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். அவர்கள் மீது கற்கள், பொல்லுகள் எறியப்பட்டன. அவர்கள் பயணித்த வாகனங்களின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

நிலைமை மோசமானதையடுத்து சுயேச்சைக் குழுவின் பாதுகாப்புக்குச் சென்ற பொலீஸார் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சம்பவத்தைத் தொடர்ந்து சுயேச்சைக் குழுவினர் தமது பிரசாரத்தைக் கைவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினர்.

இதற்கிடையே -

சாவகச்சேரி நகரப் பகுதியிலிருந்து சங்கத்தானை வரை தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி. பிரசாரக் குழுவினரின் பணிகளுக்கு தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் ரவிராஜ் தலைமையிலான குழுவினர் இடைஞ்சல்களை ஏற்படுத்தியதாக அக்கட்சி குற்றஞ்சாட்டி இருந்தது.

வேட்பாளர்களான கே.வி. குகேந்திரன், க.மணிபல்லவராஜன் ஆகியோர் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் அங்கு வந்த புலிகள் உறுப்பினர்கள் தமது பிரசார பதாகைகளைச் சேதமாக்கியதுடன் வேட்பாளர்களுக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் பயமுறுத்தல் விடுத்தனர் என்றும் ஈபிடிபி குற்றஞ்சாட்டி உள்ளது.

ஆனால், சங்கத்தானையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் கைதடியில் சுயேச்சைக்குழு உறுப்பினர்களும் பிரசாரப்பணியில் ஈடுபட்ட சமயம் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அச்சுறுத்தல்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ விடுதலைப் புலிகளுக்கோ தொடர்பு ஏதும் இல்லை என்று கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா நேற்றிரவு தெரிவித்தார்.

சங்கத்தானையில் நடந்த சம்பவத்தில் வேட்பாளர் ரவிராஜுக்கும் விடுதலைப் புலிகள் பாப்பாவுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் -

பொது மக்கள்தான் இந்த அச்சுறுத்தல்களை விடுத்துள்ளதாக அறிகிறோம் என்றும் - அவர் மேலும் சொன்னார்.

கூட்டமைப்பினரையும் விடுதலைப் புலிகளையும் இந்த விவகாரத்தில் வலிந்து இழுக்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது என்றும் சேனாதிராசா தெரிவித்தார்.

(ம-3-75-31)

# கூட்டமைப்பின் இறுதிப் பிரசாரம் 30 ஆம் திகதி நல்லூரில் நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதிக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி நல்லூரில் இடம்பெறவுள்ளது.

முதன்மை வேட்பாளரான மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அனைவரும் பங்குபற்றி உரையாற்றவிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் சிலரும் இக்கூட்டத்தில் உரையாற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டில் சகல பிரதேசங்களில் இருந்தும் ஆதரவாளர்கள், பொது அமைப்பினர் அன்றைய தினம் நல்லூரில் சங்கமித்து தமது ஆதரவை வெளிப்படுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம்-

கூட்டமைப்பு வேட்பாளர்கள் குடாநாடு எங்கும் தினமும் ஆறு, ஏழு கூட்டங்களில் உரையாற்றி வருகின்றனர். அத்துடன் அந்தப் பகுதியில் பிரசாரப் பணிகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

கூட்டங்கள் மாலை முதல் நள்ளிரவு வரையும் இடம்பெற்று வருகின்றன. (ம-3)

# மீண்டும் யுத்தம் வேண்டாம்; சமாதானத்துக்காகப் பிரார்த்திப்போம்

## அகில இலங்கை இந்துமாமன்றம் அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்28

மீண்டும் யுத்தம் வேண்டாம் சமாதானம் தரும் அரசியல் தீர்வுக்காகப் பிரார்த்திப்போம்.

-இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது அகில இலங்கை இந்துமாமன்றம். இதுவிடயமாக மேற்படி மன்றம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

ஒன்றுபட்ட வாழ்வே ஐக்கியமாகும் இனத்தின் - மதத்தின் -மொழியின் ஊடாக ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும்போது ஒற்றுமை உணர்வின்மூலம் ஐக்கியம் தோன்றுகின்றது. அதுவே சமாதானமாக உதயமாகின்றது.

கடந்தகால கசப்பான நிகழ்வுகள் இன்னும் வேண்டாம். இனிவரும் காலங்களில் மட்டுமல்ல, வந்திருக்கும் இத் தேர்தலிலும் வன்முறைகள் வேண்டாம்.

இன்றைய அமைதிச் சூழல் நிரந்தரமாக வேண்டுமென்பதுடன், நாட்டில் அமைதியும் ஐக்கியமும், சமதானமும் மக்கள் அனைவரினதும் வாழ்வில் மகிழ்ச்சியும், நிம்மதியும், சுபீட்சமும் சௌகரியங்களும் வசதிகளும் என்றென்றும் நிரந்தரமாக அமையவேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

கடந்தகால யுத்தத்தின் பிரதி கூலங்களான உயிரிழப்பும், உடைமையிழப்பும் ஜீவனோபாய சமூக சீர்குலைவு, அங்கவீன சந்ததி, அனாதை சிறுவர் பரம்பரை என்பன மீண்டும் உருவாவதைத் தவிர்த்துக்கொள்வோம். எங்கள் மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் அரசியற் தீர்வு ஒன்று வரவேண்டும். அதற்கான வாய்ப்பு ஒன்று வந்திருக்கிறது. மீண்டும் ஒரு சந்தர்ப்பமாக இதனைத் தவறவிடாது எதிர்வரும் பொதுத் தேர்தலில் சமாதானமாக, அமைதியாக வாக்களிப்போம்

எமக்குள் சண்டை வேண்டாம், போட்டி, பொறாமைக் கூச்சல் வேண்டாம். வன்முறைகளை அகற்றி எமது ஜனநாயக உரிமைகளைப் பேணித் தேர்தலில் வாக்களிப்போம். எம்மவர் யாவருக்கும் கிடைத்திருக்கும் வாக்குரிமையை சுதந்திரமாக பிரயோகிக்க வேண்டும். நன்கு சிந்தித்து செயலாற்றுங்கள். நாங்கள் வணங்கும் தெய்வம் எங்களுக்கு ஒரு விடிவினைத் தருவான் என்ற நம்பிக்கையில் நாங்கள் அனைவரும் இறைவனைப் போற்றிப் பிரார்த்திப்போமாக.

நடக்கும் தேர்தல் நல்லதாக நடக்கவேண்டும். அதன் மூலம் நல்லதொரு முடிவு பிறக்கவேண்டும் அதுவே எங்களுக்கு நல்லதோர் அரசியல் தீர்வைத் தரவேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் விருப்பமாகும் - என்று அதில் உள்ளது. (எ)

# ஊர்காவற்றுறையில் சிறுமி மீது துஷ்பிரயோகம்

ஊர்காவற்றுறையில் நேற்று நணபகல் ஒரு மணியளவில் 12 வயதுப் பள்ளிச் சிறுமி ஒருத்தியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாடசாலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த பிரஸ்தாப சிறுமியை வழிமறித்த நபர் ஒருவர் அருகில்உள்ள பற்றைக்குள் அவரை இழுத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்ய முயன்றார் என ஊர்காவற்றுறைப் பொலீஸில் அவரது பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பிரஸ்தாப சிறுமியின் பெற்றோர் பொலீஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு ஈ.பி.டி.பி. வேட்பாளர் மதனராஜன் அச்சுறுத்துகின்றார் என்றும் விடுதலைப் புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம3)

## முகமாலையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு வசதியாகவும் வாக்களிக்க வசதியாகவும் எதிர்வரும் முதலாம் திகதி நண்பகல் ஒரு மணி முதல் 2ஆம் திகதி மாலை 5 மணிவரையும் ஓமந்தைப் பிரதேசம் தேர்தல் திணைக்களப் பொறுப்பில் இருக்கும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஓமந்தை ஊடான பாதை 2 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கே மக்கள் பாவனைக்குத் திறக்கப்படும் என்றும் -

வாக்காளர்கள் மட்டுமே பாதை ஊடாக அனுமதிக்கப்படுவர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.(ம-3)

## பிரசாரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை அணிவித்த நபரே சுட்டார் என்றும் தகவல் ஒன்று தெரிவித்தது. ஆனால் அதை உறுதிசெய்ய முடியவில்லை.

வலப்பக்க காதுப்பகுதிலும் தோள்பட்டையிலும் காயங்களுக்குள்ளான மகேஸ்வரன் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

மகேஸ்வரன் ஆபத்துக் கட்டத்தை தாண்டிவிட்டார் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

நேற்றுப் பின்னிரவில் அவர் அப்பலோ வைத்திசாலையில் சேர்க்கப்பட்டார் எனப் பிந்திய தகவல் ஒன்று தெரிவித்தது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நல்லூரிலும் காரைநகரிலும் நடைபெற இருந்த தமிழ்க் கூட்டமைப்பின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரிப் பிரசாரம் செய்வதற்கு மகேஸ்வரன் திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

**SHAMROCK**
J/ஈச்சமோட்டை வீதி
**A/L 2006** புதிய பிரிவு
COM. - Mr.பசில B.B.A
ACC. -Mr.தவா B.com(Hons)(Acc.Spl.)
ECON. -Mr.விக்கிB.A.(Hons) (Econ.Spl.)
**ENGLISH**
Mr.ஜெயக்குமா B.A.
CHRIS - Mr.மல்லிகா B.A.
LOG. - Mr.கலைச்செல்வன B.A.
TAMIL - Mr.அருள் B.A.
GEO. - Mr.இக்நேசியஸ B.A
(30046)

குடா நாட்டில்
**O/L DAY CLASS**
வகுப்புகளிற்கு அன்றும் இன்றும்
என்றுமே தனித்துவமான
ஒரே நிறுவனம்
விக்னா கல்வி
நிறுவனம்
**O/L DAY CLASS**
பிரிவு 2 ஆரம்பம்: 05.04.2004
(காலை 8.30)
★ தூரதேச மாணவர்களின் நலன் கருதி வடுதி வசதிகளும் போக்குவரத்து பருவகாலசீட்டு வசதிகளும செய்து தரப்படும்.
★ இம்முறையும் பிரிவு 6 மட்டுமே
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். (30041)

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
காவிய நாயகன்
திருப்பாடுகளின் காட்சி
மனிதம் எமதுபாடல
மனிதம் எமது தேடல்
மன்ற அரங்கில்
மாலை 7.00 மணி
மார்ச் 30,31, எப்ரல் 01, 03, 04- 2004
செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு
(5 நாள்களுக்கு)
குறிப்பு :- பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். ஆசனப்பதிவுகளை யாழ். மன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம். அன்பளிப்பு:- 30.00
மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
238, பிரதான வீதி யாழ்ப்பாணம்
T.P./fax 021-222 2393
E-mail: cpajaffna @ sltnet.lk
Website: www.cpateam.org
(C/33809)(40)
திருமறைக் கலாமன்றம்.

# மரண அறிவித்தல்

## வைரவி சின்னத்தம்பி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரவி சின்னத்தம்பி அவர்கள் நேற்று (27.03.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவி செல்வியின் அன்பு மகனும் அம்பலவாணர், சித்திராதேவி, சரோஜாதேவி, சிறிதரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சந்திரவதனி, பரமேஸ்வரன், சந்திரபாலு, றமணி, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கணபதி, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரசன்னா, பிரியங்கா, பிரவீன், நதீபன், கஜன், கிருஷ்னிகா, துளசிகா, ஜெனிசியா, சிந்துயா, கபில்நாத் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.03.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.அம்பலவாணர்
(மகன்).

மலைவேம்படி,
அளவெட்டி

(30174)(40-12-17-18)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பேரன்புமிக்க தமிழ்த் தேசிய வாக்காளப் பெருமக்களே! பேரன்புமிக்க யாழ். மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

# தந்தை வழியில் மைந்தன்

## வெற்றிச் சின்னம் வீடு







## இலக்கம் 5

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை உலக அபிப்பிராய மன்ற வழக்கு மன்றத்தில் வீச்சுடன் வலியுறுத்தி வந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் மைந்தரும் 2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமிழ் தேசிய பிரச்சினையையும், போராட்டத்தையும் வலியுறுத்திவந்தவரும், விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதியாக ஏற்று தமிழ் தேசிய இனத்தின் ஒற்றுமையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிப்படுத்த கூட்டமைப்பு சார்பில் யாழ்.மாவட்ட வேட்பாளராக நிற்கும் முன்னாள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ.ஜீ.பொன்னம்பலம். (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்)

(சிங்கத்தின் குகையில் அரசோச்சிய வீரத்தமிழர்களின் குரல் மாமனிதர் குமார் பொன்னம்பலம்)

தந்தையின் வழியில் மைந்தன்
ஜீ.ஜீ.பொன்னம்பலம்
(கஜேந்திரகுமார் பொன்னம்பலம்)

| இலங்கை தமிழரசுக் கட்சி | (வீடு) | X |
|---|---|---|
| ஜீ.ஜீ.பொன்னம்பலம் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்) | | 5 X |

**முக்கிய குறிப்பு:** முதல் தமிழரசுக்கட்சி சின்னமான பக்கத்தில் புள்ளடியிட்டு உங்கள் முதன்மை விருப்பு வாக்குகளின் ஒன்றை 5 ஆம் இலக்கத்தின் மேல் தவறாது தயவுசெய்து புள்ளடியிடவும். வாக்குச்சீட்டில் வேட்பாளர் பெயர் இருக்கமாட்டாது.

### திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் (கஜேந்திரகுமார்) வெளிநாடுகளில் ஆற்றிய உரை இதில் அடங்குகின்றன.

(2003, செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று நடைபெற்ற சர்வதேசத் தமிழ் மன்றத்தின் 15 ஆவது ஆண்டு விழாக் கருத்தரங்கில் / மதிய விருந்தில் வடகிழக்கின் அபிவிருத்திக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு பற்றி ஜீ.ஜீ.பொன்னம்பலம், (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்) பா.உ.அவர்கள் ஆற்றிய ஆய்வுரை.) இங்கு சுருக்கமாக பிரசுரிக்கப்படுகிறது.

சர்வதேச தமிழ் மன்றத்தின் தலைவர் அவர்களே உறுப்பினர்களே, விருந்தினர்களே, அன்பர்களே,

சர்வதேச தமிழ் மன்றத்தின் 15 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படும் இன்று உங்களுக்கு உரையாற்றும் வாய்ப்பு உண்மையில் எனக்களிக்கப்பட்ட பெரும் கௌரவமும்,சிறப்புப் பேறுமாகும். இம் முக்கிய நிகழ்ச்சியில் உங்களுக்கு உரையாற்றுவதற்கு புகழ்பெற்ற, மாண்புமிக்க பல முக்கிய பிரமுகர்களை நீங்கள் அழைக்கக்கூடியதாயிருந்த போதிலும், என்னை அழைத்துள்ளமையை எண்ணுகையில் அக் கௌரவம் பன்மடங்காக அதிகரிக்கின்றது. இது உண்மையில் தாழ்ச்சியைக் கற்பிக்கின்ற ஓர் அனுபவம். அதற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

நான் உங்களுக்கு உரையாற்றவுள்ள தலைப்பு "வடகிழக்கின் அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு" என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் அது அளப்பரிய முக்கியமான விடயமென்ற வகையில் ஓரளவு அச்சத்தை ஊட்டுகின்ற ஒரு பொறுப்பாகத் தோன்றுகின்றது. இன்று எனது பணி இரு படியானதாயிருக்கும்:-

1) முதலாவது, "தளநிலவர உண்மை நிலைச் சோதனை" என்று நான் கருதுவதை உங்களுக்கு எடுத்துரைப்பது. எனது ஆய்வுரையில் இப்பகுதியின் அடிப்படை நோக்கம் தமிழ்த் தாயகம் கண்டுள்ள அழிவின் அளவையும் பரப்பையும் பற்றிய ஒரு கணநேரத் தோற்றத்தை, ஒரு மேலோட்டமான பார்வையை உங்களுக்கு அளிப்பதாயிருக்கும். இயல்பாக, ஆய்வுரையின் இப்பகுதி எவ்வகையிலும் விரிவானதாக இருக்கப் போவதில்லை. மாறாக, எமக்கெதிரேயுள்ள அளப்பரிய பொறுப்பை வெறுமனே தெளிவுபடுத்தும் நோக்கத்தைத்தான் அது கொண்டுள்ளது.

2) ஆய்வுரையின் இரண்டாவது பகுதி புலம்பெயர்ந்த தமிழ் உலகாகிய நீங்கள், தீவிரமாகப் பங்கு பற்றக்கூடிய பங்கில் நேரடியாகக் கவனஞ் செலுத்துவதாயிருக்கும்.

பகுதி அ- "தளநிலவர உண்மைநிலைச் சோதனை"

மிகச் சிறந்த முறையில் நீங்கள் அனைவரும் எவ்வாறு உதவ முடியுமென்று இரண்டாவது பகுதியில் நான் வகுத்துரைக்க உத்தேசித்துள்ளவற்றுக்கு நேரடியாக வதை விடுத்து, நான் ஏன், வடகிழக்கில் தற்போது நிலவுகின்ற நிலைமை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை முதலாவது பகுதியில் உங்களுக்கு வழங்குவதற்கு முடிவு செய்தேனென்று நீங்கள் சிந்திக்கக்கூடும். அவ்வாறு செய்வதன் மூலம், உங்கள் நிபுணத்துவத்தைத் திரட்டுவதற்குத் தளநிலவரத்தின் உண்மை நிலையைப் பயன்படுத்துகின்ற எனது மெய்யான நோக்கத்தைச் சாதிப்பதற்குப் பதிலாக, எதுவும் பயனற்றதென்ற ஓர் உணர்வை உங்களில் உருவாக்குகின்றதும் எல்லை மீறுகின்றதுமான உண்மையை, ஆபத்தை நான் எதிர் நோக்குகின்றேன். எனினும், அந்த ஆபத்தை மேற்கொள்வதென நான் தீர்மானித்துள்ளேன். ஏனெனில், தளநிலவரத்தின் உண்மை நிலை பற்றிய ஒரு விளக்கம் உங்களுக்கு இருந்தால்தான் நீங்கள் ஒரு தனிப்பட்டவராகவும் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகமென்ற வகையில் ஒட்டுமொத்தமாகவும் எவ்வாறு உதவ முடியுமென்று நீங்கள் உண்மையில் தீர்மானிக்க முடியும்.

### நிறைவுரை

நிறைவாக நான் கூற விரும்புவது இதனைத்தான். தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற அளப்பரிய பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தாயகத்திலுள்ள நாம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பது எந்தளவுக்கு முற்றிலும் இன்றியமையாததோ, அதேயளவில் முக்கியமானது, மேற்கொள்ளப்படவேண்டிய புனர்நிர்மாண, புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணியில் திட்டவட்டமானதும் தீர்க்கமானதுமான பங்கை புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமாகிய நீங்கள் வகிக்க வேண்டுமாயின் நீங்களும் ஒழுங்கமைக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டியது.

இன்று நாம் நீண்ட தூரம் வந்துவிட்டோம். விடுதலைக்கான தமிழ்த் தேசத்தின் தேடலை எண்ணம்போல் புறக்கணித்துவிட முடியாதென்பதை முழு உலகத்திற்கும் நாம் எண்பித்துள்ளோம். நீண்ட தூரத்தை கடந்துவிட்ட நாம் இன்று தீர்வுக்கட்டத்தில் நிற்கின்றோம். முன்னர் என்றுமில்லாதவாறு இன்று தமிழ்த் தேசம் எமது இலட்சியத்துக்கும். இலக்குகளுக்கும் அதனை மீள அர்ப்பணிக்க வேண்டும். மீள எம்மை அர்ப்பணித்தல் உள்நாட்டவர்களிடமிருந்து மட்டுமின்றி புலம்பெயர்ந்தவர்களிடமிருந்தும் வரவேண்டும். நாம் வெற்றிகாண வேண்டுமாயின் எமது உதவி எந்தளவுக்குத் தேவையோ அதேயளவு உங்கள் உதவியும் தேவை. எனவே, "வாருங்கள் எம்முடன், எமது ஐக்கிய பலத்துடன் நாம் ஒன்றாக முன்னேறிச் செல்வோம்."

நான் ஒரு தனிப்பட்ட விடயத்தைக் குறிப்பிட்டு இதனை நிறைவு செய்ய விரும்புகின்றேன். காலஞ்சென்ற எனது தந்தை பல்வேறு தடவைகள் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்துக்கு உரையாற்றவென வெளிநாடுகளுக்குச் சென்ற அனேக சந்தர்ப்பங்களில் நானும் அவருடன் கூடச் சென்றிருக்கின்றேன். தமிழ்த் தேசத்தின் விடுதலையைக் காணவேண்டுமென்ற உணர்ச்சிவசப்பட்ட ஒருவரென்ற வகையில் தமது மக்கள் படுகின்ற துயரங்களை எண்ணி இயல்பாகவே அவர் தாங்கொணா ஏமாற்றமும் விரக்தியும் அடைவதுண்டு. அது எந்தளவுக்கு அவரை உலைவுறச் செய்ததென்றால், தமிழரின் இலட்சியத்துக்காகக் கிளர்ந்தெழுவதை அவர் கைவிட்டுவிடுவாரா என்று கூடச் சில சமயங்களில் நான் எண்ணியதுண்டு. எனினும், பெரும்பாலும் எப்போதும் புலம்பெயர்ந்தவர்களின் பேரார்வமும், ஆதரவும் தான் புத்துயிருட்டி அவரின் சங்கற்பத்தை திடப்படுத்தியது. அவரின் வீரத்துக்காக அவர் மதிக்கப்பட்டுப் போற்றிப் புகழப்படுகின்றாரென்றால் அவரில் அந்த வீரத்தைத் தூண்டியவர்கள் புலம்பெயர்ந்தவர்களாகிய நீங்கள்தான். அதற்காக நான் உங்களுக்குத் தலை வணங்குகின்றேன். அவரின் பொதுவாழ்வில் பெருமகிழ்ச்சியை அனுபவித்ததும் மிகப் பயனடைந்ததுமான சில தருணங்கள் அவரின் வெளிநாட்டுப் பயணங்களின் போதென்று அவர் எப்போதும் சொல்வதுண்டு. உங்களுக்கு உரையாற்றுவதற்கு என்னை இன்று அழைத்துள்ள உங்கள் செயல் கண்டு நான் மனம் நெகிழ்கின்றவாறு புலம்பெயர்ந்த சமூகம் அவர் மீது காட்டிய மதிப்பையும் அன்பையும் கண்டு அவரின் மனமும் நெகிழ்ச்சியுற்றது. உங்களுக்கு நன்றி கூறிவிடைபெறுகின்றேன்.

*ஜீ.ஜீ.பொன்னம்பலம், பா.உ.*
*(கஜேந்திரகுமார் பொன்னம்பலம்)*

### தந்தை குமார் பாணியில் மகன் கஜேந்திரகுமார் அவுஸ்ரேலியா சென்று புலித் தடைக்கு நேரில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

கடந்த வாரம் அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அவுஸ்திரேலியாவின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் சந்தித்தார்.

பிரதமரினதும் முக்கிய அமைச்சர்களினதும் அதிகாரிகள், குறிப்பாக வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்களை அவர் சந்தித்தார்.

முக்கிய விடயங்கள் மற்றும் தற்போதைய அரசியல் நிலை என்பன பற்றி அவர்களிடம் கஜேந்திரகுமார் எடுத்துரைத்தார்.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் அவுஸ்ரேலியா சேர்த்துக்கொண்டிருக்கிறது.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரைவு இது அதிருப்தி தரும் விடயம். நாம் இதை முற்றாக எதிர்நோக்குகிறோம் என்று கஜேந்திரகுமார் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

"அவுஸ் எய்ட்" அமைப்புடனும் சர்வதேச மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான திணைக்கள அதிகாரிகளுடன் உரையாடியபோது தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை அவர் எடுத்து விளக்கினார்.

கடந்த டிசம்பர் 5ஆம் திகதி பொதுத் தேர்தல் தெட்டத் தெளிவாக தேசிய தமிழ்த் தேசிய இனம் தமிழீழ விடுதலைப்புலிகளின் பின்னே தான் நிற்கிறது என்பதை நிரூபித்தது.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான எந்தவித பேச்சுவார்த்தையிலும் தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழீழ வீடுதலைப்புலிகளையே தமிழர் தேசியம் ஏகோபித்து ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அந்த வகையில் அரசும் அவர்களையே தமிழினத்தின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதையும் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் கஜேந்திரகுமார்.

மேலும், தமிழ்க் கட்சி கூட்டமைப்பிற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு அவர்களுடனேயே உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனும் எமது நிலைப்பாட்டிற்குத் தமிழ் மக்கள் தந்த ஆணை இதுவாகும்.

"நடுநிலை நின்று நோர்வேயின் சமாதானத் தீர்வு முயற்சிகளுக்கு ஆதரவு நல்குவதே ஆகும்" என்று தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் கஜேந்திரகுமார்.

அவர் சந்தித்த பலரிடம் அவுஸ்ரேலியா புலிகளைத் தடை செய்த காலகட்டம் தவறானது என்று சுட்டிக்காட்டினார்.

"தடையை மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். அதேவேளையில் சமாதானத் தீர்வு சம்பந்தமான அதன் முன்னேற்றத்தைப் பொறுத்திருந்து பார்க்க விரும்புகிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர் என்று கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

"நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவைத் தருவோம். தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு உந்துசக்தியாக இருப்போம்" என்றும் அவர்கள் உத்தரவாதமளித்தனர். இப்படி கஜேந்திரகுமார் கூறினார்.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள், அவர்கள் எதிர்நோக்கும் உரிமைப் பிரச்சினைகள் பற்றியும் அவர் எடுத்துக் கூறினார்.

இந்த விடயத்தில் தளர்வு நிலை பேணப்படும் வகையில் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அப்போது அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த விடயத்தில் மனிதாபிமான, மனித உரிமைப்பிரச்சினைகளை பேணும் வகையில் சகல முயற்சிகளையும் எடுக்கும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு சந்திப்புக்களிலும் கஜேந்திரகுமார் உரை நிகழ்த்தினார்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடையை நீக்க அரசு முன்வந்திருக்கிறது. இந்தச் சிறப்பான பின்னணியில் வன்னி உள்ளிட்ட வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் மிகமோசமான துயர துன்ப நிலைகள் போக்கப்பட வேண்டும். அவுஸ்ரேலியா வாழ் தமிழ் மக்கள் இது விடயத்தில் தம்மாலான பங்களிப்பை செய்ய வேண்டும் என்று கஜேந்திரகுமார் கேட்டுக்கொண்டார்.

### நியூஸிலாந்து

நியூஸிலாந்திற்கு விஜயம் செய்த கஜேந்திரகுமார் அரசாங்க எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் ஆலோசகர்களையும் சந்தித்தார்.

"இலங்கையரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாராகும் வேளை இது. அவுஸ்திரேலியா தவறான நேரத்தில் புலிகளையும் தடை செய்யப்பட்ட இயக்கப்பட்டியலில் சேர்த்திருக்கிறது.

அதே தவறினை நியூஸிலாந்தும் செய்துவிடக் கூடாது என்று கஜேந்திரகுமார் எடுத்துக் கூறினார்.

நியூஸிலாந்து அரசு இது விடயத்தில் தொடர்ந்து நடுநிலை வகித்து நோர்வேயின் சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்க முழு ஆதரவையும் வழங்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்று உருவாகி சமாதானம் மலர உதவ வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

நியூஸிலாந்து எதிர்வரும் மார்ச் மாதத்தில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மூலம் பற்றி விவாதிக்க இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிடப்பட்டவை ஏற்கனவே சுடர் ஒளி,வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் வெளியாகிய உரைகள்.

(சி34130)

# கொள்கைக்கான தேர்தல் - 2004

## எமது தலைமை தமிழீழ விடுதலைப் புலிகள்; எமது இலட்சியம் தமிழீழத் தாயகம்



**சமூகத்தின் சரிபாதி அங்கமான பெண்களின் தமிழ்த்தேசியப் பிரதிநிதியாய் வருகிறார்........**

இவர் அராலி, வட்டுக்கோட்டையைத் தனது பூர்வீகமாகவும் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை தனது வசிப்பிடமாகவும் கொண்டவர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணியில் சிறப்புப்பட்டமும் கல்வியில் பட்டப்பின் தகைமையும் பெற்றவர்.

முன்னாள் ஆசிரியர் தற்போது அரங்க செயற்பாட்டுக் குழு பெண்கள் பண்பாட்டு மையம் என்பவற்றின் அமைப்பாளராகவும் பணிபுரிபவர்.

பெண்களின் ஆற்றலை வெளிக்கொணர்வது, கல்வியில் பிள்ளைகளை ஊக்குவிப்பது என்பன இவரின் ஆய்வு முயற்சியும் திட்டச் செயற்பாடுகளும் ஆகும்.

கிராமங்கள்தோறும் பெண்கள், குழந்தைகளை வலுப்படுத்தும் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்.

தமிழீழத் தாயகம் எங்கும் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வுகளிலும் பெண்கள் சங்கம நிகழ்வுகளிலும் முன்னின்று உழைத்தவர்.

சமாதானப் பேச்சுக்களில் பெண்களுக்கான உப குழுவின் தமிழப் பெண் பிரதிநிதியாய் இடம்பெற்றவர்.

### எங்களின் பணிகள்

ஆக்கிரமிப்பு யுத்தத்தால் பெண்களும் குழந்தைகளும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் ஆழ்மனப் பிரச்சினைகளும் தேவைகளும் அறியப்படும். அவை உலக அரங்கில் பேசப்படும் நிலைமை உருவாக்கப்படும்.

பெண்களின் தளைகளை நீக்கி ஆற்றலை வெளிக்கொணர்ந்து அவர்கள் தேசநிர்மாணப் பணியில் பெரும் உழைப்பாளர் படையாக ஆக்கப்படுவர்.

தமிழீழத்தின் பிள்ளைகள் கல்வியில் ஊக்கமுடன் செயற்பட வழிசமைக்கப்படும்.

இடம் பெயர்ந்தோர் தமது ஊர்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான உழைப்பு ஊக்குவிக்கப்படும்.

எங்கள் நிலமும் எங்கள் கடலும் எமக்கே என்று ஆக்கி எங்கள் ஊர் அனைத்தும் மீளக்கட்டியெழுப்பப்படும்.

**எல்லாவற்றிற்கும் மேலாக**
**ஊர்ஊராக பொங்குதமிழ் வண்டி வரும்.**
**ஒரு பெரும் தமிழ் மனிதச் சுவரைக் கட்டி எழுப்பும்**

**சுதந்திர வேட்கையில் மன உறுதி கொண்ட மக்கள் கூட்டம் ஒன்று எழும்!**

**அது ஒரு மனிதச் சுவராகத் தொழிற்படும்.**

**தமக்குள்ளே ஊடுருவ முயலும், சதி முயற்சிகள், சீரழிவப் பண்பாடு என்பனவற்றைத் தடுத்து நிற்கும்.**

**தமிழர் தாயகத்தில் ஒரு பெரும் தேசிய எழுச்சி பொங்கும்.**

## பத்மினி சிதம்பரநாதன்

**நேற்றுவரை மின்னாது முழங்காது**
**தேசத்தின் விடுதலைக்கு வலுச்சேர்த்தவர்.**




## தாய் நிலத்துக்கும் விடுதலை
## தமிழ்ப் பெண்களுக்கும் விடுதலை

**யாழ்.மாவட்ட மகளிர்விளையாட்டுக்கழகம்.**



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004

## யாழ்ப்பாண மாவட்டம்

**அன்புக்குரிய தமிழ்ச் சகோதர சகோதரிகளே!**

- விடுதலையை நாடி நிற்கும் தமிழினம் ஒரே கொடியின் கீழ் அணிதிரண்டு நிற்கின்றது என்பதை மீண்டும் உலகிற்கு எடுத்துக் காட்ட.....
- வியத்தகு இராணுவ பலத்துடன் திகழும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பலத்தை மேலும் வலுப்படுத்த.....
- தேர்தலைத் தொடர்ந்து பதவிக்கு வரும் சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மீண்டும் நடத்தப்போகும் பேச்சுவார்த்தைகளில் நீதியான அரசியல் தீர்வை வலியுறுத்திட......
- தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் துரோகக் கும்பல்களுக்கு தமிழ் மண்ணில் இனிமேல்இடமில்லை என்பதை உறுதிப்படுத்த......

**தமிழினத்தின் ஒற்றுமை அணியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்.**

**உங்கள் வேட்பாளர் பிரபல சட்டத்தரணி ந.சிறீகாந்தாவின் இலக்கம் 2இற்கு மேலே புள்ளடி இட்டு**

**உங்கள் விருப்பு வாக்குகளில் ஒன்றை அவருக்கு அளியுங்கள்.**

| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | [வீடு] | X | 2 |
|---|---|---|---|

- யாழ்.மாவட்ட மக்கள்.

---

## பாராட்டுகின்றோம்

**N.E.I.** நல்லூர்/கொக்குவில்

எமது கல்வி நிறுவன ஆசிரியர்களான

- ★ பிரம்மஸ்ரீ S.சசிகுமார சர்மா - கலைமாணி (சமஸ்கிருதம் சிறப்பு)
- ★ திருமதி T.விஜயகௌரி - நுண்கலைமாணி (நடனம் பரதம்)
- ★ திரு.N.சத்தியவேந்தன் - கலைமாணி (தமிழ் சிறப்பு)
- ★ திரு.K.மனோரஞ்சன் - கலைமாணி (தமிழ் சிறப்பு)

ஆகியோர் யாழ். பல்கலைக்கழகத்தின் 2004 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவதையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(30084)(34-24) நிறுவன சமூகம்.

---

தோட்டக்காணி உடன் விற்பனைக்கு

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கில் 5 பரப்பு செம்மண் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:

திரு. N.குணபாலன்
அம்பலவாணர் வீதி,
திருநெல்வேலி தெற்கு
(பலாலி வீதி),
யாழ்ப்பாணம்.

திருமதி S.சுரேஸ்
இல.30, 4/2, றிட்ஜ்வே பிளேஸ்,
பம்பலப்பிட்டி. 0777 588225.

(34131)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி தனிகாசலம் கஜிதா (B.Sc.)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 23ஆவது பட்டமளிப்பு விழாவிலே எங்கள் அன்புநிறை நண்பி செல்வி தனிகாசலம் கஜிதா அவர்கள் B.Sc. பட்டம் பெற்றதனையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(30056)(26-24-16)

அன்புடன் வாழ்த்தும்:
பூவா குடும்பத்தினர்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் பொதுக்கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற

**குனேஸ்வரி கனகசபாபதி**

அவர்களைப் பாராட்டுவதோடு, மேலும் பல சிறப்புகளைப் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சலுஜா குடும்பத்தினர்.

உடுப்பிட்டி. (30091)(34-16-24)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மானியூர் பெற்றெடுத்த மா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவியான செல்வி

**கணேசு புவியரசி**

அவர்கள்

தமது பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்திசெய்து 27.03.2004 அன்று முகாமைத்துவ மாணி எனும் பட்டத்தைப் பெற்றமைக்காக அகமிக மகிழ்வதோடு, மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்

மோகனராஜ் (சமாதான நீதிவான்)
குடும்பத்தினர்.

*16/16, சீனியர் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (30166) (24-16)

---

# மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

ஈழத்தமிழ்த் தேசியத்தின் வெற்றியைக் குறிக்கவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குகள் குவிக்கவும்

**"கொள்கைப் பிரகடனக் கூட்டம்"**

இடம் : காரைநகர் கதிர்காமசாமி கோயில்அருகில்

காலம் : இன்று 28.03.2004 மாலை 7.00 மணிக்கு

**தமிழீழ இசைக்குழுவின் இன்னிசைக்கானங்கள் இடம்பெறும்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து உரையாற்றுவர்.

| வெற்றியின் சின்னம் வீடு<br>விடுதலைச் சின்னம் வீடு | [வீடு] | X |
|---|---|---|


## காரைநகர் வாழ் மக்கள்



நெஞ்சம் மறவாத

இனிய பாடல்களை கேட்டு மகிழுங்கள்

Original C.D க்களும் ஒடியோ கசெட்களும் இப்பொழது விற்பனையாகின்றன.



Sa re Ga ma

Director : **Mani Ratnam**
Music : **A.R. Rahman**
Lyrics: **Vairamuthu**

**AAYITHA EZHUTHU**

Marketed & Distributed by

**MAHARAJA ENTERTAINMENT (PVT) LTD**

330, T. B. Jaya Mawatha, Colombo 10. Tel: 4608800, 2672425 Fax: 2672426, E-mail: me@maharaja.lk

VIBRATIONS Available at

467, UNION PLACE, COLOMBO 02. TEL: 2672427 E-MAIL: vibrations@maharaja.lk
CD WORLD COLPETTY 2581412, CD WORLD WELLAWATTE 2554481, ODEL UNLIMITED UNION PLACE 4722200,
STAR VIDEO BATTICALOA 0652225939, EYE VIDEO COLOMBO 11 2387575, CD HOUSE COLOMBO 13 2399822,
MUSIC WORLD LIBERTY PLAZA 0777355148, VICEO VIMALAN JAFFNA 021-2222466
PRO SOUND MAJESTIC CITY 4513378, KEELLS SUPERMARKET LIBERTY PLAZA 2577616,
KEELLS SUPERMARKET CRESCAT BOULAVARD 5517417, KEELLS SUPERMARKET WATTALA 2936838,
LAUGFS SUPERMARKET HAVELOCK ROAD 25364115
LAUGFS SUPERMARKET RAJAGIRIYA 2577823, LAUGFS SUPERMARKET WELLAWATTE 5557771
PALAYAKAT MEGA STORE KANDY 0812223654, & OTHER DEALERS OUTLETS

**Buy Online : www.me.lk**
100 % Secured Payment Gateway - Free Delivery Island-wide

# எச்சரிக்கை

கொழும்பு 2, டோஸன் வீதி, 146ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள **மகாராஜா என்டர்டெயின்மன்ற்ஸ் (தனியார்) நிறுவனம் (MEPL)** மட்டுமே RPG **குளோபல் மியூசிக் லிமிட்டட்டின்** விநியோக உரிமையைக் கொண்டுள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம். **இலங்கை, மாலைதீவு** ஆகிய பிராந்தியங்களுக்காக **சரிகம இந்தியா லிமிட்டெட்டின்** ஏகபோக அனுமதியைக் கொண்டுள்ள RPG குளோபல் மியூசிக் லிமிட்டட், மணி ரத்தினத்தினம் நெறிப்படுத்திய **"ஆய்த எழுத்து"** என்ற திரைப்படத்திற்காக வைரமுத்துவின் கவிதைகளிலும் ஏ.ஆர். ரகுமானின் இசையிலும் உருவான **பாடல்கள் மற்றும் ஒலிப்பதிவுகளைக் கொண்ட ஓடியோ கசெட்டுகள் மற்றும் கொம்பக்ட் டிஸ்குகளை** (CD's) வெளியிட்டுள்ளது.

இப் பாடல்கள் / ஒளிபபதிவுகளின் அதிகாரமற்ற பாவனை, பிரதியெடுத்தல், எடிட்டிங், காட்சியிடல், வாடகைக்கு விடுதல், பரிமாற்றம் செய்தல், கடனுக்குக் கொடுத்தல், வெளியிடுதல், பொது அரங்கில் சமர்ப்பித்தல், ஒலிபரப்புதல் என்பன கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

ஆகவே, இந்தத் திரைப்படத்தின் பாடல்கள்/ஒலிப்பதிவுகளைக் கொண்ட ஓடியோ கசெட்டுகள் மற்றும் கொம்பக்ட் டிஸ்குகளை (CD's) (அல்லது அவற்றின் பாடல் / ஏதேனுமொரு பாடல் / பகுதியை தொகுத்தல் அல்லது மீளக் கலவை செய்தல் உட்பட) **சரிகம இந்தியா லிமிட்டெட்டின் ஆக்கியோன் உரிமைகளுக்கு முரணான விதத்தில்** களஞ்சியப்படுத்துதல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வழங்குதல், வாடகைக்கு விடுதல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், தயாரித்தல், மீளத்தயாரித்தல், ஊக்குவித்தல், ஒலிபரப்புதல் அல்லது தொலைகாட்சியில் பாவனை செய்தல் ஆகிய செயல்களில் ஈடுபடாதிருக்கும்படி எச்சரிக்கிறோம் அப்படி ஈடுபட்டால் அல்லது **MEPL நிறுவனத்தின் ஏகபோக சந்தைப்படுத்தல் உரிமைகளை மீறி நடந்தால் அச் செயல்களைப் புரிவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பொருள் களஞ்சியப்படுத்துவோர், விற்பனையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், வானொலி நிலையத்தினர், தொலைக்காட்சி நிலையத்தினர், செலூலர் தொலைபேசி சேவையினர் ஆகியோருக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கின்றோம்.**

மகாராஜா என்டர்டெயின்மன்ற்ஸ் (தனியார்) நிறுவனம்
இல. 146, டோஸன் வீதி, கொழும்பு 2.
தொலைபேசி: 011 4608800, ∴பெக்ஸ்: 011 2672426
ஈ-மெயில்: me@maharaja.lk, வெப்சைட்: www.me.lk

Sa re Ga ma  RPG  ENTERTAINMENT

## கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

ஜேர்மனியில் இருந்து கடந்தவாரம் வந்திருந்த நாகலிங்கம் பத்மநாதன் என்பவரின் ஜேர்மனிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், விசா கார்ட்டுகள் மற்றும் பல ஆவணங்கள் அடங்கிய பை 26.03.2004 அன்று தொண்டமனாறு, செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவறிவிட்டது. இந்தஆவணங்கள் இல்லாததால் மீண்டும் திரும்பிச்செல்ல முடியாதுள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவுகூர்ந்து பின்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். **மிகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

**ஈ.சிவப்பிரகாசம்**
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
**T.P.: 621-4590717.**

(30130)(34-19)

## BRIGHT Training Centre

**P.O.Box - 162, S - 27, First Floor, Colombo Central Super Market Complex, Colombo - 11. T.P. 2434770, Fax 2434770**

**தபால் மூலம் கல்வி நெறிகள்**

பதினைந்து வருடகாலமாக தபால் மூலம் கல்வி நெறிகளை போதித்த எமது நிறுவனம் இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சி அளித்து மாணவர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

**90 Days Spoken English & Singhala / 90 நாட்களில் ஆங்கில/சிங்கள பேச்சுக்கலை**



மூன்றே மாத காலங்களில் ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க உளவியல் முறையில் மாணவர் உவந்து ஏற்கும் முறையில் தயாரிக்கப்பட்ட கல்விநெறி. இப்பாடநெறியை பயிலும் மாணவர்களுக்கு Diploma in Spoken English & Spoken Singhala நற்சான்றிதழ் வழங்கப்படும்.

**Nursery Teachers Training Course (NTTC)**
**பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி**



ஆறே மாத காலத்தில் பாலர் முன் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி தபால் மூலம் போதிக்கப்படும். இந்நெறியை மேற்கொள்வோர் பாலர் - முன்பள்ளிக் கல்லூரியை நடாத்துவதற்கும் சுயதொழிலாக பாலர் முன்பள்ளி ஆசிரியர் ஆகவும் கடமையாற்ற முடியும். இப்பாடநெறியை திறம்பட முடிப்போர்க்கு Diploma in Nursery Teachers Training Course நற்சான்றிதழ் வழங்கப்படும்.

**Method of Computerised Book - Keeping & Accountancy (MCBA)**
**கம்பியூட்டர் மூலம் கணக்குப் பதியும் முறையும் கணக்கீடும்**



ஆறு மாத காலத்தில் கடைக்கணக்கு எழுதும் முறையும், Store - Keeping, Book - Keepers & Account Clerk ஆகிய தொழிலை மேற்கொள்ளக்கூடிய கல்வி நெறியை மேற்கொள்வது மூலம் Diploma in Method of Computerised Book - Keeping & Accountancy நற்சான்றிதழையும் பெறமுடியும். மேலதிக விபரங்களுக்கு மேற்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE

**BRIGHT Future in your Hand**

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா பரராஜசிங்கம்

கோண்டாவில் மேற்கு, நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற துரையப்பா சீதாலக்ஷ்மி (சுவத்திரை) ஆகியோரின் அன்பு மகன் துரையப்பா பரராஜசிங்கம் வெள்ளிக்கிழமை (26.03.2004) சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் (பாப்பா) அன்புக் கணவரும் கமலாம்பிகை, இந்திராணி, விஷஜமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தியாகரத்தினம், நவரத்தினம், தியாகராசா, விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தயா, கலா, லதா (அல்லி), ரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தவடிவேல், ஈசன், தட்சணாமூர்த்தி, வைகுந்தவாசன் ஆகியோரின் மாமனாரும் சரண்யா, பமிலா, தனுசன், தனுசிகா யதுசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப்பிள்ளையார் கோயில் லேன்,*
*உரும்பிராய் வடக்கு.*

(30158)(23-19-37)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி செல்வரத்தினம் சிவபாதசுந்தரம்

திருமதி செல்வரத்தினம் சிவபாதசுந்தரம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அதிபர் சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும் சிவச்செல்வி, குகசோதி சச்சிதானந்தசிவம், மீனலோசனா, யோகாநந்தசிவம், பங்கயற்செல்வி ஆகியோரின் தாயாரும் சிவலோகநாதன், குகாவிஜயநாயகம், மனோகரி, சிவசங்கரன், மஞ்சுளா, பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-03-2004) ஞாயிற்றுக் கிழமை வெள்ளவத்தை, பாமன்கடை ஒழுங்கை, இலக்கம் 36 இல் உள்ள இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.00 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

(சி34123)(23-19-37)

தகவல்:
**குடும்பத்தினர்.**